padippakam

# வானொலிக் கவிதைகள்



கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam


| | | |
|---|---|---|
| நூல் | : | வானொலிக் கவிதைகள் |
| ஆசிரியர் | : | கவிஞர் கந்தையா இராஜமனோகரன் |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2034<br>ஆடவை (ஆனி)த் திங்கள் |
| அச்சுப்பதிப்பு | : | வாசன் அச்சகம், இலண்டன் |

| | | |
|---|---|---|
| Title | : | Vaanolik Kavithaikal |
| Author/Publishers | : | Poet Kandiah Rajamanoharan |
| First Published | : | June 2003 |
| Language | : | Tamil |
| Printed by | : | Vasan Printers, London |

ISBN No : 0 9545296 2 6


---

கவிஞரின் பிற நூல்கள் : நாற்று – 2003
தமிழிசைப் பாடல்கள் – 2003

படிப்பகம்

padippakam

# வானொலிக் கவிதைகள்

கவிஞர் கந்தையா இராஜமனோகரன்
சுதுமலை, தமிழீழம்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# அணிந்துரை

அன்பு நிறை இராஜமனோகரன்,

ஐ.பி.சி. தமிழின் பிரசவகளத்திலே தாங்கள் கம்பீரித்த கவிதைக் கட்டை மலைப்போடு பிரித்தேன். கண்கள் காதலோடு எழுத்தை வருட நெஞ்சம் கசிவோடு ஐ.பி.சி-தமிழ் தொடங்கிய நாட்களை எனது உள்ளே மூச்சுயிர்ப்பித்தது.

சிறி லங்கா அரசின் வெளி நாட்டுச் செய்தி இருட்டடிப்பாலும் உள் நாட்டுச் செய்தி வக்கிரத் திரிபு படுத்தலாலும் மண்ணில் நிகழும் அரச கொடுமை கரிய உறையிட்டு மறைக்கப்பட்ட வேளையிலேயே காலத்தின் தேவையாக ஐ.பி.சி.-தமிழ் வானொலி பிரசவிக்கப்பட்டது.

சிறி லங்கா அரசின் காடைத்தனத்தால் உருவான தமிழ் அலைவிலே சிக்கிய நம் இனம் உலகம் முழுவதும் சிதறிப் பரந்து ஆங்காங்கே காலூன்றிக் கொண்டிருந்த போது, புலத்தில் உள்ளோர் மண்ணை மறக்கக் கூடாது என்ற அவதி உணர்வோடும் புலம் பெயர்ந்த தம் உறவுகள் தம்மை மறக்கவில்லை என்பதை மண்ணில் உள்ளோர் நம்பிக்கைத் தெப்பமாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற உறுதி உச்சாடனம் புரியும் உத்தரவாத உணர்வோடும் மண்ணில் வரு நிலை உரைத்து வங்கக் கடலில் சோதியாய்க் கரைந்த தளபதி கிட்டுவின் முன்னைக் கனவை நிறைவேற்றும் தந்தை மகற்காற்றும் பரிவு உணர்வோடும் ஐ.பி.சி. தமிழைத் தோற்றுவித்தோம். ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கிலும் இருபத்திநான்கு மணிச் சேவையோடு உறுதியாக ஒரு காலை அது ஊன்றியது. ஒரு மணி நேர வைகறைக் கூவலாகத் தன் மறு காலை அது மண்ணிலும் அவ்வப்போது ஒஸ்ரேலிய நண்பர் பிரபாகரனின் ஏற்பாட்டோடு அவருடைய இன்பத் தமிழ் வானொலி மூலம் அந்த நாட்டிலும் அது உறவுப் பாலம் பதித்தது.

ஐ.பி.சி.-தமிழ் எய்த கணைகள் பல. அவற்றுள் பிரசவகளம், நெஞ்சூறு கீதம் இன்னோரன்ன சில. இரண்டையும் வழி நடத்த எம்மிடை வந்தவன் நாவரசன். மண்ணிலே தன் தந்தை இளவாலை சைவப் புலவர் செல்லத்துரைப் பேராசான் நிழலில் சைவமும் தமிழும் பயின்றவன். மண்ணில் பாலனாகவே சைவ உபந்நியாச மேடைகளில் உரை உலா வந்தவன். விடுதலை உணர்வு நெஞ்சில் பரவிய பாரதியாய் தன் நாவையும் தமிழையும் விடுதலைக்காய் அர்ப்பணித்தவன். ஐ.பி.சி. தமிழின் சமயப் பிரிவுப் பொறுப்பாளனாக அமர்ந்த நாவரசன் பிரசவகளத்தையும் நெஞ்சூறு கீதத்தையும் தன் இரு கரச் சக்கராயுதமாக ஏந்திக் கவிஞர்களையும் கலைஞர்களையும் கவர்ந்திழுத்தான்.



படிப்பகம்

padippakam


பிரசவ களத்தில் பனிச்சென்று மிளிர்ந்த முன் வரிசைக் கவிஞர்களில் முக்கிய ஒருவர் தாங்கள்! கந்தையா இராஜமனோகரன்!! பிரசவ களம் பிரசவித்த பிள்ளைக் கவிஞரல்லர் தாங்கள். மண்ணிலே அறுபதுகளிலும் எழுபதுகளிலும் இலக்கிய மன்றென்ன சமய மன்றென்ன கவிதை மன்றென்ன பட்டி மன்றென்ன அங்கெல்லாம் ஓடியோடி ஓங்காரித்த நக்கீரக் குரல் தங்களுடையது. ஐ.பி.சி. தமிழ் மூலம் அது மீண்டும் புத்துயிர்ப்போடு ஆர்ப்பரித்தபோது எத்துணை உற்சாகமும் நிறைவும் எமக்கு!

தொலைபேசி வழியே பிரசவ களத்துக்குள் தாங்கள் கொலு வரும்போது நாவரசனின் வரவேற்பில் ஒரு பன்னீர்ப் புத்துணர்வு! தங்கள் இருவரிடையே நடைபெறும் வணக்கமும் வாழ்த்தும் குசல விசாரிப்பும் தனியான கவிதை மடையே! தாங்கள் கவிதை படித்து முடித்து மறு கணமே அந்த படையலின் நேர்த்தியை அதில் உள்ள புதுமையை சத்திய சத்தை வித்துவக் காய்ச்சல் எதுவும் இன்றி நயம் கூறி நயக்கும் நாவரசன், புதிதாய் அரும்பும் கவிஞர்களுக்குப் பார்த்தீரா உமக்கொரு முன்னுதாரணத்தை என்று கற்றானைக் கற்றானே காமுறும் அந்தக் கணங்களை இன்று மனதிலே அசைபோடும்போது இனிய சுகம் ஒன்று இதயத்தில் பிரவாகிக்கிறது. புலத்தில் உயிர்க்க முனைந்த புதுக் கவிஞரை - இளங் கவிஞரை - நாவரசனோடு கூடி ஊக்குவித்த கவிச்செவிலித் தாய்ப் பழமர் தாங்கள்!

பிரசவகளம் வழியாகப் புலத்தையும் மண்ணையும் அளந்தவர்கள் தாங்கள் என்ற போதிலும், ஐ.பி.சி. தமிழுக்குள் தங்கள் கரங்களைப் பற்றி இழுத்து வந்தவர்கள் தங்கள் பாலகர்களே. வணக்கம் ஐ.பி.சி. மாமா நிகழ்ச்சியில் அபிராமியின் கடை வாயில் கிள்ளைத் தமிழ்ப் பால் வடிந்தது. அக்காவும் பேசப் போகிறா அண்ணாவும் பேசப் போகிறார் என்று அப் பாலகி உரிமையோடு கூட்டிவர சிவகாமியும் செந்தூரனும் ஆங்கிலச் சூழலில் பிறந்த அறுத்துறுத்த உச்சரிப்போடு, ஆனால் தேர்ந்த சீரிய தமிழ் வார்த்தைகளோடு பிரசன்னமானவர்கள். ஐ.பி.சி. மாமாவைப் பார்க்கப் பாலறா வாய்ப் பாலர் அழைத்து வந்த அம்மை அப்பனாக எம்மை வந்தடைந்த கொடைச் சுரப்பிகளே, தாங்களும் தங்கள் துணைவி மருத்துவக் கலாநிதி சசிகலாவும் ஆவீர். வானொலியில் அறிவியல் துறைப் பொறுப்பாளராகத் தாங்கள் உடனேயே தேனீப் பணி தொடங்கினீர்கள். புதிய புலத்தில் தமக்குப் புதிதான மொழியில் நோய் அறிகுறி கூறிப் பரிகாரந் தேட முடியாத ஆயிரக் கணக்கான ஐரோப்பியத் தமிழ்ப் பெற்றோர்க்குக் கருணை அன்னை சசிகலாவின் பரிவான உதவி ஆசுவாசம் தந்தது. அரச மருத்துவத் தடையால் அவதியுறும் நம் மண்ணின் மக்களுடைய மருத்துவத் தேவைகளையும் கை மருந்தால் நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை உறுதியை உறவுப் பால நிகழ்ச்சியில் சசிகலா மாதா வழங்கத் தொடங்கியதும் ஐ.பி.சி. தமிழும் ஓர் புதிய ஆரோக்கியப் பணிப் பரிமாணத்தைத் தொட்டது.



படிப்பகம்

padippakam


ஐய இராஜமனோகரன், தங்கள் பிரசவகளக் கவிதைக் கட்டை என் முன்னே பிரித்துப் போட்டுப் படிக்கத் தொடங்கியதும் எனது மனதிலே நினைவு மீண்ட அந்த இனிய நாட்களையும் தங்கள் இருவரதும் ஒப்பற்ற பணியையும் தங்களை எமக்கு அறிமுகக் கொடைபுரிந்த தங்கள் மகவுகளையும் நினைவு கூராமல் இருக்க முடியவில்லை. அந்தப் பசுமை உணர்வுகளை இங்கே பகிர்ந்து கொள்ளாவிட்டால் என் வார்த்தையே வரட்சியாகிவிடும். ஆகவேதான் இந்த நினைவுத் துளிர்ப்பும் பகிர்வும்.

நம் மண் தொடர்பான தங்கள் தீர்மான வழிகாட்டலை எடுத்த எடுப்பிலே இங்கு நினைவு கூராவிட்டால் தர்ம வழுவும் கால வழுவும் என்னைத் தரம் இறக்கி விடும். சமூகத் தொண்டுக்காக அரசியல் வெளிமுகம் காட்டுவது ஒன்று! உள் உறை அரசியல் அபிலாசைக்காகச் சமூகத் தொண்டுப் போர்வை போர்த்திக் கொள்வது இன்னொன்று! தங்களைப் பொறுத்தவரையிலே மண்ணிலே வாழ்ந்த காலை சமூகப் பணியிலே தங்களை கரைத்துக் கொண்டீர்கள். அதே சமயம் அன்றைய காலத்தேவையையொட்டி அன்று எம்மிடையே சீர்மை கொண்டு விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளையும் தமிழ் இளைஞர் பேரவையினரின் செயற்களத்தையும் அலங்கரித்தீர்கள். அபகரிப்பு, அழிவு ஆகியவற்றால் அலைக்கப்பட்ட நம்மினித்தின் ஆற்றாமைக் கட்டத்திலே நாடில்லை நகரில்லை ஊரில்லை வீடில்லை என்று அறுதியிட்டுக் கூறப்பட்ட வேளையிலே சாம பேத தான முனைப்புக்களில் நாம் தோற்றுவிட்ட அன்றைய கட்டத்தில் எமது இனத்தின் இளந் துளிர்கள் பொறுத்தது போதும் என்று தண்ட முனைப்போடு புறப்பட்ட வேளை அரசியலுக்காக மக்களல்ல மக்களுக்காகவே அரசியல் என்ற தங்கள் சமூகத் தொண்டு உணர்வை இனப்பற்று உணர்வைப் புலர்த்தும் வகையில் எடுத்த எடுப்பிலே தங்கள் முதல் பிரசவகளப் பங்களிப்பின் போது தெளிவாகத் தாங்கள் உணர்த்திய தருணத்தில் இதயம் சிலிர்த்தேன். 20.06.1998 பிரசவகளத்தில் தாங்கள் கூறினீர்கள்....

விடுதலை வேட்கை கொண்டு வெந்திடும் மக்கள் யாவர்
வீரராய்த் தீர வேங்கையாய் நாடு காப்போர்

காத்திருந்து தருணம் பார்த்து மொழியப்பட்ட சந்தர்ப்ப வாதப் பசப்பு அல்ல அது! போராட்டத்தில் அரசு வென்றுவிடும் என்ற சப்புக்கொட்டலோடு அவ்வேளைச் சமரசப் பேச்சு வார்த்தைத் தயவு யாசகத்துக்கு ஓடேந்தக் காத்து நின்ற பெருங் கும்பலை நீத்து, உரிமை என்பது இறைஞ்சிப் பெறுவது அல்ல என்று அன்றே உரத்துக் கூவிய அறிவுஜீவி தாங்களே! மண்ணிலே ஆர்ப்பரிக்கும் காண்டீப ஒலிக்குப் புலத்திலே மக்களே ஆரத்தி எடுத்த பிரபலம் தாங்கள்!

செங்களம் ஆடுதல் சிறுத்தைகள் கடன்!



படிப்பகம்

padippakam


எம் கடன் அவர்க்கு ஏதுவாய் இருத்தல்!!

என்று உலகலையும் மக்களுக்கு, குறிப்பாக அறிவுஜீவிகளுக்கு ஈழோபதேசம் ஓதிய கண்ணன் தாங்கள்!

ஓரணிப் பேரணி உறுதிக்கு ஒரு வழி என்று ஒரு வாரம் பறைசாற்றி ஓது கவி என்று அறைகின்றான் நாவரசன்.... பிரசவ களத்தில் குதிக்கிறீர்கள் தாங்கள். நிகழ்ச்சியைச் செவிமடுக்கின்றோம் நாம்... உறுமுகின்றான் கவிஞன்...

ஓரணிப் பேரணி ஊரணி சேரணி
யாரணி தேரநீ பாரணி கூரணி
சீரணி யாரணி தாரணி தமிழணி
போரணி ஓரணி சேரநீ யாரினி...

ஓரணிப் பேரணி(யினுள் நீ) - ஊர்(வாயாக.) (இந்த) அணி(யே நீ) சேர (வேண்டிய) அணி. யார் அணி (ஏ) தேர நீ பார்! ***அணி கூர் (சிறப்பு மிக்க)*** அணி. சீர் அணி - யார் அணி? தாரணி(ந்த) தமி***ழணி*** (யான) போரணி! (அதுவேதான் ) ஓர் அணி! (ஆகவே, ***அவ்வணி***) சேர நீ!
என்று ஆணையிடுகின்றான். அதன் பின், யார் இனி? (எமை வெல்வர்!)

என்று கவிஞன் சவாற் கொடுக்கும் கட்டுகின்றான்!

கேட்டவர்க்கெல்லாம் மறுநாள் தொலைபேசியில் விளக்கம் கொடுத்த எமது நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் அன்று கவிஞனின் கவித்திறனையும் போராட்டத்தில் அவனுடைய நிலைப்பாட்டையும் மக்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருந்ததைப் பார்த்த போது அன்றே நயந்தேன்! இன்றுதான் நவில்கின்றேன்!

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T.R.O.) என்ற தமிழீழக் கருணைக் கரத்தை வலுப்படுத்த ஐ.பி.சி. தமிழ் தொடுத்த மடிப் பிச்சை மன்றாட்டுப் பரிந்துரையின் முன்னோடியாக நாவரசனின் அடுத்தடுத்த பிரசவ களங்கள் முரசம் அறைகின்றன. வருகின்றான் கவிஞன் கந்தையா இராஜமனோகரன்!

பாயிலே ஒன்றாகப் படுத்தவர்கள்
    பஞ்சணை கண்டதும் மறந்துவிட்டோம்!

என்று புலத்துத் தமிழரின் மனச்சாட்சி மீது சாட்டை வீசுகின்றான்.

காயிலே ஒன்றாக மரத்துதித்தோம்



படிப்பகம்

கனிந்ததும் பலதிசை பிரிந்துவிட்டோம்!
வாயிலே ஏதோதோ கூறிவிட்டு
வயிறார உண்டதும் சரிந்துவிட்டோம்!

என்று ஒவ்வொருவரையும் மனம் மறுக வைக்கிறான்.

அடுத்த பிரசவ களத்தில் நாவரசன் சூடேற்ற, கவிஞன் வருகின்றான்.

தாய் அங்கு பிச்சையிலே
தனயன் இங்கு அன்னதானம்!
நோய் அங்கு உச்சநிலை
நோவது யார் இங்கதற்கு!

என்று குமுறுபவன் அடுத்துக் கேட்கிறான்!

பாய் கூட இல்லாமல்
படுப்பதங்கு நிலந்தொட்டு!
நாய் கூடப் பஞ்சணையில்
நம் வீட்டில் இங்கிருக்கும்!

என்று புலத்து தமிழரின் மனச்சாட்சியை இடிக்கின்றான்.

வணக்கம் ஐ.பி.சி. மாமா-மழலையர் அணி, நெஞ்சூறு கீதம்- பாவலர் அணி, பிரசவகளம்-கவிஞர் அணி என்பவற்றோடு செய்தியும் செவ்வியும் அலசலும் சேர... ஒன்று திரண்டு ஆர்த்தெழுந்து ஆரோகணிக்க ரீ.ஆர்.ஓ. நிதி திரட்டல் உச்சம் தொட்ட ஆண்டு! அலையும் இனத்தின் ஊடகம் ஒன்று தனது சமுதாயப் பணியைப் பொறுப்போடு விரிவாக்கம் செய்த வளர்ச்சி அது. அதிலே கூடிப்புரிந்த தங்கள் பங்குக்காய் நன்றி கூறுகின்றேன்.

திலீபன் நாள் வருகின்றது. பிரசவகளம் முரசம் கொட்டுகிறது. தாங்கள் வருகிறீர்கள். திலீபனை மட்டும் காணவில்லைத் தாங்கள்! முதலில் தற்கொடை புரிந்த அத்தனை போராளிகளையும் காண்கிறீர்கள்:

தன்னலம் அற்றது தன்னைப் பிறருக்காய்
மண்ணிலே அழிப்பது மைந்தரும் தமிழின்
பெண்களின் வீரரும் போரிலே தம்மை
மண்ணிலே இணைப்பது மண்விடுதலைக்கு.

என்று புது வேதம் கூறுகின்றீர்கள். பின்...

நீதி கேட்டிட நியாயம் துலங்கிட

நீதி தேவனாம் இயமனைத் தழுவியே!

தியாக வேள்வியில்(த்) தீயாய் மாறியே
அராஜகம் தன்னை அழித்திடல் தியாகமே!

என்ற வரைவிலக்கணம் கூறி, பின் திலீபனைத் தாங்கள் தொழுததை நான் கேட்கவில்லை, தங்கள் கவிதை எம் பிள்ளை கிட்டுவின் நினைவுப் பிசைவை உசுப்பிவிட என் காதடைத்தது.... மீதி கேட்கவில்லை.... அசட்டையல்ல. எனினும் கவனக் கலைப்புக்காய் மன்னித்து விடுங்கள்.

அன்பு இராஜமனோகரன் நான் நீள எழுதிக் கொண்டே போகலாம்.... வேண்டாம். ஆனாலும் முகவுரை எழுதச் சொன்னீர்கள்.... கடிதமாகவே வந்து விட்டது. அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.

நன்றியுடன்

ஏ. சீ. தாசீசியஸ்
பிரித்தானியா



படிப்பகம்

padippakam



# வாழ்த்துக் கவி

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

என்ற திருமூலர் திருமந்திர வாசகத்தைத்
தன் வாழ்வின் யாசகமாய்க் கொண்ட
திரு இராஜமனோகரன் அவர்கள்
வானொலிப் பிரசவகளத்தினூடாக
உள்ளம் அறிமுகமான தமிழ் உறவு.

பிரசவகளம் வானொலியில்
கருப்பெற்று உருப்பெற ஊற்றாயிருந்து
எனக்கு உரமூட்டியவர்
பேராசான் தாசிசியஸ் அவர்கள்.

அவர் பாய்ச்சிய நீரின்
முதற் பிரசவகளக் குழந்தை விடுதலை.
அந்த விடுதலைக் கருவை
முதலில் கவிப்பிரசவமாய் தந்து
பிரசவகளத்துக்கு அணிசேர்த்தவர்
திரு இராஜமனோகரன் அவர்கள்.

நரம்புகள் இருந்தும்
கவி வரம்புக்குள் நின்று
உரமேற்றும் மரபுக்கவி உரைக்கும்
திரு இராஜமனோகரன் அவர்கள்,
ஓர் வழியில் ஒற்றுமையாய்
தமிழன் விழிக்க வேண்டுமெனும் விருப்புடையவர்.

ஆன்மவிடுதலை வேட்கை கொண்டவர்
ஆனாலும் மூடநம்பிக்கைகள்
களையப்பட வேண்டுமென்பதிலே
உறுதி கொண்டு
பகுத்து அறிந்து ஆய்ந்து
கவியுரைக்கும் போக்குடன் வாழ்பவர்.

அவரின் பிரசவகளக் கவிதைகள்
நூலுருப் பெறுவதிலே
மட்டற்ற மகிழ்வு கொள்கிறேன்.



படிப்பகம்

padippakam


புலம் பெயர் வாழ்வில்
பணமும் பகட்டு வாழ்வும்
செல்வாக்கும் இருந்துவிட்டால்
படைப்புக்கள் எதையும்
எப்படியும் படைத்து
அச்சிட்டு வெளியிடலாம்
என ஆக்கங்கள் வெளிவருகையிலே,

ஆக்கபூர்வமாக சொல் வாக்குக்கொண்டு
நூலுருப் பெறத் தகுதியுடைய
தன் பிரசவகளக் கவிதைகளைத்
தொகுத்துத் தரும் இம்முயற்சி
புலத்து வாழ்வில் நிலைத்து நின்று
படைப்பின் இலக்கணம் பகர
உளமார வாழ்த்துகின்றேன்.

செவிக்குத் தேன் பாயும் கவிக்கு அழகெல்லாம்
புவிமிசை மெய்யுரைத்தல் உரைத்தபடி காத்தல்!

அன்புடன்

செல்லத்துரை நாவரசன்
பிரித்தானியா



படிப்பகம்

padippakam


# வாழ்த்துரை

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

சென்ற நூற்றாண்டின் முற்கூறுகளிலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கண்ட ஆக்கபூர்வமான இனிய கனவுகளில் இதுவுமொன்று. அந்த இனிய கனவை நனவாக்குவதில், பல்வேறு காரணிகளாலே புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஈழத்தமிழருக்கும் கணிசமான பங்குண்டு. அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, சுவிற்சிலாந்து, பிரான்சு, யேர்மனி முதலிய நாடுகளிலே தத்தம் பொருள்வளத்தை வளர்ப்பதை முதன் நோக்கமாகக் கொண்டு இயந்திர கதியில் இயங்கினாலும் கூட நாம் தமிழர் என்னும் இனிய முக த்திரையைக் கிழித்துவிட்டு அந்தந்த நாட்டு அநாசாரங்களை ஆசாரங்களாக எண்ணி மயங்கி வாழ்ந்தாலும்கூட ஒளி படைத்த கண்ணினராயும் உறுதி கொண்ட நெஞ்சினராயும் தெளிவுபெற்ற மதியினராயும் வாழ்ந்து நலம்பல செய்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்கள் ஈழத்தாயகத்தை மறவாதவர்கள். அந்தத் தாயகம் எவர்க்கும் அடிமையாகாத சுதந்திர பூமியாக இருக்க வேண்டும் என்பதை மறவாதவர்கள். தமிழ் மொழியின் உன்னதத்திற்கு உயிர் கொடுக்கும் ஆக்க முயற்சிகளை மறவாதவர்கள். அவர்களில் ஒருவருடைய குரல் கேட்கிறது:

ஈழம் வடக்கில் இசைந்த யாழ்ப்பாணம்
இலங்கும் ஓரூர் இனிய சுதுமலை
கோலம் கொள் கவி இராச மனோகரன்
கொண்டது வாழ்வு இன்றிங் கிலாந்து

பதினான்கு ஆண்டு காலம் இங்கிலாந்தை வாழிடமாகக் கொண்ட கவிஞர் இராசமனோகரன் எல்லா வகையிலும் பண்பாடு மிக்க நல்லதோர் தமிழனாகவே வாழ்கின்றார். தமிழும் சமயமும் அவர்தம் இரு கண்கள். அந்த இரு கண்களும் கூர்மையான பார்வை கொண்டவை.

இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவனாக இருந்து, இளம் எழுத்தாளரின் ஆக்கங்களை வெளியிட்டும் இலண்டனிற்குச் செல்லும் புகழ் பூத்த எழுத்தாளரைக் கௌரவித்தும் தமிழோசை பரவும் வகை செய்து வருகின்றார்.

இங்கிலாந்திலே பிறந்து வளரும் தமிழ் தெரியாத தமிழ்க் குழந்தைகளுக்கு முறையாகத் தமிழ் வகுப்புக்கள் நடாத்தி அரிய



படிப்பகம்

padippakam


தொண்டு செய்து வருகின்றார். இதுவே தமிழோசை பரவும் வகை செய்யும் பெருந் தொண்டாகும்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சஞ்சிகையான கலசம் ஊடாகச் சைவ சிந்தாந்தத்தைப் பாடமாகப் படிப்பித்து வரும் இவருடைய சேவை போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இவற்றைவிட அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ஐ.பி.சி.) தமிழ் ஒலிபரப்பிலே முன்னர் பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தவர் இப்போ சனிக்கிழமைகளிலே மஞ்சரி என்னும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார். அது சமூக மஞ்சரியாக மலர்கின்றது. ஒன்றுவிட்டு ஒரு சனி, வைத்தியக் கலாநிதியும் தமிழ்ப் பற்று மிக்கவருமான தன் துணைவியாரோடு இணைந்து மருத்துவ மஞ்சரியாக நிகழ்ச்சியை நடத்துகின்றார்கள். அவ்வப்போது தமிழ்த் தொலைக்காட்சியிலும் தமிழ் சம்பந்தமான நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றார். இவையெல்லாம் கவிஞர் இராசமனோகரனின் தனி மனித முயற்சிகளே. இம்முயற்சிகள் யாவற்றோடும் இவர் ஒரு முழுநேரப் பொறியியலாளராகக் கடலின் கீழான பெற்றோலியக் கட்டுமானத் துறையிலே பணி புரிந்து வருகின்றார்.

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்று போற்றுவார்கள். கவிஞர் இராசமனோகரனின் குடும்பமும் அத்தகையதே. கவிஞரது துணைவியார் மனைத்தக்க மாண்புடையவர். சிறந்த வைத்திய கலாநிதி. கணவனைப் போலவே தமிழுணர்வும் தமிழார்வமும் மிக்கவர். மகனான செந்தூரன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலே இயற்கை விஞ்ஞானத்துறை மாணவனாகப் பயில்கின்றார். இவர் வேய்ங்குழல் அரங்கேற்றத்தை முடித்து மிருதங்க அரங்கேற்றத்திற்கு ஆயத்தமாகி வருகின்றார். மூத்த மகளான சிவகாமி வயலின் அரங்கேற்றம் முடித்துள்ளார். இளைய மகள் அபிராமி வீணை பயின்று வருகின்றார். பிள்ளைகள் மூவரும் நான்காண்டுகளுக்கு முன்னரே பரதநாட்டியத்தை அரங்கேற்றி முடித்துள்ளனர். மூவரும் தமிழிசை பயின்று வருகின்றனர். இவை யாவற்றுக்கும் அடிப்படையான தமிழ் மொழியையும் இவர்கள் கற்று வருகின்றனர். இவ்வாறு தமிழுணர்வும் தமிழ்க்கலையார்வமும் சைவநெறிப்பற்றும் நிறைந்த குடும்பம் ஒன்றினை நெறிப்படுத்தி வளர்க்கும் தலைவனாக விளங்கும் இராசமனோகரன், புலம் பெயர்ந்து வாழும் பல்லாயிரம் குடும்பங்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் வாழ்கின்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே சென்ற நூற்றாண்டின் அறுபதுகளிலே தமிழாசிரியனாகப் பணி புரிந்த காலத்தில், இராசமனோகரன் மாணாக்கனாகக் கல்வி கற்று வந்தார். எல்லாப் பாடங்களிலும் திறமையும் குறிப்பாகத் தமிழ் மொழி, இலக்கியம், சமயம் என்பவற்றிலே விசேட திறமையும் காட்டினார். தமிழ் இலக்கியத் துறையில், சிறப்பாகக் கவிதை



படிப்பகம்

padippakam



புனைவதிலே வல்லவராய் விளங்கினார். இவரது படைப்பாற்றலை, புலப்பெயர்ச்சிக்கு முன் புலப்பெயர்ச்சிக்குப் பின் என வகுத்து நோக்கலாம். முன்னையது நாற்று என்னும் கவிதைத் தொகுப்பாய் அமைவது. பின்னையதின் ஒருபகுதி வானொலிக் கவிதைகள், தமிழிசைப்பாடல்கள் என இரண்டாக வெளிவருகின்றன. மற்றப்பகுதி விரைவிலே பிறிதோர் தொகுப்பாக வெளிவரும். இப்போ வெளிவரும் மூன்றும் இராசமனோகரனின் படைப்பாற்றலின் சாட்சியாக விளங்குவன.

ஒரு காலகட்டத்திலே இராசமனோகரனின் தமிழாசிரியனாய் இருந்தமையை எண்ணி உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு அவரை வாழ்த்துகின்றேன். தமிழோசை உலகெலாம் பரவும்வகை செய்யும் அவரது முயற்சிகள் மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

பண்டிதர் சு. வேலுப்பிள்ளை

நாவற்குழி
தமிழீழம்



படிப்பகம்

padippakam


# வானிலே ஒலிக்காதவை

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

என் அன்பிற்குரிய தமிழ் உறவுகளே,

கவிஞர் என்போர் யாவர்? ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றாலே தம் பகுத்தறிவின் துணையோடு அறிந்தவற்றை உள்ளம் உணர்ந்தவாறு ஒழிவு மறைவின்றி உரைப்பவர். இவ்வாறு உரைக்கும்போது அவர்களோடு ஒன்றிய பலரும் சேர்ந்து மகிழ்வர் - சிலிர்ப்பர் - அழுவர் - கொதிப்பர். ஆனாலும் கவிஞர் என்போர் கற்பனைவாதிகள், கவிதைகள் யாவும் கற்பனையிலே பாடபட்டவையே என்றும் சிலர் கூறுவர். பாம்பின் கால் பாம்பே அறியும் என்பது போலே ஒருவருடைய கவிதைகளை ஏனைய கவிஞரே நன்கு உணர வல்லார். தமிழராகிய நாம் இவ்வகையிலே கொடுத்து வைத்தவர்கள். ஏனெனில் எம்மிலே கவிஞர்கள் பலர் இருக்கின்றனர். சிலர் கவிதை எழுதாவிட்டாலும் கவியுளம் படைத்தவர்கள். இந்த நிலை ஈழத்தவராகிய எம்மிடம் மட்டுமல்ல. தமிழ் நாட்டவரிடமும் மிகவும் உண்டு. அரங்கின் முன்னாலே பார்வையாளர்களாக ஐயாயிரம், பத்தாயிரம் என எம் உறவுகள் இருப்பினும் அத்தனை பேரையும் கண்ணீர் உகுக்க வைத்துக் குலுங்கிச் சத்தமிட்டு அழவைக்க வல்லவை கவிதைகள். 1976 இலிருந்து 1979 வரை இதனைத் தமிழ்நாட்டிலே முழுமையாக அனுபவித்தவன் யான். அதிலும் 1977 ஆம் ஆண்டின் இனப்படுகொலையின் பின்னர் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் மலையாளம் (கேரளா), தெலுங்கு (ஆந்திரா) ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளிலும் இவ்வாறான அனுபவங்களை மிகவும் பெற்றவன். தமிழ்நாட்டின் அன்றைய அரசியற்றலைவர்களோடு சேர்ந்து மேடையேறிய தன்மை நாம் எண்ணிப் பார்க்க முடியாதளவு பார்வையாளர்களைத் தந்தது.

கவிதைகள் கற்பனையுமல்ல. கவிஞர்கள் பொய் பேசுபவர்களுமல்ல. காதல், வீரம் என எதுவாகவிருப்பினும் கண்களிலே கண்டவற்றை உணர்ந்தவாறுரைப்பர்கள் கவிஞர்களே.

இந்நூலிலுள்ள கவிதைகள் முழுவதுமே அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரசவகளம் என்னும் நிகழ்ச்சியிலே வானலையினூடே உங்கள் காதுகளை அடைந்தவையே. உலகத் தமிழரை ஓரணியாக்கி அவர்களுக்கு நிலத்தின் உண்மைச் செய்திகளைக் கொடுக்கவென அமைக்கப்பட்ட ஒலி ஊடகமே ஐ.பி.சி. எனப்படும் இந்த அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். இதில் 20.06.1998 அன்று பிரசவகளம் நிகழ்ச்சி ஆரம்பமானது. முதலாவது தலைப்பு விடுதலை. இதிலே முதலாவது கவிஞன் யானே. அன்றிலிருந்து எழுதப்பட்ட



படிப்பகம்

padippakam


அத்தனை கவிதைகளையும் சேர்த்து வைத்து வந்துள்ளேன். இடையிலே தொழில் காரணமாக இத்தாலி, பிரான்சு எனவும் விடுமுறைகளிலே இடையிடையே பலவிடங்களுக்குமென வெளியே இருந்தமையாலே சில பிரசவ களங்களிலே பங்கு கொள்ள முடியவில்லை. எனினும் இங்கு அறுபத்தொன்பது கவிதைகளைத் தந்துள்ளேன்.

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தாய் தமிழ். தந்தை திரு தாசீசியஸ் அவர்கள். இவர் ஓர் உன்னதமான கலைஞன். அதனாலே இவர் மனம் கண்ணாடி போன்றது.... அடுத்தது காட்டும் பளிங்கு! நாம் சிரித்தாற் சிரிப்பார். அழுதால் அழுவார். கண்ணாடி தானே இலகுவிலே உடைத்தும் விடலாம். ஆனால் ஒரேயொரு வேறுபாடு.... உடைத்தவரை மறந்தும் விடுவார். இதிலே அதிசயமெனவும் ஏதுமில்லை. ஔவைப்பாட்டியே கூறுகின்றாள்...

கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர் கிழிய எய்த வடுப்போல் மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம்.

இவர் இறுதி வகையினர். ஓர் உன்னதமான கலைஞனின் - கவிஞனின் - அணிந்துரை இங்கு மிகவும் பொருத்தமானது. மேலும் எனது படைப்புக்களை ஆக்கி இட்டவுடன் சுவைத்த அறிஞருங் கூட. எனவே அவர் தந்த அணிந்துரை அப் பெயருக்கேற்ப அணி செய்யும் ஒன்றானது.

தமிழ் என் தாய். அதனாலே திரு செல்லத்துரை நாவரசன் எனக்கொரு தம்பி. 1998 இலே அறிமுகமானாலும் அவ்வளவு ஈடுபாடு. காரணம் என்ன தெரியுமா? பலவகையிலும் எனது பாதையிலே பயணஞ் செய்பவன். கவிக்களத்திலே ஓர் இளவரசன். அவனுடைய ஆன்மாவின் உணர்வு வீச்சை என்னாலே இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். களத்திலே பானையை வைத்து அடுப்பு மூட்டி உணவு எதுவெனக் கட்டளையிட்டவன் அவன். இட்ட கட்டளைக்கு ஏற்றபடி ஆக்கி, உங்களுக்குப் பரிமாற வைத்தவனும் அவனே. எனவே தம்பியானாலும் நன்மனத்தோடு வாழ்த்துக்கவி நல்கினான். இரண்டு வேளைகளிலே நாவரசன் விடுமுறையிலே செல்ல அந்நேரத்திலே அதனை எடுத்து வந்தவர் பேராசான் தாசீசியஸ் அவர்கள் என்பதையும் இங்கு யான் மறந்திலன்.

எனது ஒன்பதாம் பத்தாம் வகுப்புத் தமிழாசான் பண்டிதர் திரு சு. வேலுப்பிள்ளை அவர்கள் அருளிய வாழ்த்துரையை ஏனைய இரண்டு நூல்களோடு இங்கும் இட்டுள்ளேன். இது நான் அவருக்குச் செய்யும் மரியாதை.



படிப்பகம்

padippakam


பிரசவகளத்திற்கெனப் பல நாட்களுக்கு முன்னரே நாவரசன் தலைப்புகளைத் தந்துவிடினும் கவிதைகள் அதிகமாகக் கடைசி நேரத்திலேயே எழுதப்படுவது வழக்கம். இது எனக்கு மட்டுமல்ல, அனைத்துக் கவிஞர்களுக்குமே பொதுவானது என்பதும் எனக்குத் தெரியும். எழுதவென இருக்கத்தான் காதற்கவிதை தீட்டிக் கைப்பிடித்த மனையாள், அவளோடு கட்டிற் கவிதைபாடிக் கண்டெடுத்த முத்துக்கள், தொலைபேசி அழைப்புக்களினூடக எம் தமிழுறவுகள் எனப் பலருமே குறுக்கிடுவர். ஆனாலும், இவற்றை யெல்லாம் சமாளித்து வேகமாக எழுதும்போதுதான் கவிதைகளும் வேகம் பெற்றுவிடுகின்றன. ஏதோ முற்பிறவியிலும் தமிழனாகப் பிறந்து செந்தமிழ் பேசிய காரணம் இப்பிறவியிலே பலரையும்போலே தமிழிலே பத்தாம் வகுப்புவரையே பயின்றவனாகவிருப்பினும் ஓரளவு புலமையைத் தந்து நிற்கின்றது. ஒருமைக்கண் யான் கற்றது இன்று இப்பிறப்பிலும் இன்பத்தைத் தருகின்றது.

என்னினிய உறவுகளே, எனது கவிதைகளைப் படித்தாலே புரியும்.... தமிழினம் ஒற்றுமைப்பட வேண்டும், ஓரணியிலே நிற்க வேண்டும் என்பதுவே எனது ஆதங்கம். எனது காதலியை நான் சந்தித்த காலமாகிய சென்ற நூற்றாண்டின் எழுபதின் பிற்பகுதிகளிலே யாருக்கு மடல் வரையினும் மடலின் இடப்பக்க மேன்மூலையிலே,

***அழிவுறுந் தமிழர் மீண்டும்***
***ஆளும் நாள் எந்த நாளோ?***

என்று எழுதி வந்தேன். அவளுடைய மடல்களின் இடப்பக்க மேன்மூலையிலே,

***உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்!***

என்று இருக்கும். என் கேள்விக்கு அவள் சரியான பதிலைத் தந்துகொண்டே இருந்தாள். விரைவாக என்னோடு ஒன்றுசேர்ந்தும் விட்டாள். ஆனால், எமது இனத்தவரை எண்ணினால் என் மனம் என்றுமே துயரந்தான் கொள்ளும்.

1958 இலிருந்து அரசியல் எனது பாடங்களிலே முக்கியமானதொன்று. இன்று நாற்பத்தியைந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. தமிழ்நாடோ கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை. எண்ணினால் இதயம் தாங்காது. ஆனாலும் மூலைக்கு மூலை இன்றைய இளைஞரிலும் தமிழுணர்வாளர்கள் அங்கு இருக்கின்றார்கள். அதனாலேயே இன்றும் அங்கு போய்வருகின்றேன். என்றாவது ஒருநாள், தமிழ்நாட்டவரின் முதுகெலும்பு வலிவு பெறும், விழுந்த பாட்டிலே குறிசுடும் வழக்கை மாற்றித் தம் வாழ்வைத் தமிழ் நெறிப்படுத்துவர் என்ற நம்பிக்கை உண்டு. தமிழீழத்தவராகிய நாம்


படிப்பகம்

padippakam


இன்று ஒற்றுமையை நன்கு கடைப்பிடித்து நிதானமாக வழிநடந்தாற் போதுமானது. எம்மை மட்டுமே நாம் நம்ப வேண்டும். உலகின் ஏனைய எல்லோருமே எம்மை எதிர்ப்பவர்கள். அடிப்படையிலே அழுக்காறு கொண்டவர்கள். சிங்களவர் எமது எதிரி அல்ல. அவர்கள் எமது ஏஜமானரும் அல்ல. தவறுதலாக எமது கடிவாளம் அவர்கள் கையிலே போய்விட்டது. அவ்வளவே. நாமும் அவர்களும் குறைந்தது ஆயிரத்தியறுநூறு ஆண்டுகள் வரையிலே இடையியே போரிட்டுத்தான் வாழ்ந்து வந்திருக்கின்றோம். நாளையிவ்வுலகமுள்ளவரை இடையிடையே போர் தொடரும். இதிலே அதிசயப்பட ஏதுமில்லை. ஒரு தீவிலுள்ள இரண்டு நாடுகள்.... கட்டாயம் இடையிடையே போர் நிகழும். ஆனால், எமது எதிரி இந்திய நடுவண்ணரசு. உலகப்பொது எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குச் சீனா அடிபணியும் வரை இந்தியா ஒரு நாடாக இருக்க அமெரிக்கா எதனையும் செய்யும். அதன்பின் இந்தியாவை அழிக்கப் போவதே அந்த அமெரிக்கா தான்.

உலகம் என்னும் உருண்டையிலே எமது தமிழீழம் ஒரு சிறு நாடு. ஆனால் அது எமது பெரு வீடு. அதனைக் காப்பது, விருத்தி செய்வது, போரிலே ஊறு நிகழ்ந்தால் உரியன செய்வது, அதனைக் காக்கும் அணிக்குக் கட்டுப்பட்டு ஆவன செய்வது, இவை எதுவுமே செய்யாது விடினும் காட்டிக் கொடுக்காமலாவது இருப்பது என்று நாம் பல நல்ல செயல்களைச் செய்வோமாக. மேலும் சாதியையும் சீதனத்தையும் நாங்கள் ஒழித்து யாவரும் எல்லாவழியிலும் சமம் என்னும்வரை யாருக்குமே வாழ்வு எட்டாது. எட்டினாலும் நிலைக்காது. எனவே, எல்லோரும் சமமானவர்கள் என்ற கொள்கையிலே உறுதியாவோம்.

***சொல்லப் பயன் படுவர் சான்றோர் கரும்புபோல்***
***கொல்லப் பயன்படும் கீழ்.***

என்றான் எமது மூத்த அறிஞன் திருவள்ளுவன்.
அவன் வழியிலே சான்றோராக வாழ்வோமாக.

இதுவே இந்நூல் வாயிலாக நான் கேட்டுக்கொள்வது.
எல்லோருக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றியும்.
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

அன்புடன்
கந்தையா இராஜமனோகரன் (சுதுமலை, தமிழீழம்)

பிரித்தானியா
07931 531 305.


படிப்பகம்

padippakam




படிப்பகம்

padippakam



# வானில் மிதந்தவை

அணிந்துரை
வாழ்த்துக் கவி
வாழ்த்துரை

வானிலே ஒலிக்காதவை

| | | |
|---|---|---|
| 1. | விடுதலை | 1 |
| 2. | மனம் சொரிந்தோம் தனம் சொரிந்தோமா? | 3 |
| 3. | ஆடிப் புயலில் அடிபட்டுப் போவோமா? | 5 |
| 4. | பிறக்குமா கரவொலி ஒருகரம் அலைந்து? | 9 |
| 5. | நகருமா அம்மி அப்படியே விட்டால்? | 11 |
| 6. | காடைத் தனத்தின் காமுக அசுரன்... | 13 |
| 7. | ஊராளுந் தேர்தல் | 16 |
| 8. | பட்டினிச் சாவா பட்டினிப் போரா! | 19 |
| 9. | அறிவுத்தடையை அரசு அறைந்தால் | 24 |
| 10. | மனதில் உறுதி வேண்டும் | 28 |
| 11. | தயவு கூட உரிமை தானே | 31 |
| 12. | பொங்கினீரா? | 34 |
| 13. | பொங்கினீரா? | 37 |
| 14. | விழி திறக்க வழி சொல்வோம் | 39 |
| 15. | புலம் பெயர் வாழ்வின் அவலம் | 43 |
| 16. | சேற்றில் நேற்று, மண்ணில் இன்று, ... | 45 |
| 17. | அன்னை உதரம் சுடரா தீயா | 48 |
| 18. | முட்டாளாய் விட்டோமா நாம்? | 50 |
| 19. | புத்தாண்டிற் புனித பூமி | 54 |
| 20. | ஓரணிப் பேரணி உறுதிக்கு ஒரு வழி | 57 |
| 21. | உலவும் காற்றே நீதி சொல்லு | 59 |



படிப்பகம்

padippakam



| | | |
|---|---|---|
| 22. | எங்கள் சோதரர் தீயினிலே... | 62 |
| 23. | துயர் களைய அயர்வு கொள்ளோம் | 64 |
| 24. | பேரணி சேர்ந்து பார் விழிக்க | 67 |
| 25. | ஒளி பிறக்கட்டும் விழி திறக்கட்டும்! | 70 |
| 26. | செம்மணியில் எம்மணிகள் | 72 |
| 27. | தாயக வேள்வியில் தியாக தீபம் | 74 |
| 28. | அலையலையாய்க் குலைந்தோம் | 77 |
| 29. | மரணக்கயிற்றில் உறவின் உயிர்கள் | 80 |
| 30. | தன்னுயிர் ஈந்த தாயகப் புதல்வர் | 83 |
| 31. | சமாதானத் தீர்வு சாவுப்பொறி | 85 |
| 32. | காதல் | 87 |
| 33. | விழித்திருந்தாற் கிட்டுமோ... | 89 |
| 34. | வெற்றிச் செய்தி பற்றி நின்றோம்... | 91 |
| 35. | வாகை தா | 94 |
| 36. | எரிந்த சாம்பலில் எழுந்த வேதம் | 98 |
| 37. | பிரசவம் | 101 |
| 38. | தாயக விடுதலைக்குத் தற்கொடை தந்தோர் | 103 |
| 39. | ஜுலாய் மாதம் வந்தால் | 105 |
| 40. | மாலை | 107 |
| 41. | மே தினம் தான் தினம் | 109 |
| 42. | சித்திரை | 112 |
| 43. | பொங்கு தமிழ் | 114 |
| 44. | ஆடி விதை கூடிக் களை | 116 |
| 45. | சிறுவர் நலங் காத்தல் கடன் | 119 |
| 46. | அந்தாதி | 122 |
| 47. | மண்ணும் பெண்ணும் | 124 |
| 48. | இடப்பெயர்வு | 128 |




படிப்பகம்

padippakam




49. நினைவுக்கல் நினைவுகள் 131

50. வாக்கும் நோக்கும் 133

51. சிலுவையும் நிலுவையும் 136

52. பேச்சும் வீச்சும் 139

53. காதல் இல்வாழ்க்கை 141

54. பாதை திறப்பு பாதையைத் திறக்குமா? 143

55. நிலத்தின் அழகும் புலத்தின் எழிலும் 146

56. பெண்ணிலை வாதம் தன்னிலை வேதம் 148

57. எடுத்த காரியம் யாவினும் வெற்றி 149

58. தற்கொடை தந்தவர் தாள் பணிவோம் 152

59. ஆலய வழிபாடும் ஆன்மிக ஈடுபாடும் 154

60. சமாதானம் 158

61. விடுதலை வித்துக்கள் 161

62. பாலன் பிறந்தான் பாவம் களைந்தான் 164

63. தை பிறந்தால் வழி பிறக்கும் 167

64. இலக்கியக் காதலும் இன்றைய காதலும் 170

65. காதல் வாழ்வு காதலே வாழ்வு 173

66. தமிழர் என்று சொல்வோம் 176

67. ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? 180

68. குமுதினிப் படுகொலை 187

69. பொது நூலகப் புது நூலகம் 192




படிப்பகம்

padippakam






படிப்பகம்

padippakam


# மாவீரர் தாய் தந்தையரே! நூலமைத்து நானளித்தேன்!

என் தாய் தந்தையர் எனை அளித்தார் நீவிர்
மண் வாழ என்று மகவு பெற்று உயிர் அளித்தீர்
உம் தாள் களை என் கண் பார்த்து நிற்கையிலே
என் தாய் தந்தை முகம் எண்ணம் நிறைந்து விடும்!

என் பெற்றோர் பெற்றவன் இங்கிலாந்தில் உயிர் காக்க
உம் பேறாய் உதித்தவர்கள் உயிர்தந்து உடல் நீத்தார்
தம் பெற்றோர் பிறந்திட்ட தாய்மண்ணைக் காப்பதற்கு
விண் சென்றார் மண்புதைத்தீர் வீரரே ஒன்றுமக்கு...

வையத்தில்(த்) தமிழ் வாழ
வாழ்வைத் துறந்து உடலைத்
தெய்வத்தின் நிலைக் குயர்த்தித்
தேசத்தின் வித்தானார்

வானத்தில் ஒளியானார்
வாழ்வினிலே விழியானார்
கானத்தில் இனிமைதரக்
காட்சியிலே நிலையானார்

கானத்தில் மோகனத்தைக்
களிகூர இசைத்துவிட்டு
வானத்தில் மறைந்து விட்ட
மாவீரர் தமையுலகில்...

மோனத்தின் நிலை யடைந்து
மோகனத் தோடு பெற்றுத்
தானத்தின் செய்கையெனத்
தந்த தாய் தந்தையரே!

வானத்தின் ஒலி அலைகள்
வந்துவிட்ட கவி வரிகள்
ஞானத்தின் நூல் அமைத்து
நானளித்தேன் தாள் தமக்கு!


படிப்பகம்

padippakam


"...
இதுவரை யானும் இந்த இணையிலா வான் அலையில்
இயற்றிய பாக்கள் யாவும் இன்னரு நூலாய்த் தொகுத்து
எதுவரை எங்கு தமிழர் என்றுள நாடு எல்லாம்
எடுத்துமே வரவே உள்ளேன் எடுக்கலாம் ஆறு மாதம்
அதுவரை பொறுத்து நிற்பீர் அருந்தமிழ் உறவின் மிக்கீர்
ஆக்கிடப் பொறுத்தோம் கொஞ்சம் ஆறிடப் பொறுத்தாலென்ன
கதியென ஒன்றுமில்லாது கலங்குவோர்க்கு விசேடமாகக்
காசென வருவதெல்லாம் கருத்தொடு அளிப்போம் நன்றே!
..."

அன்புத் தமிழ் உறவுகளே,

20.04.2000 இல், 'விழித்திருந்தாற் கிட்டுமோ விடிய ஒரு கை விசேடம்' என்னுந் தலைப்பிலே யாத்த கவிதையின் சில வரிகள் மேலேயுள்ளன. அஃதின்று காலந்தாழ்ந்தும் நனவாகியது எனக்கு மகிழ்ச்சியே!

அதிலே குறிப்பிட்டது போலே அத்தனையும் நிகழும் என்பதையும் இங்கு அறிவித்துக் கொள்கின்றேன்!

அன்புடன்,

சுதுமலை மண் பெற்ற ஒரு மகன்
கந்தையா இராஜமனோகரன்



படிப்பகம்

padippakam



# விடுதலை

வணக்கம் யான் தந்தேன்
வளர்பெறு சேவை நல்கும்
கணக்கில் புகழ் பெறுநற்
காதலின் வானொலிக்குக்

கிழக்கில் யான் சுதுமலை
கிளர்ந்தெழப் பயத்தாலிங்கு
வழக்கிலே வென்றும் இலண்டன்
மண்ணிலே வாழவிரும்பும்

வீரன் இராஜ மனோகரன்
விடுதலைக் கவிதை சொல்வேன்
தீரன் யான் ஆதலாலே
திடுமெனக் கூறலாமா?

பிரசவ களத்தில் இன்று பிறந்திடும் குழந்தை விடுதலை
சரசமே ஆடில் நாமும் சரித்திரம் படைக்கும் குழந்தை
பிரசவம் வானொலிக்குப் பிந்தினால் நஞ்சு தாய்க்குச்
சிரசிலே உதித்த கவிதை சீர்பெறச் செப்ப வுள்ளேன்.

விடுதலை வேண்டி இனத்தின் வீரர்கள் கிளர்ந்து எழவே
சுடுதலை மட்டும் தெரிந்த சுதந்திரம் உணரா அரசை
விடுதலை யாக நீத்து மீண்டும் இங்கு அடிமையான
விடுதலை இல்லா மனிதன் வெந்துமே அலம்பல் கேளீர்!

விடுதலை வேட்கை கொண்டு வெந்திடும் மக்கள் யாவர்
வீரராய்த் தீர வேங்கையாய் நாடு காப்போர்
கடிமணம் புரிந்து பின்னர் கணவனின் கடமை காண்போர்
காதலி கைப்பிடித்துப்பின் காற்பிடித் தடிமையானோர்
குடியிலே சாதியாலே குறைவெனப் பிறந்து நலிந்தோர்
குறைவான நிறத்துத் தோலிற் குவலயம் உதித்த மக்கள்
விடுவோ மிவை யெல்லாம் என்று விரைந்துமே இறைவன் தாளை
வீட்டினை மட்டும் மனத்தில் வேண்டிய மட்டும் நினைப்போர்.



படிப்பகம்

padippakam


அருகிலே பெரிய நாடு அதனுடை அணுவின் சக்தி
ஆத்திரம் ஊட்டும் செய்கை ஆணவம் அடங்காப் பேச்சு
எருவிலே வண்டுபோலே எங்குமே உளவின் ஆட்கள்
இதுவுமோர் அடிமைத் தனமே இங்குமே விடுதலை வேட்கை
குருவியாய்க் கூண்டில் வாடும் குழந்தைகள் குடிக்கவென்று
குளிர்ந்திடும் நீரே கூடக் குவளையில் இல்லா நிலையில்
சருகுமே புசிக்க இல்லாச் சமுதாயம் கூட இதனைச்
சாடியே வேண்டி நிற்கும் சாவென வரினும் விடுதலையை.

போராடிப் பல உயிர்கள் பூமியிற் சாய்ந்து கருகிச் செந்
நீராடிப் பெறு விடுதலை நிலைத்திட வேண்டில் இங்கு
சீரான எண்ணம் வேண்டும் சீதனம் சாதிச் சிறுமைகள்
நீராகக் கரைந்து ஓடி நிலைபெறத் தன்மானம் வேண்டும்.

பெண்ணிற்கு விடிவு வேண்டும் பேதை என்று ஒதுக்கும் பேதைமை
மண்ணிலே அகல வேண்டும் அதனால் மணமகன் அடிமை அல்ல
கண்ணிலே இடமா வலமா காண்பவை ஒன்றே அன்றோ
எண்ணிடில் எவரும் சமமாய் ஏற்றிடில் அதுவே விடுதலை.

மொழியை அதன் தொனியை வைத்து மோதிடும் மூடத்தன்மை
அழிவையே தந்துநிற்கும் ஆன்ம விடுதலையை வேண்டி
விழியினை மூடி உலகின் விடுதலை முயல்வோர் கூட
அழிவினைச் செய்து நிற்கும் ஆணவம் அழிய வேண்டும்.

ஒற்றுமை யாக நின்று ஓரணி தன்னிற் சேர்ந்து
சற்றுமே சரியா வகையில்(த்) தம்முடை மானம் காத்துக்
கற்றவர் கல்லா மாந்தர் காசுளர் காசே இல்லார்
உற்றவர் யாரா கினுமிங்கு ஒருவரென்ற உணர்வு வேண்டும்.

எதிலுமே தமிழேயாக எண்ணங்கள் உயர்ந்ததாகப்
பதில்பாரா நன்மை செய்து பாரிலே வாழ்வோர் யாரோ
கதியவர் வாழ்வே இங்கு காணுமே விடுதலையை
இதுவே யான் கவிஞனாக இயம்பிடும் செய்தி இன்று.

20.06.1998



படிப்பகம்

padippakam


# மனம் சொரிந்தோம் தனம் சொரிந்தோமா?

அனைத் துலகம் எல்லாம் அழகுசேர் தமிழ்பரப்பி
எனைக் கவர்ந்த உறவே ஈடிலா வானலையே - உனைப் பணிந்து
பனை படர்ந்த சுதுமலைப் பதி இராஜமனோகரன் கோல்
முனை படர்ந்த மூச்சின் முதுவரிகள் இவை.

*நாவரச நின்பெயரோ நாவரசன் ஆய் அமைந்தும்*
*பாவமைக்க இன்றுநீ பாங்காய் எடுத்த கரு – மேவியதே*
*சொற்குற்றம் சொரியவில்லைச் சொரிகிறதே பொருட்குற்றம்*
*நற்கற்ற மனத்தாய் நான்கூறல் கவனிப்பாய்.*

*மனம் சொரிவார் தனம் சொரிவார் மனம் சொரியார் தனம் சொரியார்*
*மனம் சொரிவார் குணம் சொரிவார் மனம் சரிந்தார் எது சொரிவார் –*
*தினம் பரிந்து*
*தீயபல நாடித் திரவியம் பலதேடித் தீராத பாவ வினை*
*ஓயவொரு நாள் ஆவி ஒடுங்கவே உடல் சரிவார்.*

*ஈழவள நாட்டில் இனிய எம் சோதரர்கள்*
*வாழவழியற்று வதை படுதல் கண்ணுற்றும் – பாழ்பட்ட*
*மனமது இரங்காத மர மனமா தனம் சொரியும்*
*இனமத உணர்வுகளே இல்லாத மரங்கள் அவர்.*

*காதலித்துப் பெண்ணைக் கடிமணம் புரியாமல்*
*காதலிப்பார் பணத்தைக் கைப்பிடிப்பார் தனத்தை – பூதலத்தில்*
*பூதமொன்றைக் கைப்பிடித்துப் பூவையெனப் பூமுடித்து*
*பாதமது பணிந்து வாழும் பாவியரா மனம் சொரிவார்.*

*ஆலயங்கள் பலசென்று ஆண்டவன் திருவுருமேல்*
*பானயமாய்ப் பலகுடங்கள் பாங்காக ஊற்றிடுவார் – காலயரக்*
*கண்ணீர் மிகப் பெருக்கிக் கடும்பசிக் குழந்தையொன்று*
*தண்ணீரும் இல்லாமல் தவித்தாலும் மனம் சொரியார்.*


படிப்பகம்

padippakam



பன்னீரைச் சிலைமீது தண்ணீராய் ஊற்றி நிற்பார்
கண்ணீரே வற்றிவிட்ட கடும்பசிக் குழந்தைகள் – தண்ணீரும்
தானின்றித் தரணியிலே தவித்துமே நலிந்திடினும்
ஊனின்றி உயிர்விடினும் உருகாது இவர்மனமே.

மனம் சொரிவார் தனம் சொரிவார் மனத்தில் இதை வைப்பாய்
மனம் சொரிந்தார் போல் நடிப்பார் தனம் சொரிவார் அல்லர் –
தினம் நடிப்பால்
குணம் மிக்கார் போலே குழைந்து மிகப் பேசி அவர்
பணம் மிக்குப் பெருக்கும் பாவத்தின் சின்னங்கள்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
தினமிதை நினைத்தால் நானும் செப்புதல் புரிவாய் நீயும் – குணமிதே
குவலயத்தில்(த்) தமிழர் வாழ்வு குனிந்தது என்று சொன்னால்
பவவினை செய்யும் மாந்தர் பலருளர் எம்மில் அன்றோ.

மனமுண் டானால் இடமுண்டு மனத்திலே இதனை வைப்பாய்
தனமுண் டாகி என்னபயன் தருகின்ற மனமே வேண்டும் –
இனமின்று
இடுக்கண் பலகண்டு இன்னலில் இடர்ப்பட்டுத்
தடுக்கிமிக நடக்கையிலும் தவிக்காத பாவி இவர்.

மனம் சொரிய வேண்டும் மனத்திலே செம்மை வேண்டும்
இனம் சொரியும் கண்ணீரை இங்கு அகற்றத் – தனம் சொரிந்து
குணம் ஒன்று பட வேண்டும் குனியாத ஒற்றுமை வேண்டும்
மனம் சொரிந்தால் இங்கு மகிழ்வோடு தனம் சொரியும்.

04.07.1998



படிப்பகம்

padippakam



# ஆடிப் புயலில் அடிபட்டுப் போவோமா?

ஆடிப் புயலில் அடிபட்டுப் போவோமா
அருந் தமிழ் ஒலியின் அன்புசேர் உறவே
தேடிப் பயந்தாய் தெளி நாவரச
தெள்ளிய தமிழின் தேறிய புலவீர்
கூடிப் பயக்கும் குலவு கவிஞன்
குறைவிலா ஈழம் குடிதென் சுதுமலை
ஓடி ஒளிந்தது ஒளிர் இங்கிலாந்து
ஓதுவேன் வணக்கம் இராஜமனோகரன்.

புயலுக்கும் எனக்கும் புலவீர்
பொருத்தங்கள் என்றும் உண்டு
கயல்விழி எனக்கும் வாய்த்தாள்
கார்த்திகை எழுபத்தெட்டில்
முயல்வதிற் பணமே சேர்க்க
முயன்றனள் கொழும்பி லென்னோடு
இயல்வது இல்லறம் இன்று
இல்லத்தின் அரசி எனக்கு.

வந்தபுயல் ஐம்பத் தெட்டில்
வதைத்திட்ட கலக்கம் எல்லாம்
சிந்தையிலே சிலவே உண்டு
சிறுவன் யான் எனினு மறிவேன்
வந்தபோது எழுபத்தி யேழில்
வாலிபன் மொறட்டுவையில்
எந்தநாள் மறப்பேன் யானும்
எந்தமிழர் பட்ட பாட்டை.

மானமே பெரிதாய் வாழ்ந்த
மங்கையர் மானம் அழிந்தார்
ஊனமே ஆனார் தெருவில்
உடலமாய் விழுந்தார் பலரும்
தானமே ஏந்தும் புத்தர்
தாக்கியே பிடுங்கிச் சென்றார்
வானமே புகையால் இருள
வளர்ந்தது அகதிக் கோலம்.



படிப்பகம்

padippakam


எண்பத்தி மூன்றில் எழுந்திட்ட பெரும்புயல்
ஏழையேன் வாழ்வு ஐக்கிய அரேபியா
கண்பற்றிக் காதல் கண்டவள் கொழும்பில்
கருத்தினில் அழிந்து கண்ணீர் உகுத்தனன்
விண்பற்றி அன்று வீசிய புகையோ
வியனுல கெல்லாம் விரைந்தது கண்டும்
கண்பொத்திக் கையாற் காட்சியை மூடினர்
காவலர் என்று நாவலம் வருவோர்.

படிப்பது மட்டும் புத்தம் சரணம்
பாழ்படச் செய்வதோ நித்தம் மரணம்
நடிப்பது மட்டும் தம்மம் சரணம்
நாட்டில் நடப்பது நன்மையின் கரணம்
அடுப்பது மட்டும் சங்கம் சரணம்
ஆலயம் யாவும் உடைப்பவர் சரணம்
எடுப்பது மட்டும் ஓடும் விசிறியும்
ஓங்கி உரைப்பதோ ஓரினத் துவேசம்.

ஆடிப் புயலில் அடிபட்டோம் நாமே
அடிகள் மட்டுமா அழிந்தனர் பலரே
ஓடிப் பயந்து ஒளித்தனம் உலகில்
ஒளித்தது மட்டுமா ஒழித்தனம் தமிழை
தேடிப் புதையல் சேர்த்தனம் பெரிதும்
தேசத்தில் எம் சோதரர் வாட
நாடிப் பயந்துவெளி நாட்டில் வாழினும்
நம்தமிழீழத்தை நாளும் நினைப்பீர்.

ஆடியிலே புயல் அடிப்பது குறைவு
அதனாலாக்கும் அடிக்கடி இலங்கையில்(த்)
தேடியே அடிக்கும் தேசமே புகையும்
தேவனின் நியதியோ தேரரின் வசதியோ
கூடியே அடிப்பர் குத்துவர் வெட்டுவர்
குவலயம் எல்லாம் எம்மினம் ஓட
ஆடியா விட்டோம் அல்லவே எமக்கு
ஆக்குவோம் ஈழம் அது புயல் விளைவே.


படிப்பகம்

padippakam


அடித்தது புயலே என்றால்
அடுத்தது அமைதி என்பர்
அடித்தது ஒன்றா இரண்டா
அடித்ததே அமைதிப் படையும்
குடித்தனர் தமிழர் குருதி
கூடியே ஒன்றாய் நின்று
அடுக்குமோ என்று கேட்பார்
ஆருமே இல்லா நிலையால்.

ஆடிப் புயல்களில் அடிபட்டோம் என்றும்
ஆடாத மனமும் ஆடிவிடும் நாமும்
கூடிக் களித்துக் குலவிய பூமியில்
குவிந்தன பிணங்கள் குனிந்தது வாழ்வு
தேடிப் பணத்தைச் சேர்த்துமே பயனென்
தேசத்தில்(த்) தமிழர் சிறுமையால் வாட
நாடிக் கொடுமின் நம் தமிழ் வாழ
நன்றவர் வாழின் நன்மையே எவர்க்கும்.

ஒற்றுமையாக ஓரணி சேர்ந்து
ஒண்டமிழ் வாழ்வை உடைத்தது கண்டும்
ஒற்றுமையாக ஓரணி திரளோம்
ஒற்றுமை யின்மையில் ஒற்றுமை கண்டோம்
சற்றுமே எங்கள் சாகச முளையிற்
சரக்கது இருப்பின் சழக்கர் ஆவோமா
கற்றுமே பலநூல் கண்ட பயனென்ன
கடமையை மறப்பதா கண்விழித் தெழுவீர்.

ஒற்றுமை கொள்வீர் ஒற்றுமை கொள்வீர்
ஓலங்கள் இடுவதால் ஒருபயன் இல்லை
ஒற்றுமை கொண்டு ஓரணி நிற்பீர்
ஒண் தமிழீழத்தை உயர்வாய் அமைப்பீர்
கற்றுமே பெற்ற கவின் கலை யெல்லாம்
காற்றாய்ப் பறந்து கண்டபொரு ளெல்லாம்
பெற்றுமே அங்கு பேற்றினை ஆக்குவீர்
பெற்றதமிழ் ஈழத்தைப் பெரிதென உயர்த்துவீர்.


படிப்பகம்

padippakam


நற்றொழிற் சாலைகள் நற்கல்விக் கூடங்கள்
நன்னூல் நிலையங்கள் நாடெலாம் அமைப்பீர்
கற்றநற் புலவீர் கனதனம் பெற்றீர்
காலடி பணிந்து கதறிக் கேட்கின்றேன்
சற்றுமே தளர்ந்திடீர் உம்சந்ததி வாழும்
சாகாது தமிழும் உம்தாள் தலை பணிவேன்
ஒற்றுமை கொள்வீர் ஒற்றுமை கொள்வீர்
ஒண்தமி ழீழத்தை உயர்வாய் அமைப்போம்.

18.07.1998


படிப்பகம்

padippakam


# பிறக்குமா கரவொலி ஒருகரம் அலைந்து?

பிறக்குமா கரவொலி ஒருகரமிங் கலைந்து
பிறக்கவே கவிக்களம் பிரசவித்த நாவரச
பிறந்தது சுதுமலை பின்னின்று இங்கிலாந்து
மறப்பேனா மண்ணையே மகிழ்ராஜ மனோகரன்.

*பிறக்குமா கரவொலி ஒருகரம் அலைந்து*
*பறக்குமா புள்ளினம் ஒருசிறகு அடித்து*
*சிறக்குமா எம்வாழ்வு சிறகொன்று ஒடிந்து*
*பிறக்குமா தமிழீழம் பின்னொன்று ஒதுங்க.*

*சாதியென்று கொண்டு எம்மைச் சாடினோம் இரண்டு கூறாய்*
*ஆதியான இறைவன் உறையும் ஆலயம் கூட அடைத்து*
*நீதிதன்னை நிலத்தில் மூடி நின்றசைத்தோம் ஒருகையைப்*
*பாதிஎம்மில் வாழ்வை இழந்து மீதி என்று எப்போ வாழும்?*

*சீதனம் வேண்டி நின்றோம் சிறுமைகள் பலவும் செய்தோம்*
*மாதனம் அடைய வேண்டி மாதர்க்குத் தீமை செய்தோம்*
*சீதனம் நாடிப் பெண்ணைச் சேர்ந்தவர் தம்மை அணைத்தோம்*
*ஆதனம் சேர்த்து என்பயன் அடைந்தோமா நல்லவாழ்வு?*

*காதல் இருவர் கருத்தால் இணைந்தால்*
*சாதி பார்ப்போம் சண்டை செய்வோம்*
*சாதல் கண்டும் சற்றும் இரங்கோம்*
*சார்ந்தே நின்றங்கு சதிகள் செய்தோம்*
*மோதல் கொண்டும் முடிப்போம் வாழ்வு*
*மோகனம் வாழ்வில் முகிழ்க்க விடோம்*
*காதல்மங்கையும் கண்ணிறை கணவனும்*
*கரங்கள் கலந்து கண்ணயரவே விடோம்.*



படிப்பகம்

padippakam


இருகரம் இணைந்து இலங்கைச் சிங்களர்
இயமனாய் இயங்கி எம்மைக் கொன்றும்
ஒருகரம் மட்டும் ஓங்கி மிக உயர்த்தி
ஒலிதேடி அலைந்து ஓய்ந்து பின்னுயிர்த்து
ஒருகரம் மீண்டும் உயர விட்டு அலைந்தோம்
ஒருகணம் உண்மையை உணர்ந்தும் திருந்தோம்
வருகரம் காட்டி வளர் திசை எல்லாம்
வாழ்கின் றோம்முக வரியில்லா அகதியாய்.

எல்லோரும் ஒன்றாகி எங்கள் குறை களைந்து
என்றும் ஓரணியில் எவன் பெரியன் என்னாது
நல்லோராய் எல்லோரும் நன்றே இரு கரமும்
இன்றே நாம் அசைத்தால் எமக்கு வழி பிறக்காதா
வல்லோராய் நாம் என்றும் வாழ இங்கு முடியாதா
வாழுந் தமிழீழம் வையகத்திற் சிறக்காதா
எல்லோரும் சமமென்ற எழில் வாழ்வு எய்தோமா
இன்றே இருகரமும் இனிதசைப்போம் உறவுகளே.

ஒருகரம் அலைந்து இங்கு ஓரொலியும் வாராது
ஓங்கி வீசினாலும் உம்கை தான் உளையும்
இருகரம் அலைந்தாலும் இரண்டும் இசைவாய்
இதமாக அடித்தாலே இதமான ஒலி இசைக்கும்
இருகரம் இணைந்து எங்கும் இன்றே நல் இசைவாக
இனிதே நாம் அசைத்தால் இன்ப ஒலி பிறக்கும்
இருகரம் கூப்பி என் இதயத்தின் வணக்கம்
இன்றே ஒன்றாவோம் இருகரம் நின்றசைப்போம்.

08.08.1998



படிப்பகம்

padippakam



# நகருமா அம்மி அப்படியே விட்டால்?

நகர்யாழ் வடமேல் நாலொரு கல் சென்று
பகர்வாழ் சுதுமலைப் பதிராஜ மனோகரன்
பகர்கவி இங்குமே பார்நிறை வானலையே
நகருமா அம்மியே அப்படியே விடினிங்கு?

*அம்மியென்றால்(த்) தமிழில் அருங்கருத்து இரண்டுண்டு*
*அம்முதல் செய்து எதையும் அரைக்கின்ற கல் ஒன்று*
*அம்மான்மனைவி அவள்மாமி அவளும்அம்மி அதனாற் கவிஞ!*
*அம்மியாய் இங்குநீவிர் அசைக்க முயல்வது*
*அம்மிக் கல்லையா அல்லை உமது அருமை மாமியையா*
*அதற்கு விடைதாரும் அடியேன் தொடர்வதற்கு*
*உம்மிக் கருத்து உலகெங்கும் கேட்டுவிடும்*
*உரக்கக் கூறாமல் உரைக்க என் காதில் மட்டும்.*

*நாவாலே அம்மியென்ன நல்லுயர மலைதனையும்*
*பூமேலே நகர்த்துதற்குப் புலவ யான் நாவரசனல்ல*
*பாவாலே பதிகம்பாடிப் பாரிலே கதவு திறக்கப்*
*பண்ணிய தன்மைகொண்ட நாவுக்கரசனும் அல்ல*
*மூவாத பாட்டாலே முதிராத இளமை காண*
*முக்கால ஞானி அல்ல முகிழ் நெம்புகோல் கொண்டு*
*ஏவாத எடைகூட எய்திடும் பொறிகள் கற்ற*
*எந்திரப் பொறியியல் இளவல் யான் இன்னோர் கேள்வி.*

*அம்மியை நகர்த்தியென்ன அப்படிச் செய்யவுள்ளீர்*
*அட்டிற் கூடத்தில் அம்மி இப்போ தேவை இல்லை*
*அம்மியின் வேலை எல்லாம் அரைப்பான் செய்திடுவான்*
*அருமணவிழாவிற் கூட அம்மி இனித் தேவை தானா?*
*அம்மியின் மீது பெண்ணின் அழகிய பாதம் பதித்து*
*அருகிலே குந்தியிருந்து அவளது பாதம் தொட்டு*
*அம்மையே என்னை நீவிர் ஆதரித்து ஏற்பீர் என்று*
*அழுவதாய்க் கொள்வார் அதனாலே அதுவும் வேண்டாம்!*



படிப்பகம்

padippakam



அம்மி அவள் நகராவிட்டால் அம்மான் அது பார்ப்பார்
அம்மி மிதித்து அவளை முன் அடைந்த அந்தரத்தால்
அம்மி மகள் நகர்ந்தால் அதுபோதும் அவள் காலால்
அம்மி மிதித்திடலாம் பின் அருந்ததி காட்டிடலாம்.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்றால்
அச்சடித்த வார்த்தையது ஆதலால் கூறீர் என்றீர்
அடிக்குமேல் அடி அடித்து அன்று தொட்டு இன்று வரை
பொச்சடித்த தாலன்றோ புதுவாழ்வுகாண நின்றோம்
அடிக்கீழே பாரைவைத்து அம்மியைத் தெண்டிவிடும்
அந்நெம்புகோல் கூட அதிக காலம் உண்டன்றோ
மடிக்குள்ளே மகுடிவைத்த மங்கையர் கூட இன்று
மாவீரர் ஆகிவிட்டார் மறத்தமிழர்க்கு அம்மி என்ன.

அசையாத மலை என்ன அரன் வாழ் கயிலை என்ன
அசையாத பொருளென்று அகிலத்தில் இல்லை ஒன்றும்
இசையாது போனால் அடியில் இடிபோலும் குண்டுவைத்து
அசையாத என்ற ஒன்றை அழித்தாதல் வெற்றி காண்பர்
அசையாத ஒன்று எமக்கு அழிவையே தந்து நிற்பின்
அழித் ததனை வாழ்தல்கூட அகிலத்தில் அறமே அன்றோ
இசைவாக யாவும் அமைய ஈழத்தை இன்றே அமைக்கக்
குலையாவொற் றுமையோடு குனியாத மானம் வேண்டும்.

(அரைப்பான் – Grinder)

29.08.1998



படிப்பகம்

padippakam



# காடைத் தனத்தின் காமுக அசுரன்
## ஈழத்தலத்தின் பெண்மையைச் சிதைக்க
## அனுதாபத்தொடு அயர்வோமா நாம்?

காடைத் தனத்தின் காரகம் ஓங்கக்
        காலை ஊன்றிக் கண்ட திசையெல்லாம்
ஆடைமட்டும் அணிந்து பாய்ந்து
        அந்தரம் பொங்க நிரந்தரம் தேடும்...

மேலை நாட்டினை மேவும் ஈழத்தார்
        மேதகு செவியை மெல்ல வருடும்
வேலையில் ஓயா வானின் அலையே
        வேண்டும் உறவு இராஜ மனோகரன்.

*காடைத் தனமா எங்கே அஃது*
        *காசினி எங்கும் காணலாம் தானே*
*மூடத்தனமாய் மூளையைக் குழப்பீர்*
        *முழுவதும் மறந்து முயற்சியைப் பாரும்.*

*காமுக அசுரனா கவலையை விடுங்கள்*
        *கண்டதில்லையா கற்களை அரிசியுள்*
*யார்முகம் அழியின் நமக்கென என்று*
        *சீவியம் நடத்திச் சிறப்பாக இருங்கள்.*

*ஈழத் தலத்தில் மட்டுமா பெண்மை*
        *இரவு பகலாய் இழிவை எய்தும்*
*கோல உலகினைச் சுற்றிப் பாருங்கள்*
        *சோரம் போவது சாதா ரணமே.*

*இப்படி எல்லாம் இதயத்தைக் கொன்று*
        *எப்படி எனினும் என்பிலா நாக்கைத்*
*தப்பென வளைக்கும் தகுதியில் இழிந்த*
        *தமிழரும் உளரே! தமிழரா இவரும்?*



படிப்பகம்

padippakam


ஐயோ இப்படி அகிலந் தன்னில்
ஆட்சி நடக்குதா அடுக்குமா என்று
மெய்யாய் ஏங்கியே மெல்லப்பின் மறந்து
மெத்தையில் அயர்ந்து மேற்கில் வாழ்வோரே!

அம்மியாய் மனத்தை அசையாமல் வைக்காதீர்
அடுத்தவன் அல்லன் அங்கு அடி படுபவன்
எம்முடைச் சோதரன் எம்தமிழ் பெற்றவன்
எடுத்தவன் தோளிலே எம்தமிழ் மானமே!

பிறக்குமா கரவொலி ஒருகரம் அசைந்து
பிரசவ களத்தில் எம்தமிழ் ஈழம்
பிறந்திட வழிசெய்வீர் பிந்துதல் பிசகு
புரண்டு படுக்காதீர் திரண்டிங் கெழுமின்!

மனம் மட்டும் சொரிந்து மகிமை வாராது
மனத்தொடு தனமும் மகிழ்வொடு சொரிமின்
தனம் மட்டும் இருந்து தரணியில் என் பயன்
தருமா விடுதலையே தவிர்த்தால் ஒற்றுமையே!

ஒற்றுமை ஒற்றுமை ஒற்றுமை ஒற்றுமை
ஒற்றுமை ஒன்றே ஓர்மமாய்க் கொள்வீர்
கற்றுமே பலநூல் காத்துமே கனதனம்
காசினி வாழ்வு கவின் பெற்றுய்யுமா?

ஒற்றுமை இன்றி ஒன்றுமே எம்மை
ஓரடி தானும் உலகில் உயர்த்தாது
ஒற்றுமை இன்றேல் ஒன்றுமே இல்லை
ஒற்றுமை இன்றேல் என்றுமே தொல்லை!

ஒற்றுமை பெற்று ஒருமுகம் கொண்டு
ஓங்கி ஓரடி உன்மத்தர் தலையில்
முற்றுமே போரும் முடிவு தமிழீழம்
மூர்க்கர்யாரோ முகர்வரெம் பெண்மையைச்...


படிப்பகம்

padippakam


சற்றுமே தளரீர் உம் சந்ததி வாழும்
சாதனை அதுவே சரித்திரம் படைப்பீர்
ஒற்றுமை கொண்டு ஓரணி நிற்பீர்
ஒண்டமிழ் மீதென் உயிரோதும் ஆணை!

12.09.1998



படிப்பகம்

padippakam


# ஊராளுந் தேர்தல்

ஊராளும் தேர்தல்
பாராளும் தேர்தல்
சீராளர் செய்தால்
தீராதா தொல்லை?

பூவாழும் ஒலியே
புகழ் வானின் ஒலியே
நாவாழும் அரசே
நலம் வாழும் உறவே!

நீராளும் தீவு இலங்கை வடகீழ்
நிலமாளும் நாடு ஈழம் அதன்பால்
ஏராளும் ஊர் சுதுமலை அதில்
எழிலாளும் பதி எச்சாட்டி தனில்...

பேராளும் தமிழ்ப் புலவன் யான்
நாவாழும் இராஜ மனோகரன்
பாராளும் தேர்தல் பரிகாசம் ஆகிப்
பாராண்ட தமிழர் பரிதாபம் ஆகப்

பாராண்ட இங்கிலாந்தின் றெடிங்கில்
பரிதாபமாக வருமானம் காப்போன்
சீராண்ட கவிதை செப்பாமல் விட்டால்
யாராண்டால் என்ன என்றாகும் அன்றோ?

*சீராளர் செய்தால்*
*வாராது தொல்லை*
*சீராளர் செய்தால்*
*சீராகும் எல்லை*



படிப்பகம்

padippakam


சீராளர் செய்யார்
சீர்கெட்ட தேர்தல்
பாராள உயிரைப்
பணயமாய் வைக்கார்.

நீராளும் உலகில்
நாடேது நவிலும்
சீராளர் கையில்
சித்தித்த தேர்தல்.

காசாளும் தேர்தல்
கை ஊட்டே தேர்தல்
மாசாளும் தேர்தல்
மரணிப்பே தேர்தல்.

சீராளர் என்றும் போராடி வெல்வார்
போராளர் எல்லாம் சீராளர் அல்லர்
போராளர் எல்லாம் சீராளர் ஆகின்
தீராதோ தொல்லை சிறக்காதோ உலகம்.

சீராளர் அறிவார் சீர்கெட்ட அரசைச்
சீராண்ட தமிழர் சிறுபான்மை அல்ல
சீராண்ட ஈழம் சிறப்பிழத்தல் இங்கு
பாராண்ட தமிழர் பாரா முகத்தாலே.

மோராளும் மத்தாய் மோதி மனங் குடையும்
சீராளும் கருத்தைத் திரும்பவும் உரைப்பேன்
பாராள வேண்டிப் போராடும் இனமே
சீரான செவியில் திரும்பவும் கேளும்.

சீராக வேண்டும் சிறப்பான ஒற்றுமை
கூரான அம்பைக் குத்தாதீர் முதுகில்
வாராது செம்மை வருத்தியே எம்மைச்
சாராதீர் எதிரியைச் சகுனி ஆகாதீர்.



படிப்பகம்

padippakam



தீராது எதுவும் சீரற்ற தேர்தலால்
நீராடி மட்டும் நிலவாது புனிதமே
சீராக வேண்டும் சீரற்ற மனங்கள்
சீராளர் செய்யார் சீர்கெட்ட தேர்தல்

போராடும் இனமே பொருந்தும் ஒற்றுமை
பாராண்ட இனமே பயன்தரும் ஒற்றுமை
சீராண்ட தமிழா சீர்தரும் ஒற்றுமை
நீராண்ட ஈழம் நிலம் காணும் மீண்டும்.

சீராளர் என்றும் போராடும் தீரர்
போராளர் எல்லாம் சீராளர் அல்லர்
போராளர் ஒற்றுமைச் சீராளர் ஆகின்
தீராதோ தொல்லை திரும்பாதோ ஈழம்.

26.09.1998



படிப்பகம்

padippakam


# பட்டினிச் சாவா பட்டினிப் போரா!

பட்டினிச் சாவா பட்டினிப் போரா
பட்டெனச் சொன்னாய் பாட்டிலே போரா
சட்டெனக் கவிதை முட்டவே இடவா
கட்டியம் கூறும் இட்டமே தரவா?

முட்டவே விண்ணைத் தட்டிடும் பனைகள்
கட்டமா யுள்ள காடு போற் சுதுமலை
இட்டதென் னூறாம் இன்றிங் கிலாந்து
இட்டனர் பெயராய் இராஜ மனோகரன்.

மட்டிலாத் துன்பம் முட்டிடும் நெஞ்சைத்
தொட்டிலாயாட்டும் தோகை வானொலியே
கட்டிலா நாவின் கட்டிள அரசே! மனம்
தொட்டிடும் உறவே மட்டிலா வணக்கம்!

பட்டினி உலகிற் சொட்டிடும் வானம்
விட்டதா வல்லத் துட்டராய்ப் போரை
வட்டமாய் நின்று கட்டமாய் நடத்தித்
திட்டமாய் அழிக்கும் மட்டமா னரசால்.

பட்டினிச் சூடான் பட்டினிச் சோமாலி
பட்டினி ஆபிரிக்கா மட்டுமா கவிஞ!
கெட்டநா டெல்லாம் கெட்டது போரால்
விட்டதால் வானம் கொட்டிட அல்ல!

விட்டதால் வானம் கொட்டிடத் தானம்
பட்டதே துன்பம் பட்டினிச் சாவெனில்
நட்டமே இல்லை இட்டுமே தனமும்
கட்டலாம் நாட்டைக் காட்டலா முயர்வை!


படிப்பகம்

padippakam


விட்டுமே கடலில் அட்டிய நீரை
மட்டமாய்க் காய்ச்சி வடித்துமே பெற்று
இட்டமாய் வாழும் மத்திய கிழக்கு!
கட்டலாம் நாட்டை விட்டாலு மியற்கை!

பட்டதோர் காலே பட்டிடும் மீண்டும்
இட்டதோர் சாபம் சுட்டுதல் போலே
கட்டமாய்த் துன்பம் காட்டிய அரசோ
திட்டமாய் இட்டார் பட்டினிப் போரை.

சுட்டனர் எம்மைச் சுட்டனர் உடைமை
சுட்டனர் ஆட்டை மாட்டினைக் கூடச்
சுட்டனர் வீட்டைச் சுட்டனர் என்றும்
திட்டமே இட்டுச் சுட்டனர் எல்லாம்.

சுட்டனர் நேரிற் சுட்டனர் ஏவிச்
சுட்டனர் விண்ணிற் சிட்டெனப் பறந்து
கொட்டினர் குண்டு கொட்டினர் மழையாய்க்
கட்டிடம் யாவும் தட்டையாய்த் தகர.

மொட்டையும் அடித்துத் தட்டிலே பிச்சை
எட்டியே நின்று இட்டதை ஏற்று
விட்டுமே இம்சை கொட்டியே அன்பைச்
சட்டமாய்ப் புத்தர் இட்டதை ஏற்கப்

பட்டமே பெற்று விட்டுள பிக்கோ
சுட்டனர்! எம்மைச் சுட்டவர் தம்மை
நிட்டையில் உயர்ந்த புத்தரின் மேலாய்
இட்டனர்! அதனால் விட்டனர் புத்தர்!

இட்டனர் மக்கள் இட்டமாய் வாக்குப்
பட்டிடும் துன்பம் விட்டிடும் என்று!
மட்டிலா வாக்கு மட்டிகள் பெற்று
எட்டுமா இன்பம் கிட்டுமா நன்மை!


படிப்பகம்

padippakam


ஒட்டிய வயிறாய்க் கட்டிய கையாய்ப்
பட்டியின் மாடாய்ப் பட்டினி கண்டார்!
சட்டியில் வேகக் கட்டுமா கூலி
சுட்டிட மட்டும் கட்டுவர் வரியே!

திட்டமும் அழிவே தீட்டலும் அழிவே
துட்டராய் அரசின் சிட்டரும் இயங்கிச்
சுட்டனர் உடலை இட்டனர் மண்ணுள்!
கொட்டினர் குண்டு கோட்டமும் பள்ளியும்

மட்டிலா நோயின் கட்டிலும் குழந்தைத்
தொட்டிலும் கொண்ட கட்டிடம் கூடக்
கொட்டினர் குண்டு தட்டையாய்த் தகர
மட்டிலா அழிவின் மேட்டிலே சென்று!

திட்டமாய்த் தமிழர் திட்டங்கள் தீட்டிச்
சுட்டனர் அவரைச் சுட்டனர் அழிவை
மட்டிலா அழிவின் கட்டணம் அழிவே
இட்டனர் மேலும் ஈட்டினர் அழிவே!

சுட்டதால் மட்டும் தட்டுமா ஈழம்?
பட்டினி போட்டுச் சட்டென மடக்கிக்
கட்டிட எம்மைத் திட்டமே இட்டுப்
பட்டினிப் போரைக் கட்டமாய் இட்டார்!

பட்டினி வந்தால் எட்டியே பறக்கும்
இட்டமாய் ஒன்றா கட்டமாய்ப் பத்தும்
எட்டியே என்றாள் பாட்டிஎம் ஔவை
எட்டவே அதனை இட்டமாய் உரைப்பேன்...

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்திடும். - ஔவையார்


படிப்பகம்

padippakam


எட்டியே பறக்கும் கட்டமாய்ப் பத்தும்
பட்டினி வந்தால்! பட்டெனத் தமிழின்
கட்டிளங் காளை பட்டிளம் பாவை
விட்டனர் உயிரை இட்டிட வாழ்வை!

எட்டுமே ஈழம் எட்டுமே இன்றே
எட்டினால் நாமும் மட்டிலா ஒற்றுமை!
கொட்டினால்(த்) தனமும் மட்டிலா அளவில்
கொட்டினால் அன்பும் எட்டுமே ஈழம்!

திட்டமாய் எம்மைச் சுட்டுமே கொன்றும்
பட்டினி போட்டும் பட்டியாய் அடைக்கத்
துட்டராய் நாமும் எட்டியே நின்றாற்
பட்டுமே மரமும் பட்டையும் கிளம்ப...

நட்டுமே பின்னர் இட்டமாய் நீரைக்
கொட்டினால் மீண்டும் எட்டுமா பசுமை!
பட்ட மா மரமும் கொட்டுமா கனியே!
விட்டுமே நாமும் எட்டியே நின்றால்!

எட்டுமா ஈழம் ஏட்டிலே தானும்!
கொட்டியே தனமும் மட்டிலா அன்பும்
ஒட்டிய உறவும் ஒற்றுமைப் பண்பும்
அட்டியே ஒன்றாய்க் கட்டினால் நாமும்

பட்டிட முன்னர் நெட்டையாய் உயர்வோம்!
எட்டுமே ஈழம் பட்டினிப் போரைச்
சட்டுவம் உடைத்துச் தட்டுவம் எரிப்போர்
தட்டுவம் ஏந்தி எட்டுவர் பிச்சை!

கெட்டவர் அரசைக் கட்டியே நின்று
முட்டவே கொடுமை துட்டராய்ச் செய்தால்
திட்டியே பயனென் திட்டமே வேண்டும்!
திட்டுதல் மட்டும் கொட்டுமா இன்பம்!



படிப்பகம்

padippakam


*திட்டமே வேண்டும் திட்டமே தீட்டிக்*
*கட்டமாய் ஒன்றாய்த் திட்டமே செய்தால்*
*கிட்டுமே ஈழம்! பட்டினி ஏது!*
*முட்டுமே இன்பம்! தொட்டிடும் உறவே!*

03.10.1998


படிப்பகம்

padippakam



இறுதியாக ஒன்று இங்கு இதயத்தைத் திறந்து கேளும்
உறுதியாக நம்பும் என்றும் உயர்த்திடும் உறுதி ஒன்றே
உறுதியாக உணர்வில் ஒன்றாய் உறுதியே பெற்றால் நாமும்
அறுதியாக வாழும் அன்பால் அமைந்திடும் ஈழம் இன்றே!

07.11.1998



படிப்பகம்

padippakam


# தயவு கூட உரிமை தானே

ஈழத்திற் சுதுமலை மண்
இன்றோவிங் கிங்கிலாந்து
கோலத்திலே தமிழன் யான்
கொள்கையிலுந் தமிழன்

காலத்தின் தயவால் நன்றே
காண்பவன் வாழ்வு இங்கு
ஞாலத்தில் என்னுடைப் பெயர்
இராஜ நல் மனோகரன்.

தயவு கூட உரிமைதானே
தலைப்பு யார்க்குப் பொருத்தம்
தயவு இன்றித் தந்தீர் ஐயா
தருவேன் விளக்கம் கேளும்!

தயவு என்றும் உரிமை அல்லத்
தாலி கொண்ட தாரம் கூடத்
தயவு கேட்டு வாழவில்லைத்
தாலி ஏற்றுத் தாகம் தீர்த்து...

உறவு கொண்டு உதரம் சுமந்து
உதிர்த்து நின்ற பிள்ளை கூட
உறவின் எல்லை நின்றும் என்றும்
உடன்படாதே உரிமைத் தயவை.

தயவுகாட்டல் கருணை உள்ளம்
தாயின் தயவு தந்தை தயவு
உயர்வுகாட்டும் உறுதி உடைத்து
உதவாதென்பேன் ஏனை யாவும்.



படிப்பகம்

padippakam



# பொங்கினீரா?

அன்பிலே பொங்கியன்று
அயலவர் அண்டையோடு
இன்பமாய் வாழ்ந்தநாடு
ஈழம் என்னூர் சுதுவை
முன்பொரு பிறவிதன்னில்
மூட்டிய பாவஞ் சூழ
இன்றுநான் இங்கிலாந்து
இராஜ மனேகரன் பேர்.

பொங்கினேன் யானும்நன்றாய்ப்
பொங்கினே னென்றும்நன்றாய்ப்
பொங்குதே எங்கள் குருதி
பொங்குதல் வேரின் வேதம்
பொங்கினார் அன்னைதந்தை
பொங்கிடும் காதலாலே
பொங்கிடும் அன்புதோயப்
போட்டனள் என்னை மண்ணில்.

பொங்கினேன் இளைஞனாகப்
பொங்கியே சிங்களத்தார்
பொங்கிடும் இனவாதத்தாற்
பொங்கியெம் வாழ்வையன்று
மங்கிடச் சதிகள் செய்து
மனிதத்தை மரணம் செய்து
எங்களின் வாழ்வை வளத்தை
எங்குமே அழித்தல் கண்டு...

எங்குமே மேடைபோட்டு
எவர்க்குமே எடுத்துச் சொன்னேன்
கங்கையின் வரையிற்சென்று
கடுமையாய் முழக்கமிட்டேன்
இங்குயான் இயம்புங்காலம்
எழுபதின் தொடக்ககாலம்
சிங்களவரசு கூடச் சிறு
துவக்கோ டிருந்த காலம்.



படிப்பகம்

padippakam



பொங்கிய எந்தன் வாழ்விற்
பொங்கினாள் பூவையொருத்தி
மங்கிடாக் காதல் யானும்
மங்கையின் மடியிற் சாய்ந்தேன்
பொங்கிய நிலவே யென்றேன்
பொட்டுமே சிவப்பி விட்டேன்
பொங்கினேன் வழிந்தே னவளும்
பொங்கினாள் மூன்றுபிள்ளை.

பொங்கிய தமிழீழப் போர்
பொங்கிய வெம்மை தன்னாற்
பொங்கியே பயத்தாற் பலரும்
பொங்கியே வழிந்தார் வெளியே
பொங்கியே வழிந்தோர் பலரிற்
புலவன்யான் ஒருவன் நகைக்கீர்
பொங்கினேன் நாவின் அரசா
புலவனே உன்னைப் போலே.

பொங்கினீரா புலவீர்என்று
போட்டதாற் கேள்விதன்னைப்
பொங்கினேன் உள்ளந்தன்னிற்
புரிந்திடவே உன் பரிகாசம்
பொங்கியே பயத்தால் இங்கு
பொங்கியே அடுக்களைக்குள்
பொங்கலை அறைக்குட்படைத்துப்
போட்டனன் வயிறு பொங்க.

பொங்கிட வழியுமின்றிப்
பொங்கிடும் காற்றுமழைக்குத்
தங்கிட இடமேயின்றித்
தமிழராய்ப் பிறந்த குற்றம்
மங்கிய வாழ்வினெல்லை
வன்னியில் உறவு காணப்
பொங்கிட வில்லையானும்
பொங்கினேன் அரிசி கொண்டு.



படிப்பகம்

padippakam


பொங்கினேன் இளைஞனாகப்
    பொலிவின்று மங்கல் கண்டேன்
பொங்கினேன் கொடுமைகண்டு
    புதுமையான் காணவில்லைப்
பொங்கினேன் காதல்கொண்டு
    பூவைக்கின்று அடிமையானேன்
பொங்கினேன் பயத்தால்வழிந்தேன்
    பொலிவெலா மிழந்தேனிங்கு.

பொங்கினேன் அரிசி கொண்டு
    பொங்காத உறவை மறந்தேன்
பொங்கினேன் ஏளனத்திற்
    பொங்கியவுன் கேள்வியாலே
பொங்கினேன் எனதுகவிதை
    பொங்கிய ஆதங்கத்தில்
பொங்கினேன் என்னைமறந்து
    பொங்கிடும் தமிழின் உறவீர்!

பொங்கிடும் அன்பினாலே
    புலவன்யான் ஒன்றுகேட்பேன்
பொங்கியே யானும்என்றும்
    புதுமையே கண்டதில்லைப்
பொங்கினேன் எங்குமெதிலும்
    பொங்கிய பலன் தானென்ன
பொங்கினேன் பலனை எதற்குப்
    போதுமா பதில்நா வரச!

21.01.1999



படிப்பகம்

padippakam


# பொங்கினீரா?

பொங்கியன்று தொட்டுப் போரிலல்லற்பட்டு
மங்காப்புகழ் காக்கும் மண் தமிழீழத்தின்
தங்கு தவவேள்வி தானுயர் சுதுமலை ஊர்
இங்கி லாந்திலின்று இராஜமனோகரன் யான்.

கடந்த வாரம் ஓர் கவிதை காதல்(த்) தமிழினிலே
நடந்து வர விட்டேன் நான் கண்ட பொங்கல்பற்றி
இடந் தரவே மனமே யில்லை இவ்வளவு நேரமாக
இடம் பிடிப்பாரில்லை நீரோ ஈதனை ஓட்டல் கண்டேன்.

பொங்கினேன் கண்டீர் பொழுது புலரமுன்னர்
போய்ச்சேர வேண்டும் பொருள்சேர்க்கும் வேலைக்குப்
பொங்கினேன் கண்டீர் புதுப்பானையி லல்லப்
பொன் விளிம்பு கொண்ட போலிவெள்ளிப் பாத்திரத்தில்
பொங்கினேன் கண்டீர் புத்தரிசிபய றில்லைப்
புரட்டாதி நவமிக்குப் பொங்கின பின் மிச்சங்கள்
பொங்கினேன் கண்டீர் புதுவிறகு இடவில்லைப்
பூமித்தாய் துளைத்துப் பொங்கிவந்த அவள் ஆவி.

பொங்கி முடித்து அதைப் போட்டுமே வெள்ளித்தட்டிற்
போய்ப் பூசையறைக்குள் பூரணகும்பம் வைத்துப்
பொங்கிவரும் ஆதவனாய் அதை மனதிற் கொண்டு
பொங்கலோடு நாம் விரும்பும் பழங்களையும் வைத்துப்
பொங்கிவாரும் சூரியரே பூரண கும்பத்திலிரும் பின்
போய்வாரும் எங்கள் பொங்கலின் நிறம் பார்த்தே
பொங்கலைச் செய்த பலன் போதுமட்டும் எமக்களியும்
பூமியிலே வளமெல்லாம் பொலியவே நீர் தாரும்.


படிப்பகம்

padippakam



என்று சொல்லி வணங்கி எல்லோரும் பூத் தூவி
எங்கள் கறிக்குப் பின்னுதவ ஒரு தேங்காய் உடைத்து
நின்று நடுங்கி நினைவுநிறைந்த என் துணைவிக்குக்
கற்பூரம் எரித்தாற் கரி சேரும் சுவரில் என்பாள்
என்றும் ஊதுபத்தி இது உடம்பிற்கு ஆகாதென்பாள்
என்ன செய்வேன் கண்ணே எனக்கு இவை ஆகுமென்று
நன்றே அவளுடைய தலையணைக்குள் எடுத்தோதிக்
கற்பூரம் தான் காட்டிக் கவிதைகள் தாம் பாடி...

என்றும் எழுந்து முதலில் எம்தமி ழீழத்தை
நன்றேகண்டு வரும் நாயகனை நாம்பாடி
மென்று தின்றுவிட்டோம் மீதமின்றி யாவையுமே
கொண்டுசென்று கொடுக்கக் கொண்டிலோம் உறவருகில்
ஒன்று மட்டும் எடுத்து ஒருகுவளை ஐ.பி.சி. க்கு
இன்று உலகமெல்லாம் ஈய்ந்துவிட்ட உறவுகளே
அன்று நாம் ஈழத்தில் அடைந்த சுவைப் பொங்கல்வேறு
ஆனவரை பணமிருந்தும் அச் சுவையும் இங்கு ஏது?

ஆதவன் தனக்கு ஈழம் ஆண்ட பரம்பரை இன்று
அடிமையாய் விட்டதனால் அங்குமே பயந்த பொங்கல்
மாதவம் ஒன்றும் நீர் மனமொடுக்கிச் செய்ய வேண்டாம்
மனந்திருந்தும் அதுவொன்றே மாநிலத்தில் எமை உயர்த்தும்
பாதகம் இதில் இல்லைப் பழிபாவம் என்று இல்லைப்
பாரெல்லாம் சிதறிய பாங்கான தமிழர்களே
சாதகம் ஆகும் இன்றே தமிழீழம் எமக்காகும்
சாகாத ஒற்றுமையைச் சாதித்தால் நாமுமிங்கே.

பொங்கிடுவீர் ஒற்றுமையைப் பொங்கிடுவீர் ஒற்றுமையைப்
பொய்யான வேடங்களைப் பூமியிலே புதைத்திடுவீர்
பொங்கிடுவீர் ஒற்றுமையைப் பொங்கிடுவீர் ஒற்றுமையைப்
போனவழி வேறென்றாற் போலியென்று பொங்காமற்
பொங்கிடுவீர் ஒற்றுமையைப் பொங்கிடுவீர் ஒற்றுமையைப்
பொங்குகின்ற தமிழீழம் பொங்கிடவே விடுதலையைப்
பொங்கிடுவீர் ஒற்றுமையைப் பொங்கிடுவீர் ஒற்றுமையைப்
பூவாழுந் தமிழர்களே உம் கால் பற்றிக் கேட்கின்றேன்!

28.01.1999



படிப்பகம்

padippakam



# விழி திறக்க வழி சொல்வோம்
## விழி திறந்தோர் வழி சொல்வோம்
## விழி திறக்க வகை சொல்வோம்

மொழி இறுக்க விழிதிறந்தார் முதுதமிழர் ஈழத்தில்
மொழி வளர்த்துக் கலைவளர்த்த முதுபெருமூர் சுதுமலை
களி பெருக்க எனை ஈந்தார் கனிந்து இட்ட பெயருமே
களிபெருக்கும் அரசனென்ற கவி இராஜமனோகரன்
விழி திறந்து என்ன பயன் வீரமில்லை நெஞ்சினிலே
வழி திறந்து எங்கிருக்கும் வல்லமையால்(த்) தப்புதற்கே
விழி திறந்து மதிதுறந்து விண்ணில்வந்து இங்கிலாந்தில்
மொழிதுறந்து அடிமையாகி மோனவிழி மூடிவிட்டேன்.

மூடிவிட்ட விழிகளினைப் பாடச்சொல்லிக் கேட்டதால்
மூச்சிரைக்க எழுந்து நின்று முழிபிதுங்கப் பார்க்கிறேன்
ஓடியோடி உழைப்பது உள்ள தெல்லாம் உண்பது
ஒட்டலான வயிறு இப்போ வட்டமாக வுள்ளது
பாடியாடி மகிழ்ந்திடப் பாட்டிற்கேனோ விழிகளைப்
பாடிவிட்டேன் கேட்டுநில்லும் பாட்டிலிது அந்தாதி
கூடிநின்று என்னைப்பார்த்துக் கூச்சலிட்டுக் கத்தாதீர்
குரைத்தாலுங் கவலையில்லைக் குவிவிழிகள் மூடிவிட்டேன்.

மூடிவிட்ட விழிகளைத் தேடிவந்து உதைக்கின்றீர்
மூடிநின்ற நிலைபோதும் முழுக்கத் திறவும் என்கின்றீர்
நாடுவிட்டு நாடுவந்து நல்ல வாழ்வு காண்கையில்
நடந்துவந்த பாதையை நயந்து பாரும் என்கின்றீர்
ஓடிவந்த இளைப்பு இப்போ இறங்கிக் கொஞ்சம் இருக்கையில்
கூடிவந்து நின்றுகொண்டு கொள்ளையடிக்கப் பார்க்கின்றீர்
வீடுவந்து சேரத் தமிழும் வாங்கி வந்தேன் வானொலி
விரும்புகின்ற பாட்டைப்போட்டு விட்டாலென்ன நட்டமோ.



படிப்பகம்

padippakam


நட்டமெல்லாம் பட்டுநாமும் நாலுபேரை மன்றாடி
இட்டமுடன் கேட்டுநின்ற இலட்சமெல்லாம் கொடுத்துமே
கட்டமெல்லாம் பட்டு நாமும் கப்பலேறி விண்ணிலே
கடவுச்சீட்டை மென்றுவாயில் தின்றுவிட்டு வந்துமே
பட்டமெல்லாம் இட்டுநாமோ பதவிதேடி அலைகையில்
பாட்டுப்பாடி விழிதிறந்து பாருமென்று பகர்கின்றீர்
மெட்டமைத்துப் பாட்டுப்பாடி விழிக்கதவு திறந்திட
மேதினியில் நானுமென்ன நாவுக்கரச சுவாமியோ.

நாவுக்கரச சுவாமிபேரை நாவளந்து நிற்கையில்
நல்லதான சிந்தனையும் நன்றே யென்னுட்பாய்ந்ததே
பாவுக்கரச பாடிவிட்டேன் பட்டுநின்ற பாடெலாம்
பாவலன் யான் கண்திறந்து பார்க்கமுன்னர் உன்னையே
தாவிக்கரைக்குத் தமிழனாகத் தாவியின்று தமிழையே
தன்னினைவில் நின்றெறிந்த தமிழர்வாழும் தரணியில்
பாவிங்கழைத்துப் பாடச்சொன்ன பாவலயான் முயல்கின்றேன்
பாடமுன்னர் பாயவொளி மூடிநிற்கும் விழிகளே.

விழி திறந்த வகையைப் பேச விழுமியதோர் நாளுமின்று
விடுதலையை விலைபேசி விற்றுவிட்ட நாளுமின்று
ஒளி பொருந்த இலங்கையென்ற தீவை ஒரு நாடு என்று
ஒவ்வாத திருமணத்தை ஒளிபெருக்கும் என்றுசெய்து
வழி திறக்கும் என்று அன்று வந்தெம்மை ஆங்கிலேயர்
குழி பறித்துச் சுதந்திரமாம் குட்டைக்குள் தள்ளிவிட்டுப்
பழி பெருக்கி இன்றோடு பாரிலாண்டு ஐம்பத்தொன்று
மொழி திருகி இனவாதம் மோதநாமும் விழிதிறந்தோம்.

விழி திறந்த வழி சொல்ல விண்ணில் ஏறித் தப்பியிங்கு
விழி பிதுங்க மொழிதுறந்த வீரனெனக் கேதுவகை
விழி திறந்தோர் வழிசொல்ல விழியெனக்கு விழிக்கவேண்டும்
விழி எனக்கு விழிக்க நின்றால் விழுமுனக்கு நரைதிரையும்
விழி திறந்த வகைசொல்ல விழிதிறந்த வீரர் வாழும்
பழி இறங்கும் தமிழீழம் பார்த்துநீரும் நடைபோடும்
மொழிகாக்க உயிர்போக்கும் மேன்மையுறு மானுடங்கள்
பழிதாங்கித் தலைமேலெம் பாவஞ்சுமப்ப தவர் வழக்கம்.



படிப்பகம்

padippakam



வழக்கம் போல நேற்றிரவு வானொலியைக் கேட்டு நின்றேன்
வருவதற்காய் வானலையில் வளமான உன் தலைப்பு
குழப்பம் போல் இருந்ததையா கூட்டி மூன்று வரி சொன்னாய்
குவலயத்தில் விழிமூடிக் கொண்டிருக்கும் தமிழனையா
இழக்கிடலாம் இன்கவிதை என்றிருந்த எந்தனுக்குன்
இரண்டாவது வரிதந்த இன்னல் கொஞ்ச நஞ்சமல்ல
குழம்பிமனம் பேதலித்தேன் கொண்டுநின்ற சிலேடை கண்டு
கூறிடுவீர் கவிதைவரி கூட்டுவிழி திறந்தார் என்றாய்.

என்ற வகை பொருள் கொண்டு எடுத்த தாளை வீசிவிட்டு
நின்றபோது பொருள் கண்டேன் நினைவினி லின்னொன்று
இன்று விழிதிறந்து நாமும் இருந்தெழுதி ஓர் வழியை
நன்றுமக்கு நல்லவகை என்றிங்கு இயம்பிடலாம்
சென்று ஓர் தனியறையிற் சீராக இருந்துகொண்டு
செய்யாத விதமெல்லாம் செய்தேனென் விழிதிறக்க
ஒன்று தானும் உதவவில்லை ஒருவழியும் தெரியவில்லை
ஒருவாறு உறங்கிவிட்டேன் அது சுலபம் எந்தநாளும்.

எந்நாளும் உறங்கிடுவேன் எது நடந்தால் எனக்கென்ன
என்மனைவி என் பிள்ளை என்வீடு என் பணமாம்
எந்நாளும் இவைபோதும் என்னுயிரில் நின்றினிக்க
எவருலகில் எக்கேடு கெட்டு நின்றால் எனக்கென்ன
பொன்னாலே பொருள்குவித்துப் பொருளாலே நிலையுயர்த்தித்
தன்னானேத் தானன்னேத் தாலாட்டில் உறங்கிடுவேன்
இந்நாளில் விழித்துவிட்டால் ஈழத்திற் குதவும் என்பார்
என்னாலே முடியாது இனியெனக்கேன் ஈழத்தை.

ஈழத்தில் இடர்ப்பட்டு இங்கு வந்து இங்கிலாந்திற்
கோலத்தை ஒருவாறு கோட் சூட்டால் மாற்றிநின்று
வாழத் தலைப் படுகையிலே வந்துநின்று கூறுகின்றீர்
வந்தவழி பார்க்கவேண்டும் வண்ணவிழி திறவுமென்று
ஆளத் தலைப்பட்டுத்தானே அங்கு கொண்டோம் அழிவுகளை
ஆராண்டா லெமக்கென்ன அரும்பொருளைச் சேர்த்துவிட்டால்
ஓலத்தைக் குறையுமையா உறக்கத்தைக் கெடுக்காதீர்
ஒளித்துநிற்பார் இவ்வுலகில் ஒருநாளும் விழிக்க மாட்டார்.



படிப்பகம்

padippakam


விழிக்கமாட்டா விழிகளிவை வேறுவேலை உமக்கில்லை
விழிக்கமாட்டேன் என்றுவிட்ட விழிகளிவை விழித்திடாவே
முழித்துநிற்கும் முழிபிதுங்கும் முட்டைபோல ஒருநாள்
முழித்துநிற்கும் விழிபிதுங்க முண்டமான உடம்பினிலே
களித்துநிற்கும் அதுவரையும் காட்சியதற் கில்லையாம்
கண்டபடி நீர் உளறிக் காண்பதென்ன சுகத்தையோ
அழித்துநின்று சிங்களத்தார் ஆட்சியென்ற பெயரிலே
ஆனமட்டும் கொடுமைசெய்தால் அடங்கிநில்லும் மூலையில்.

மூலையிலே முடங்கி நிற்கும் மூடர்கள்நாம் இக்கரை
முழிபிதுங்கி விழிகள் மூடி முழுநாளும் நித்திரை
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை
ஆனமட்டும் தேடியும்நீர் அடைவதெப்போ அக்கரை
காலையிலே எழுந்து நாமும் கண்விழிப்பது இத்தரை
காணவென்று கடவுள்தந்த கருணைசிந்தும் முத்திரை
மூளையிலே காட்சிகொண்டு முயன்றுநின்றால் முகத்திரை
மூடியின்றே நீங்கியிங்கு முகிழ்க்கும் ஈழம் இத்தரை.

இத்தரையில் ஈழநாடு இன்றேநாமும் காணலாம்
இதயத்தைத் திறந்துபார்த்து இழிவுஎல்லாம் கழித்துமே
எத்தரமாய் இருந்தாலும் எல்லோரும் ஒருதமிழர்
எல்லோரும் ஒருமுகமாய் எல்லோரும் ஓர் அணியாய்ச்
சித்தமெலாம் தமிழர்களின் சீர்திருத்தம் என்றுமட்டும்
சீரோங்கும் ஒற்றுமையிற் சிறந்தேநாம் ஒன்றானால்
இத்தரையில் எம்பகைவர் எவருள்ளார் எதிர்ப்பதற்கே
ஈழநாடு உயர்ந்தோங்கும் இனிதோங்குந் தமிழ்மொழியே!

04.02.1999


படிப்பகம்

padippakam



# புலம் பெயர் வாழ்வின் அவலம்

தமிழீழம் என்னாடு தந்தவூர் சுதுமலை
தந்தைதாய் இட்டபெயர் இராஜ மனோகரன்
எமதீழம் அடிமையாய் என்றென்று மாவதோ
எக்காளமிட்டனன் என்றுமே நன்மேடையில்
தமிழீழமா கேட்டீர் தகதகவெனச் சுட்டார்
தாவியே பறந்தேன் என் தாலியோடிங்கு
தமிழரெனத் தனிக்குடியாய்த் தவிக்கின்ற அவலம்
தான்கேட்டோ நாவரசா தந்திட்டாயுன் தலைப்பு.

கற்பனையல்லக் கண்டபடி சிங்களவர்
கடுஞ்சினத்தால் எமையங்கு கழுவேற்றல்
கற்பனையல்லக் காதற் குலவிளக்கைக்
காமுகராயவரும் காமப்பசிக் கிரையாக்கல்
கற்பனையல்லக் காணாமற் போவோரின்
கண்டமது நெரித்துக் கடுமணலிற் புதைத்தல்
கற்பனையல்லக் கன்னித் தமிழ் மறவர்
கண்முடித் தலையாட்டும் கள்வருக்கிரையாதல்.

இத்தனை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ
இன்னல்கள் இழப்புக்கள் ஈடில்லா அவலங்கள்
அத்தனை யும்பட்டு அவைநீங்க இங்கு வந்தோம்
அரிசி கொதித்திங்கு அடுப்பிலே விழுந்த கதை
அத்தனை அவலமும் அடிதொடர்ந்து வந்தனவே
ஆண்டாண்டுதோறும் அளவின்றிப் பெருகினவே
எத்தனை அவலம் எத்துணைச் சீர் கேடு
எம்மவர் படும்பாடு எம்மவர் கைகளிலே.

அங்கு அடித்தவன் அரசுடைச் சிங்களவன்
அடிமையி னுறக்கத்தை அவன்விழிக்கச் செய்தான்
அங்கு அடித்தனன் அடிமைத் தமிழனுந்தான்
ஆண்டானின் அடிவருடி அரசின் ஆலவட்டம்
இங்கு மடிக்கிறான் ஐரோப்பா நாடெல்லாம்
இதயத்தைத் தொலைத்த எம்மினத்தான் இன்று
அங்கு மிருகமிவன் ஐரோப்பா மேற்கு வந்தால்
ஆலையிலே போட்டெரித்த அழகுப் பொன்னாமோ?



படிப்பகம்

padippakam



காலையெழுந்தவுடன் கள்ளுக்கடை பின்னர்
காமக்களிதீர்க்கக் கணிகையர் கஞ்சா அபின்
மாலைவரையுமிந்த வகையாக இருப்பதற்கு
வருமானம் வேண்டாமோ வந்தது சூதுகளவு
வேலையொன்றிருந்தால் வீண்பேச்சு அதுநின்றால்
வேதனை மற்றையோர்க்கு வேண்டுமா புலப்பெயர்வு
சாலையிலேயிருந்து சாகுமட்டும் பிச்சையினைச்
சாதிக்கும் சந்ததியில் தரங்குறைந்த வாழ்வன்றோ.

எத்தனை கொலையிங்கு எத்தனை களவிங்கு
எத்தனை எம்பாலர் எம்மவர் பால் வன்முறைக்கு
அத்தனை அவலங்களும் ஐரோப்பா கனடா
அகதியாய்வந்தவனே அனுதினமும் செய்கின்றான்
அத்தானை விட்டுவிட்டு அடுத்தவனை நாடுபவள்
அன்புருவைவிட்டுவிட்டு அடுத்தமனை தேடுபவன்
சத்தான உணவிருக்கச் சருகைப் புசிக்கின்ற
சந்ததியாய் நிதமழியும் சந்ததியின் அவலங்கள்.

புலம்பெயர்ந்ததோர் அவலம் புதினமின்று கேட்டீரா
புரவலராம் யேர்மனியிற் போந்திட்டார் குர்திசிக்கு
புலம்பெயர்ந்தநாடிது போட்டதுவே சட்டம் நீர்
பொங்கினாலும்மைநாம் போக்குவோம் துருக்கிக்குப்
புலம்பெயர்ந்தவலமுறும் புதல்வர்களே உணர்வோம்
பூமியிலே நாடெமக்குப் போர்பூத்த தமிழீழம்
புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பூத்திடத் தமிழீழம்
பூத்துநிற்போம் ஒற்றுமையிற் பூமியெங்கும் நாமே.

அவலங்கள் அழிந்து அடிமைவாழ் வகன்று
அவனியிலே தமிழீழம் அழகின்பம் பெறவேண்டும்
புவனத்தின் எல்லைகளைப் புகுந்தழித்த தமிழர்யாம்
புன்மைசேர் மனத்திலுள்ள வன்மைகளை ஒழிப்போம்
கவனத்தை எம்மீது கணநேரந் திருப்பிடுவோம்?
கடுமனத்தைக் காதலினால் கனிவுறவே நிரப்பிப்
புவனத்திற் புதுமையொன்று பூத்திடவே செய்வோம்
பூத்துநிற்போம் ஒற்றுமையிற் காய்த்திடக் கனி ஈழம்!

18.02.1999



படிப்பகம்

padippakam


# சேற்றில் நேற்று, மண்ணில் இன்று, நாளை பெண்ணின் எல்லை எங்கு!

பாட்டியை இழந்து நிற்கும் பாவல எம் நாவரச!
பாட்டிலே துயரம் பகிர்வோம் பாரிலே இயற்கையாமே
ஏட்டிலே உள்ளதறிவாய் எமனையாம் வெல்வதாமோ
காட்டியே கருணையாலே கடமையில் இரங்கிநிற்போம்!

பெண்ணாகி உன் தந்தைதனைப் பேணியவள்
மண்ணாகி விட்டு மறு எல்லை சென்றாள்
கண்ணாகி எம் கருத்தான இறை பாதம் இன்
பண்ணாலே இறைஞ்சுவோம் பாவவினை தீர!

ஆறில்லா மலையின் எல்லை சுதுமலை - அதில்
அன்னை தந்தை காதல் எல்லை என் பிறப்பு
வேரில்லா நிலையின் எல்லை வேதனை - அதை
வேகவைக்க வருங்கவி இராஜ மனோகரன்.

*பெண்ணின் எல்லையினைப் பேசவந்துள்ளாய் – உன்னைப்*
*பெண் சுமந்து போட்டாள் பேணிப் பின் வளர்த்தாள்*
*கண்ணின் எல்லையினைக் காண்பவர் உளரோ – உன்னைக்*
*கண் எனப்போற்றிக் கனியும் எல்லை பெண்ணன்றோ.*

*காதலின் எல்லை உலகிற் கல்யாணம் – அது*
*கடைசி எல்லை தொடர்ந்து நின்றால் தரும் மானம்*
*மோதலின் எல்லை என்றும் அழிவாகும் – நாம்*
*மோகனத்தில் வாழுமெல்லை பெண்ணாகும்.*

*சேறில்லா மனத்தினிலே பெண் செந்தாமரை – அவள்*
*சேருமிடம் சேர்ந்தாலோ பெண் தேவதை*
*மாறில்லா வாழ்க்கையிலே பெண் மாதவமே – அவள்*
*மனங்கனிந்தால் இன்ப எல்லை மண்ணில் வாழ்வே.*


படிப்பகம்

padippakam


சாதலின் எல்லை அது மறுபிறப்பு – அதைச்
சந்தித்தால் அதன் எல்லை மீண்டும் பிறப்பு
ஆதலின் எல்லை என எதற்கும் வேண்டில் – அது
அந்தரத்திற் சுற்றி நின்று வட்டம் போடும்.

சேறில்லை நேற்று அவள் வாழ்ந்த வாழ்க்கை – அந்நியச்
சேற்றினிலே சிக்குண்டு சிதறும் வேளை
கூறிட்டு அவள் வாழ்வைக் குவலயத்தில் – வீட்டின்
குகைக்குள்ளே அடைத்துவிட்டார் தப்பாயல்ல.

தமிழரின் வரலாற்றை எடுத்தீ ரென்றால் – வடக்கே
தந்துநின்றார் தொந்தரவு மொகலாயர் முன்
அமிழ்தான பெண்ணினத்தார் முடங்க வீட்டில் – பின்
அடுத்துவந்தார் போத்துக்கல் நாட்டார் அவரைத்...

தொடுத்துமே வந்துநின்றார் ஒல்லாந்தர் – தந்த
துயரத்தை நீட்டவந்தார் ஆங்கிலேயர்
கொடுத்துமே தம் உரிமை கொடியிடையார் – தம்
கூட்டிற்குள் முடங்கிவிட்டார் கூனிநின்றார்.

கூனியே நின்றபோது சுதந்திரம் என்று – எம்
கூட்டோடு பொறுப்பெடுத்தார் சிங்களத்தார்
மேனியை வன்முறையால் அழித்து – அவர்
மேவுமுடல் மூடிநின்றார் மண்ணின் எல்லை.

அன்றைக்கு அந்நியனும் ஆள முன்னர் – நாம்
அடைந்து நின்ற வாழ்விலே பெண் அடிமையில்லை
என்றைக்கு அடிமைவாழ்வு எமைவிட்டகலும் – பெண்
அன்றைக்கே அடிமை நிலை நீங்கி உயர்வாள்.

அன்றலர்ந்த மலரின் எல்லை மேனி மென்மை – இன்று
ஆயுதத்தை ஏந்துகின்றாள் மண்ணின் எல்லை
நன்றிதென்று கைகொட்டி ஆர்த்திடாதீர் – நாம்
நாட்டின் எல்லை விட்டகன்ற தன்மையாலே...


படிப்பகம்

padippakam



சென்றடைந்தார் செருக்களத்தின் குருதி எல்லை – அவர்
செம்மையினைச் சொல்லிடவே தகுதி எல்லை
சென்றடைந்து விட்டதையா என்னை விட்டு – அச்
சிங்களத்தின் சினத்தின் எல்லை பயத்தின் எல்லை.

ஒற்றுமை எல்லை சென்று ஒன்றாய் நாமும் – உலகில்
ஓரணி நின்றுவிட்டால் அதுவே போதும்
வெற்றியின் எல்லை செல்வோம் எங்கள் ஈழம் – மீண்டும்
வேண்டுமட்டும் மீட்டிடுமே பெண்மை எல்லை!

04.03.1999



படிப்பகம்

padippakam


# அன்னை உதரம் சுடரா தீயா?

அன்னை ஈழம் அனலிலே அவிய
அவளுடை மைந்தன் அந்நிய இங்கிலாந்து
பொன்னை நிகர்த்த பூமி சுதுமலை
பூத்த கவிஞன் இராஜ மனோகரன்.

அன்னை எவர்க்கும் அகிலத்து நாயகி
அனலுரு அவளே அதனா லன்றோ
அன்னை பக்கமே அப்பன் சிவனும்
அனல்கொண்டாடி அம்பலம் நின்றான்.

எம்மைப் பெற்றவள் எம்தாய்ப் பூமி
எழிலுரு வெளியே எவ்வகை உள்ளே
வெம்மையின் மிக்கு வேகிடும் உதரம்
வெந்திடும் யாவும் வெடித்துமே சீறின்.

அன்னையாய் எம்மை அகவையிற் சுமந்தவள்
அன்றிட்ட தீயே அது குண்டலினி
என்னையும் எழுப்பலாம் எழுந்திடின் தீயும்
எழுந்திடும் வாழ்வு எய்திடும் ஞானம்.

அன்னையே மொழியும் அவளும் ஓர் தீயே
அளவொடு சுடர்விடின் அழகையே தருவாள்
தன்னையே மறந்து தருக்கரும் எதிர்த்தால்
தரணியை எதிர்க்கும் தணலென ஒளிர்வாள்!

காதலிகூடக் காய்ந்திடும் தீயே
காதொடு பேசிக் கனிந்திடச் செய்வாள்
ஏதுமே தேடாது சிவனே என்றிருப்பின்
ஏந்திழை சேர்ப்பாள் என்றுமே நடனம்!


படிப்பகம்

padippakam


மனைவியின் தீயோ மன்னனும் ஆக்கும்
மண்ணையும் விடுத்து விண்ணிலும் சேர்க்கும்
துணையென வாழ்ந்து துயரையும் நீக்கும்
துயரையே சேர்த்து உயிரையும் போக்கும்.

மொத்தத்திற் பெண்மை முழுவதும் தீயே
மோகன முயக்கிலாண் உருகிடும் நெய்யே
முத்தத்தில் இணையிலென் முழுவதும் இணையிலென்
முழுமதி எனச்சுடர் விடுவது பெண்மையே.

நெய்யாய் இணைந்தால் நெடுநாட் சுடர்வாள்
நீட்டினால் மண்ணெய் நீளுவாள் அனலாய்
வெய்யோன் ஒருசுடர் வெண்மதி தண் சுடர்
வெந்துயர் தீர்க்கும் மிகுசுடர் அன்னையே!

பாண்டியன் சபையில் அன்றொரு ஐயம்
பாண்டிமாதேவி கூந்தலின் மணத்தில்
ஆண்டுமே அன்பால் அணைக்கும் வானொலியே
அடைந்ததேன் ஐயம் அன்னை தீயிலே?

அன்னை சுடராவாள் அவளே தீயாவாள்
அகிலம் இயக்கும் அணையாத சக்தியவள்
பொன்னை நிகர்த்த அவள் பூவடிகள் போற்றிப்
புகல்வேன் நன்றி புலவ என் வணக்கம்!

18.03.1999



படிப்பகம்

padippakam



# முட்டாளாய் விட்டோமா நாம்?

உன்னையே நீ அறிவாய் என்று
உங்களைப் பார்த்துக் கூறத்
தன்னையே தான் உணர்ந்த
தவமுனி இன்றாகி விட்டேன்.

என்னையே உணர்ந்த போது
என்னுடை ஆன்மா கண்டேன்
அன்னதால் அடியேன் இன்று
அகத்தை விட்டகல வுள்ளேன்.

உயிருக்கு மனைவி இல்லை
உயிருக்குப் பிள்ளை இல்லை
தயிருக்குள் வெண்ணெய் போலே
தன்னுயிர் உடம்பிற் கண்டேன்.

கண்டதால் உண்மை தன்னைக்
ராட்டிற்குச் செல்ல வுள்ளேன்
கண்டுமே கடவுள் தன்னைக்
காதலித் துய்ய வுள்ளேன்.

காதலின் மனையாள் இங்கென்
காதினைத் திருகு கின்றாள்
ஆதலால் இப்போ துணர்ந்தேன்
ஆன்மிகம் காதல் தானே.

ஏப்பிறில் முதல்நாள் அதனால்
ஏதேனும் பொய்யாய்ச் சொல்லிக்
கூப்பிட முட்டாளென்று இப்போ
கூந்தலிற் சிக்கி விட்டேன்.



படிப்பகம்

padippakam


சிக்கலின் வெளியே வந்து
சிந்திய கவிதை தன்னை
இக்கணந் தருவேன் கவிஞ
இறுதியின் இரண்டு நிமிடம்.

கட்டாக வரம்பமைத்துக்
காடெலாம் களனியாக்கி
மொட்டாக நெல் குலுங்கும்
மோகனமே தமிழீழம்.

தமிழீழம் வடக்கினிலே
த ரணிபுகழ் சுதுமலையில்
இனிதான கவிபுனையும்
இராஜ மனோகரன் யான்.

யான் அன்று முட்டாளாய்
நல்லதமிழீழம் விட்டு
வான் பறந்து வந்தின்று
வதிவதோ சீமையிலே.

சீமையிலே வாழ்ந்தாலும்
சீரியதோர் அந்தாதி
வானலையில் வளரவிட்டேன்
வானொலியாம் சீமையிலே.

சீமையின் துரைமாரும்
சிறக்கவே இலங்கைக்கு
ஊமையாம் சுதந்திரத்தை
உலகறியத் தந்தபோது...

போதலர்ந்த மலராகிப்
பொழுதலர்ந்த பூவாகிக்
காதுவரை பல்லிளித்துக்
கண்டுண்டோம் முட்டாளாய்.


படிப்பகம்

padippakam



முட்டாளா யன்றுநாம்
முழுப்பேரும் கைஉயர்த்திப்
பட்டோலை எழுதிநின்றோம்
பாரிலே அடிமையென.

அடிமையென வந்தபின்னும்
அடைந்தோமா அறிவுநிலை
குடிமையல்ல நாமெவர்க்கும்
கூட்டினிலே அடைத்துவிட.

அடைத்துவிட்டுப் பழகியதால்
அடிமைநிலை உணராமல்
உடைத்தெறிய நினைக்காமல்
உள்ளுக்குள் அடிபட்டோம்.

அடிபட்டு முட்டாளாய்
அறிவற்று இருக்கையிலே
படிகட்டிச் சாதிவைத்துப்
பழிசேர்த்து வாழ்கையிலே...

வாழ்வாங்கு வாழாமல்
வையத்தில் நலிகையிலே
பாழ்பட்டுச் சிங்களத்தின்
பட்டாளம் சுட்டனரே.

சுட்டதனாற் சிங்களத்தார்
சூடுகொண்டு சிந்தையிலே
விட்டனரே முட்டாள்(த்)தனம்
வீறுகொள் தமிழ்மறவர்.

மறவர்பலர் இருந்தாலும்
மறந்துநின்றார் ஒற்றுமையை
உறவுமுறை இருந்தாலும்
உயிர்கொள்வோம் பதவிக்காய்.



படிப்பகம்

padippakam


பதவியொன்றே எமக்கென்றும்
பாழ்பட்ட இலக்காகும்
பதவிக்காய் எம்மினத்தைப்
பாழடித்த முட்டாள்கள்.

முட்டாளாய் எம்மைநாம்
முடிவுவரை காட்டிநின்று
எட்டாத தூரத்தில்
எறிந்துவிட்டோம் விடுதலையை.

விடுதலை எம்மை நாட
வீழ்ந்தவெம் வாழ்வுயரக்
கடுகியே காணவேண்டும்
களங்கமில் ஒற்றுமையே.

ஒற்றுமை காணாவிடில்
ஒன்றுமே காணமாட்டோம்
விற்றுமே மானமெல்லாம்
வீழ்ந்திடும் வாழ்வுகாண்போம்.

காண்பதால் ஒற்றுமையைக்
காண்போமே தமிழின் ஈழம்
வீண்பகை வேண்டாம் கேட்பீர்
வீணராய் முட்டாளாகோம்.

ஆகியே முட்டாளாக
ஆண்டுமோ ஐம்பதின்மேல்
ஆகிடு மனைத்தும் இனிதாய்
அன்பினால் இட்டாற் கட்டு.

01.04.1999



படிப்பகம்

padippakam


# புத்தாண்டிற் புனித பூமி

வட தமிழீழம் ஓர் வளம் மிகுமூர்
இட மமிழ்தாகும் இதமிகு சுதுமலை
பட வொருவாளாய்ப் பதிதனில் வளர்ந்து
இட மிங்கிலாந்தாய்த் இருப்பவ னின்று.

அர சனுமினியனும் அடையுமே பொருள்
பேர துஇராஜ மனோகர னின் றுன்
பிர சவ களத்திலே சரச மதாடப்
சிர மது வந்த கவி மழை தன்னைக் ...

கர மது தவழ்ந்து கனிதர மொழிவான்
உர மது பெறவே உளமது உறவே
வரு வள வாண்டை வாழ்த்தியே யிங்கு
இரு கரங் குவித்து இடுமின் வணக்கம்!

புத் தாண் டதனிற் புனித பூமி
எத் திசை யுதித் தெழுந்திடு மென்று
இத் தகு வானலை இது தலைப்பென்று
எத் திற மளந்து உலாவர விட்டீர்?

புனித மென்றிங்கு இரண்டே யுண்டு
இனிய காதலொன் றுமற் றொன்று
முனிவ ரடையும் மோன நிலையே
கனியு மிங்கே கவினுறப் புனிதம்.

குலவு மன்பாற் குலவியே நிற்பின்
நிலவு வரையு மடைந்து மென்ன
நிலவ அன்பும் நிலத்தில் வழியென்?
பலவு மிங்கே பறைந்து மென்ன.


படிப்பகம்

padippakam


புனித புத்தர் புனிதப் பல்லைத்
தனியே வைத்துத் தரணி யழித்து
அநியாய மனைத்து மகிலஞ்சேரப்
பணியே கொண்ட பழிசேர் அரசு.

இதுபோ லின்று எத்தனை யரசு
கதியறு நிலையிற் கதறிடு மாந்தர்
பதியிழந் தெங்கும் பரிதவித் தோடி
உதவியு மின்றி உருவும் குலைந்து...

பிறந்த பொன்னாடு பெற்றதாய் தந்தை
சிறந்த நற்சுற்றம் சீரிய உறவு
இறந்த தோர்கால மாகிட வெங்கும்
பறந்து சிதறியே பரிதவித் தலையும்...

பூமியா விங்கு புனித மடைந்திடும்
சாமியாய் இங்கு சரணம் பாடியே
'ஆமி'யோ டியங்கி அழிவையே செய்யும்
பூமிக்கா புனிதம் புத்தாண் டதனில்?

காதலா லுலகம் கட்டுண் டிட்டால்
மோதலு மில்லை மொழியங்கு அன்பே
பாதகஞ் செய்யப் பாவிய ரிருக்கார்
சோதர ராயினுஞ் சுட்டிடும் வழக்கம்...

காவிய மாகும் கதியது மில்லை
மேவிடு மன்பால் மேவிடும் புனிதம்
பாவிய ரதிகம் பாரிலே யதனாற்
கூவியே வாழ்த்திக் கொள்பலனேது?

புத் தாண் டதனிற் புனித பூமி
எத் தாண் டாயினு மிங்கே யேது
பத் தாண் டல்லப் பலயுகங் கழிந்தும்
புத் தாண் டிருக்கும் புனித மிருக்குமா?



படிப்பகம்

padippakam


புனிதம் வேண்டாம் புண்ணியங் கூட
இனியும் இங்கே இருக்க வேண்டாம்
மனிதம் தன்னை மதிக்கும் மனமே
புனித மென்னும் புண்ணியஞ் செய்வோம்.

மனிதம் தன்னை மதிப்போ மதனாற்
குனியும் வாழ்வைக் குவலய முயர்த்திக்
கனியும் நன்மையைக் கண்டே யதனுடை
நுனியை யடைவோம் நுகர்வோ மின்பம்.

ஒற்றுமை கண்டு ஒருமுகங் கொண்டு
பற்றுமே யின்றிப் பாரிலே அழிவினிற்
கற்றுமே காதல் காட்டிடி லன்பே
மற்றுமோர் புனிதம் மண்ணிலே யெதற்கு?

என்தமிழ் உறவே என்தமி ழீழத்
தண்டமிழ்த் தாயே தருவா னொலியே
கண்டிடு மாண்டு கனிந்திட வின்பம்
என்னுடை இதய இன்தமிழ் வணக்கம்!

08.04.1999


படிப்பகம்

padippakam



# ஓரணிப் பேரணி உறுதிக்கு ஒரு வழி

தாரணி புகழ்பெறு தமிழ் ஈழம்வடக்கு
ஏரணி செயல்மிகு எழில் சுதுமலை ஊர்
வேரணி கொள்ராஜ மனோ கரனின்று
நீரணி சூழிங்கிலாந் தில் இன் வணக்கம்.

ஓரணிப் பேரணி உறுதிக்கு ஒருவழி
ஓரணிப் பேரணி உறுதிக்கு மட்டுமா
ஓரணிப் பேரணி உயர்வுக்கு மதுவழி
ஓரணிப் பேரணி உலகுய்க்கு மோர்வழி.

தாரணி வேந்தர் தமக்குள்ளே முன்னர்
போரணி பூண்டு புன்மைகள் சேர்த்தார்
யாரணி கொண்டார் நம்முடை எதிரணி
தேரணி நின்றனர் தீர்த்தனர் தமி ழணி.

ஊரணி செய்து உலவிய தமிழர்யாம்
போரணி செய்து புதுவகை இன்னல்கள்
கூரணி ஆகக் குவியவே கூட்டமாய்
ஊரணி விட்டே உலகெலாம் பறந்தோம்.

பாரணி செய்து பறந்துமே நிரப்பினோம்
தாரணி யெங்கும் தாவிய தமிழர்யாம்
ஓரணி நின்று ஒருமுகம் கொண்டால்
வேறணி யெதற்கு வெல்வரோ எதிரணி.

பேரணி பலவணி பெறுமணி நல்லணி
காரணி ஒற்றுமை காணணி அவ்வணி
சீரணி எய்தணி சிறப்பணி எமதணி
ஓரணிப் பேரணி ஒற்றுமை கொள்ளணி.



படிப்பகம்

padippakam



ஓரணி எம்மணி ஒற்றுமைப் பேரணி
சீரணி யாகநாம் செய்தணி சேர்த்திடில்
பாரணி மாந்தரும் பார்த்துமே அறிகுவார்
நேரணி யெம்மணி நேர்த்தியில் அம்மணி.

போரணி செய்துமே புதைத்துடல் செம்மணி
பாரணி எங்குமே படையணி எம்மண்ணில்
காரணி காண்குவார் கயவரும் இம்மண்ணில்
நீரணி கொண்டுமே நிலவிடும் கண்மணி.

ஓரணிப் பேரணி ஊரணி சேரணி
யாரணி தேரநீ பாரணி சூரணி
சீரணி யாரணி தாரணி தமிழணி
போரணி ஓரணி சேரநீ யாரினி...

(ஓர் அணிப் பேரணி – ஊர் அணிசேர் அணி
யார் அணி? தேர நீ பார். அணிசூர் அணி –
சீர் அணி – யார் அணி? தார் அணி தமிழ் அணி!
போர் அணி – ஓரணி சேர நீ – யார் இனி...)

நீரணி உலகிலே நின்னையே வெல்அணி
பூரணி யாகவே பொலிவளே தமிழ்மணி
தாரணி யவள்புகழ் தருவதே எம்மணி
ஓரணி நில்லணி ஒற்றுமைப் பேரணி.

ஓரணிப் பேரணி உறுதிக்கு ஒருவழி
ஓரணிப் பேரணி உறுதிக்கு மட்டுமா
ஓரணிப் பேரணி உயர்வுக்கு மதுவழி
ஓரணிப் பேரணி உலகுய்க்கு மோர்வழி.

23.04.1999



படிப்பகம்

padippakam



# உலவும் காற்றே நீதி சொல்லு

வாடை கொண்டல் வளரும் சோளகம்
கோடை முடிந்தாற் கோதிடும் கச்சான்
ஓடை எல்லாம் ஓடிடும் காற்று
ஒழுங்காய் உலவும் ஒண் தமிழீழம்.

ஈழம் வடக்கில் இசைந்த யாழ்ப்பாணம்
இலங்கும் ஓரூர் இனிய சுதுமலை
கோலம் கொள்கவி இராஜ மனோகரன்
கொண்டது வாழ்வு இன் றிங்கிலாந்து.

*உலவும் காற்றே உரைப்பாய் நீதி*
*உரைத்தாய் கவிஞ உன் பெருந்தலைப்பு*
*பலவும் பத்தும் படித்தவன் இன்று*
*பார்த்தா அமைத்தாய் பாவின் தலைப்பு?*

*எதையும் கண்டும் எதையுமே செய்யாது*
*என்றும் இருப்பவன் நீதியா சொல்வான்?*
*கதையும் உண்டா காற்றுடை நீதிக்குக்*
*கனவிலே கூடக் கனிந்தது உண்டா?*

*நீதியின் படிக்கு வாழ்பவன் மட்டுமே*
*நிலத்தில் நீதி சொல்லுதல் நீதியாம்*
*நீதியின் நிழலே நிலவிடக் கூட*
*நியதியே இல்லாக் காற்றுக்கு நீதியா?*

*மலரையும் தொடுவான் மனதையும் கவர்வான்*
*மலத்தையும் தொட்டு மனம் சலித்திடுவான்*
*பலரையும் தொடுவான் பண்ணையும் தொடுவான்*
*பாட்டிலே வந்து பலரையும் கவர்வான்.*



படிப்பகம்

padippakam



அடுத்தவன் மனைவி அருந்ததி அன்னாள்
அவளையும் தொடுவான் அது அவன் நீதி
உடுத்தவன் உடையை உயர்த்தவும் செய்வான்
உரைத்திட நீதி உணர்த்துவாய் தகுதி.

எரிகின்ற வீட்டை எரிமலை ஆக்கியே
எரித்துமே முடித்து இன்பமாய் அமர்வான்
சரிகின்ற மரத்தைச் சரித்துமே விழுத்திச்
சாகசச் சிரிப்பிலே சந்தமே பாடுவான்.

நரியின் புத்தியும் இவனுக்கு இல்லை
நல்ல புத்தியும் இவனுக்கு இல்லை
விரியும் தீமையும் விரும்பும் நன்மையும்
விழைபவன் சமனாய் விளையும் என் நீதி?

ஈழ மண்ணில் இத்துணைத் தீமை
இவ்வளவு நாளும் இயல்பாய்ப் போயும்
கோலம் அழித்துக் கொண்டுமே புதைக்கக்
கொண்டவோர் சாட்சி கொண்டவன் காற்றே.

எத்துணைப் பெண்கள் எத்தர்கள் கையில்
எமன் உலகெய்த எதுவுஞ் செய்யாது
அத்துணை நேரமும் அசையாது நின்று
அமைதி காத்தவன் அவன் காற் றொன்றே.

எத்துணை நீதி அவனிடம் கிடைக்கும்
எனவே காற்றே என்றுமே உன்னை
எத்துணை சொல்லினும் என்றுமே நம்பா
இன்தமிழ்க் கவிஞன் இயம்புவேன் ஒன்று.

இத்துணைத் துன்பமும் இன்றே அகலும்
எம்மவர் எல்லாம் ஒற்றுமை பேணி
எத்துணைப் பகைவர் எவர் வரின் என்ன
என்னால் முடியும் என்றுமே நம்பி...



படிப்பகம்

padippakam


*இத்தரை தன்னில் இயங்கினால் என்றும்*
*இருப்பவர் யாரே இங்கெமக் கெதிரி*
*முத்திரை இன்றி முகவரி இன்றி*
*மூழ்கிடும் வாழ்வு முகிழ்த்திடும் இன்றே!*

13.05.1999



படிப்பகம்

padippakam


# எங்கள் சோதரர் தீயினிலே சொந்தங்கள் நாங்களோ பாரினிலே

எங்கள் தமிழீழம் வடக்கினிலே
இனிய ஊர்தென் சுதுமலையின்
தங்கத் தமிழ்தன்னைக் கற்றதனால்(த்)
தருவேன் கவிராஜ மனோகரன்.

வங்கக் கடலங்கு வடக்கினிலே
வளைத்து நின்றது இந்துக்கடல்
சிங்கக் கொடிகொண்ட சிறிலங்கா
சிவந்தது தமிழீழம் குருதியிலே.

எங்கள் சோதரர் தீயினிலே
சொந்தங்கள் நாங்களோ பாரினிலே
எங்கள் சோதரர் தீவினிலே
சொந்தங்கள் நாங்களோ பாரினிலே.

தீயிலே சோதரர் வெந்து என்ன
திரும்பியும் நாமங்கு பார்ப்பதில்லை
நோயிலே சோதரர் நைந்து என்ன
நொடிதானும் எண்ணியே கொள்வதில்லை.

பாயிலே ஒன்றாகப் படுத்தவர்கள்
பஞ்சணை கண்டதும் மறந்துவிட்டோம்
நோயிலே ஒருகஞ்சி குடித்தவர்கள்
நொந்தவர் அவரென்று ஒதுக்கிவிட்டோம்.

காயிலே ஒன்றாக மரத்துதித்தோம்
கனிந்ததும் பலதிசை பிரிந்துவிட்டோம்
வாயிலே ஏதோதோ கூறிவிட்டு
வயிறார உண்டதும் சரிந்துவிட்டோம்.


படிப்பகம்

padippakam



தீயிலே நின்றாரை எண்ணவேண்டாம்
தினமும் அவர்தம்மை நினைக்கவேண்டாம்
தாயிலே அவர்கொண்ட பாசந்தன்னால்(த்)
தமிழீழம் காணவெனத் துணிந்தார்தம்மை...

தாயான தமிழ்பெற்ற சோதரரே நாம்
தரணியெங்கும் இன்று சிதறிநின்றும்
போயாள நாமங்கு வேண்டாம் கண்டீர்
போராடும் தமிழீழ இளவல்தம்மைத்...

தீயிலே போடுகிறார் என்ற உண்மை
திருமகளை ஒத்தவர்கள் உடலந்தன்னைக்
காயிலே உதிர்த்திட்டார் மண்ணுள் என்று
காண்பவர்கெல்லாம் நீர் கூறல் போதும்.

தீயிலே அவரங்கு இருப்பதனால்(த்)
திருச்சேர நாமிங்கு வாழுகின்றோம்
பாயிலே அவரங்கு படுத்ததுவே
பஞ்சணை எமக்கிங்கு ஆகியதே.

வாயிலே வந்திட்ட ஒற்றுமையை
வரித்திடில் வாழ்வியல் நியதியாகக்
கோயிலே அவர்தமக்கு அமைக்கவேண்டாம்
கொள்கையில் உயர்ந்திடில்(த்) தமிழே வாழும்.

01.07.1999



படிப்பகம்

padippakam



# துயர் களைய அயர்வு கொள்ளோம்

துயர் களைந்து துன்பமின்றிச்
சுற்றமெல்லாம் சூழ்ந்து வாழக்
கய வரென்று யாருமின்றிக்
களித்தவூர் சுதுமலை யான்...

மயல் கொண்டே பெற்றவர்கள்
மனம்மகிழ என்னுன்னை
அயர் வதிகம் ஆகிப்பெற்று
ஆசையுடன் இட்டுவைத்த...

பெயர் இராஜ மனோகரன்
பேணிவென் நலமெல்லாம்
பயம் என்ற பெயர்சொல்லிப்
பாய்ந்தின்று பறந்துவந்து...

உயர் வாழ்வு காணவென
உள்ளதுவோ இங்கிலாந்து
அயர் வில்லை உழைப்பதற்கு
ஆசைக்கும் அளவில்லை.

தயவு என்ற எதிர்பார்ப்புத்
தாராளம் எமக் கதுவே
நயம் என்றால் நண்பனையும்
நலங்கெடுக்கும் இனம்தமிழர்.

கறை யானே புற்றெடுக்கக்
காணும் குடி பாம்பாகும்
மறை வாக இருந்தாலும்
மனம் நிறைய நஞ்சிருக்கும்.



படிப்பகம்

padippakam



அயர் வில்லா மனத்தோடு
ஆரையும் அனல் இடுவார்
உயர் வவர்க்கு வருமென்றால்
உடன்பிறந்தார் உயிர்பறிப்பர்.

தாய் அங்கு பிச்சையிலே
தனயன் இங்கு அன்னதானம்
நோய் அங்கு உச்சநிலை
நோவது யார் இங்கதற்கு.

பாய் கூட இல்லாமல்
படுப்பதங்கு நிலந்தொட்டு
நாய் கூடப் பஞ்சணையில்
நம் வீட்டில் இங்கிருக்கும்.

துயர் அங்கு இருப்பதனால்
துடைக் கின்றோம் எம்கவலை
பயம் அங்கு இருப்பதனால்
பார் எங்கும் அகதிநிலை.

துயர் அங்கு இருக்கட்டும்
துயர் களைந்தால் நிலையென்ன
உயர் வாழ்வை இங்குவிட்டு
ஊர்போக முடியுமாமோ?

அளவாகப் பணம் அனுப்பி
அத்துயரம் பேண வேண்டும்
முழுதாக அனுப்பி விட்டால்
முடிந்து விடும் போருமங்கு.

துயர் களையப் பணமனுப்பித்
துயர் தன்னைத் தேடவேண்டாம்
துயர் நிலைக்கப் பணமனுப்பும்
துயர் இங்கு தொலைந்துவிடும்.



படிப்பகம்

padippakam



கயமை அல்ல இது கண்டீர்
கன்னித்தமிழர் பண்பிலொன்று
நயமென்றால் அது எனக்கே
நலமென்றால் என்னலமே.

உயர்வெல்லாம் இழந்து இன்று
உலகமெலாம் சிதறிமற்றோர்
தயவெல்லாம் நம்பியிங்கு
தாள்பணிந்து வாழ்கின்றோம்.

உயர்வில்லை நயமில்லை
உருப்படியாய் ஒன்றுமில்லை
அயர்வின்றி உழைத்திட்டால்
அனைவரும் ஒற்றுமையாய் ...

துயர்களைந்தால்(த்) தூயதமிழ்
தொலைத்தமுடி சூடிவிட்டால்
பயமில்லைப் பாரெங்கும்
பலமிழக்கத் தேவையில்லை.

அயர்வின்றிச் சிந்திப்போம்
அனைவருமே ஒன்றாவோம்
துயர்துடைக்க நீட்டிடுவோம்
துணைக் கரங்கள் ஒன்றாக.

08.07.1999



படிப்பகம்

padippakam



# பேரணி சேர்ந்து பார் விழிக்க
# ஓரணி சேர்ந்து ஓங்கி உரைப்போம்

பேரரணி கண்டு பொங்கியெழுந்த
நேரணி ஈழம் நிலைபெறும் ஊராம்
தேரணி கோயில் திருவணி சுதுமலை
ஓரணி கொண்டு எண்பத்தி யேழில் ...

ஓகஸ்ற் மாதம் நாலாம் நாளாம்
ஆகியது இன்று பன்னிரு ஆண்டு
ஏகியது என்ன எதுவும் இல்லை
ஏகினர் யாவரும் ஈழம் விட்டு.

விட்டுமே ஈழம் விண்பறந் திட்டு
இட்டமோ இல்லை என்றுமே இயம்பிப்
பட்டமும் பதவியும் பணமும் என்றலையும்
கட்டையாம் மனத்துக் கவிஞனே யானும்.

பேரரணி என்றும் ஓரணி என்றும்
தீருமே சிக்கல் சிறக்குமே என்றும்
தாரணி எங்கும் தமிழர்கள் எல்லாம்
ஓரணி என்றும் ஒற்றுமை என்றும்.

கூறிடும் மாந்தரில் யானுமே ஒருவன்
மாறிடும் உள்ளம் மனத்துடைக் கவிஞன்
இராஜ மனோகரன் இயம்பிடுங் கவிதை
ஓரணி சேர்வீர் ஓங்கி உரைப்பீர்.

*அறுபத்தி யொன்றில் அணி அணியாக*
*ஒருபத்து வயதில் ஒவ்வொரு நாளும்*
*வருபத்தி யாக வளர் கச் சேரிமுன்*
*தருவுற் பத்தியாகுந் தமிழர் அரசென...*



படிப்பகம்

padippakam



பேரணா ரோடு போய் வந்தவன் அன்று
ஒருமுப் பத்தியெட்டு ஆண்டுகள் சென்றும்
கருவுற்ற ஈழம் கனிந் திடவில்லை
உருவுற்ற ஈழம் உயர்ந் தெழவில்லை.

காரணம் என்ன கனக்க யோசித்துத்
தீரராய் எண்ணச் சிரமமே வேண்டாம்
ஓரணி இல்லை ஒற்றுமை இல்லை
ஓரணி சேர்ந்து ஒளிபெற உழைக்கும்...

சிந்தனை இல்லைச் சிந்தனை முழுதும்
நிந்தனை ஒன்றே நிலவினால் ஓரணி
எந்தனைத் தலைவராய் ஏற்பரோ இன்றேல்
சந்தியில் மானம் சாயினும் மாட்டார்.

காட்டியே கொடுத்துக் கட்சிவே றமைத்து
மாட்டியே எவரையும் மண்ணிலே முடித்து
ஆட்டியே தலையை ஆள்பவர் அசைவில்
ஆட்டியே தலையை அணிந்து முக்காடு...

பூட்டியே எவரையும் புலியெனச் சிறையிலே
நாட்டிலே எவரையும் நலிவுறச் செய்துமே
ஏட்டிலே கொள்கை எமக்குந் தமிழேயென்று
போட்டுமே என்றும் பொலிந்திடும் நாங்கள்...

ஓரணி சேர்வது உலகிலே நடக்குமா
தாரணி சிதறியும் தருணம் ஒன்றுண்டா
ஓரணி நின்றதாய் ஒருதினம் உண்டா
வேரிலே பிழைத்த வெறுமினம் நாமே.

ஓரணி நில்லோம் ஒற்றுமை கொள்ளோம்
தாரணி எங்கும் தவிப்பினும் சேரோம்
வேறணி நின்று வேதனை காணினும்
தேரவும் மாட்டோம் சிறக்கவும் மாட்டோம்.



படிப்பகம்

padippakam


எமக்கேன் ஒற்றுமை என்றுமே கொள்ளோம்
எமக்கேன் ஓரணி என்றுமே சேரோம்
எமக்கேன் ஈழம் இருப்பது ஐரோப்பா
எமக்கென வீடு என்னுடைக் குடும்பம்.

ஓரணி நின்று ஒற்றுமைப் பட்டால்
யாருமே வந்து நலமுரைத் திட்டால்
தீருமே போரும் திருப்பியே எம்மைப்
பாரிலே இவரும் பணிப்பரே போக.

ஒற்றுமை வேண்டாம் ஒருமுகம் வேண்டாம்
சற்றுமே சூடு சொரணையும் வேண்டாம்
விற்றுமே மானம் விளைத்துமே பணத்தை
முற்றியே வாழ்வை முடித்திடுவோமே!

05.08.1999


படிப்பகம்

padippakam



# ஒளி பிறக்கட்டும் விழி திறக்கட்டும்!

மொழி பிறந்து விழி திறக்கக் களிபெருக்கி வாழ்வளித்து
ஒளி பெருக்குந் தமிழ் ஈழம் ஒளிர் ஊராம் சுதுமலையில்
களி பெருக்கி வாழ் கவிஞன் கானா இராஜ மனோகரன்
பழி பெருக்கி வினை குறுக்கப் படிந்த தின் றிங்கிலாந்து.

ஒளி பிறக்கும் விழி திறக்கும் ஒண்டொடி ஒருத்தி சேரக்
களி பிறக்கும் என்று நீயும் கடல் கடந்தாய் யேர்மனிக்கு
ஒலி பிறழ்ந்துன் விளம் பரத்தை ஓரிரு நாட்களின் முன்
விழி பிதுங்கக் கேட்டுநின்றோம் விளங்க வில்லை ஏதுமய்யா.

மான் தொட்டால் மதிப்புயரும் மதிதொட்டால் மனமுயரும்
மீன் தொட்டால் வினையகலும் மின் தொட்டால் ஊனுருகும்
தேன் தொட்டால்(த்) தெளிவகலுந் தெரியவேண்டு மெமக்கொன்று
ஏன் தொட்டாய் நாவரசா எதைத் தொட்டாய் இயம்பிடுவாய்.

ஒலி பிறழ்ந்த விளம் பரத்தின் உன் பிழையைக் கருவிகளிற்
பழி பெருக்கி இட்டிடாதே பார் அறியும் வானொலியில்
களி பெருக்கும் ஈழமிருந்து கதைக்கின்ற தெளிவெல்லாம்
தெளி விருக்கக் கூறுமையா தெளிவற்ற காரணத்தை.

ஒலி பிறழ்ந்த விளம்பரத்தில் ஒண் கவிஞர் சிக்கி நிற்க
மொழி விளங்க மீட்டுரைத்தார் மொழிசிறக்கச் சுகிபோலும்
களி பெருக்கச் சென்ற கவி கழுத்துவரை தண்ணீருள்
முழி பிதுங்கக் கிணற்றினுள்ளே முக்குளித்து நின்றீரா?

மொழி திறந்து விழி திறந்து பழி துறந்து பார் சிறந்து
களி பிறந்து வழி பிறக்கக் கலி துறந்து கார் துறக்க
மொழி வளர்ந்து களி பெருக்க முடி வளர்ந்து வழி சிறக்க
ஒளி பெருக்கி உலகளந்து உயர்வளந்த தமிழ் இனமே.



படிப்பகம்

padippakam


சிவ னன்று விழி திறக்கச் சீறி நின்றது ஒளி வெள்ளம்
பவ மறுக்க வழி திறக்கப் பைந்தமிழ்முரு கன் பிறந்தான்
தவ மறுத்த அரக்கர்குலம் தானழித்தான் அதன் பின்னர்
புவி மறுக்கும் வகை மணந்து பூவையர் இருவர் என்றான்.

எமை மறந்தான் இன்னும் இங்கு இராக்கதர் இருக்கின்ற
நிலை மறந்தான் இரு பெண்கள் நித்தியமாய் இன்புற்றும்
தனய னென ஓர்பிள்ளை தான் காணான் எமைக் காக்க
வினை காணான் வேல் எதற்கு வேய்ந்தோழில் மயங்கியவன்.

தமிழ்க் கடவுள் உதவ வில்லைத் தனியுதவி யார் செய்வார்
தமிழ் மக்காள் தரணி தன்னிற் தன்கையே தனக் குதவி
அமிழ் தினிய தமிழ் காக்க ஆரு மெமக் குதவ மாட்டார்
தமிழ் அழிந்தால் நாம் அழிவோம் தமிழழியும் நில மழிந்தால்.

நிலம் விட்டு வந்தவர் யாம் நிதம் நினைத்துப் பயன் என்ன
குலந் தழைத்துக் குவலயத்திற் குன் றெனவே நாம் வாழ
நிலம் பிறத்தி அத னால்நீர் நினை வினிலும் கனவி னிலும்
பலம் பெருக்கத் தமிழ் பேசிப் பைந்தமிழை வளர்த் திடுவீர்.

ஒளி பெருக்கும் வழி காட்டும் ஒப்பற்ற நூல்க ளெல்லாம்
களி பெருக்கும் வகை தமிழிற் கணக்கவே உண் டிங்கே
ஒளி பெருக்கும் வழி தெரிய உள்ள தெல்லாம் வாசிப்பீர்
விழி திறப்போம் விரை வினிலே விய னுலகிற் சிறந்திடவே.

ஒளி பிறந்து விழி திறந்தால் ஒற்றுமை நன் றோங்கிடுமே
விழி திறந்து ஒளி இருந்தால் விளங்கிடுமே நல் இதயம்
மொழி தெரிந்து ஒலி சிறந்தால் மோகனமே எம் வாழ்வு
களி பெருக்கிக் காலமெலாம் காதலினாற் கவினுறுவோம்.

19.08.1999


படிப்பகம்

padippakam



# செம்மணியில் எம்மணிகள்

இந்து மாகடலில் இலங்கும் முத்துமணி
இலங்கை எனுந்தீவில் இருக்கும் இரு நாட்டில்
முந்து தமிழீழம் முகிழ்த்த சுதுமலையில்
முன்னாட் பிறந்துபின் முன்வினை வழிகாட்ட
வந்து இங்கிலாந்தில் வளஞ்சேர்க்க முயன்றிடும்
வளர்கவி இராஜ மனோகரன் வானலைசேர் உறவே
தந்து முதல்வணக்கம் தருகின்ற கவிதைவரி
தமிழின் இனியவரி தாய்மண்ணை வணங்கும்வரி.

செம்மணியில் எம்மணிகள் சீரிழந்த கண்மணிகள்
செந்தமிழின் சீர்சேர்க்கச் சிதைவுற்ற நன்மணிகள்
எம்மணிகள் தம்வாழ்வை எத்தர்களின் கைகளிலே
ஏதிலியாய் இழந்துயிரை எருவிட்டார் உடல்களையே
அம்மணியின் ஆட்சியிலே அரசபடை அடக்குமுறை
அறம்பிழைத்த வரலாற்றின் அதியுச்ச அக்கிரமம்
எம்மணிகள் செங்குருதி ஏற்கவுள்ள நிலைகருதி
எப்போவோ இட்டபெயர் எம்மண்ணிற் செம்மணியே.

படம்பார்த்து மகிழ்ந்தவர்கள் பள்ளியறை துயின்றவர்கள்
பகல்வேலைக் களைப்பாறப் பாயினிலே படுத்தவர்கள்
உடம்பலுப்பில் உலாவிவந்து உள்முற்றம் நின்றவர்கள்
ஊரெல்லை உள்நின்று ஊருக்காய் உழைத்தவர்கள்
நடம்பயிலும் இறைகோயில் நற்றொண்டு செய்தவர்கள்
நல்லவரா யிருந்தென்றும் நல்லதமிழ் வளர்த்தவர்கள்
தடம்புரளா வகைவாழ்வைத் தரமாக்க உழைத்தவர்கள்
தாயாகித் தரணிக்குத் தமிழ்ச்சிறாரை ஈன்றவர்கள்...

புடம்போட்ட தங்கமெனப் பொலிவோடு வாழ்ந்தவர்கள்
பொய்சேரா வாழ்வியற்றிப் புகழ்சேர்த்த உத்தமர்கள்
குடம்போலும் மனங்கொண்டு குனியாத வாழ்வமைக்கக்
குவலயத்திற் கல்விவேண்டிக் கூடத்தை அடைந்தவர்கள்
இடர்நீங்க இன்தொழிலை இதமாக இயற்றியவர்
இரவுபகல் பாராது இரும்பாக்கி உழைத்தவர்கள்
படருமெங்கள் வாழ்வென்று பண்ணான மழலைபேசிப்
பைந்தமிழின் சுவைசேர்க்கும் பள்ளியின் சிறார்கள்...



படிப்பகம்

padippakam


எவர்இல்லைச் செம்மணியுள் எவரில்லை எருவாக
எத்தர்களின் கைகளிலே எவர்உடலம் அழியவில்லை
உவர்மண்ணும் சிவந்துவிட உரமாகி எம்மணிகள்
உள்ளத்தை அழித்துவிட்டு உடல்தந்தார் மண்ணிற்குள்
எவர்வந்தும் சரிந்திடாத இன்தமிழர் வாழ்வின்று
இப்படியாய் விட்டதென்றால் இதன்பிழை எம்மீதன்றோ
எவர்வந்தும் எமைச்சிதைப்பர் எமக்குள்நாம் ஒற்றுமையை
என்றைக்கும் இயற்றாமல் இவ்வாறே இருந்திட்டால்.

எமக்குள்ளே ஒற்றுமையை என்றுநாம் காண்போமோ
எமன்கூட எட்டிநின்று எமைநெருங்கப் பயப்படுவான்
தமக்குள்ளே சண்டையிட்டுத் தரணியிலே தாழ்ந்தவினம்
தமிழரென்ற ஒருவினமே தகவுசேரும் புத்தகத்தில்
எமக்குள்ளே என்றுநாம் எத்தர்களாய் எதிரிக்கு
எமைக்காட்டிக் கொடுக்காமல் இன்வாழ்வு காண்போமோ
எமக்குள்ளே எம்மைநம்பி என்று நாம் வாழ்வோமோ
இதுவேநாம் இயற்றிவிடும் இன்வணக்கம் செம்மணிக்கு!

16.09.1999


படிப்பகம்

padippakam


# தாயக வேள்வியில் தியாக தீபம்

தாயகம் தமிழீழம் என் தாய் தந்தை வழிமண்
தரணியிற் சந்ததி என் தரம்வரை வளர்மண்
பாயிலே படுப்பினும் நலம் பதித்திடும் சுதுமலை
பரம்பரை வளர்ந்தின்று பாய்ந்தது இங்கிலாந்து
நோயுடை அரசியல் மிக நொந்ததால் விட்டுமே
நோவுள மனத்தோடு வேறு நோயின்றி வாழ்பவன்
காயிலே கனிந்தவன் நற் கவிஞனாய் இனிப்பவன்
காதலால் யாரையும் கவர் இராஜ மனோகரன்.

வேள்வி என்பது பலவகைப்படும்...
விரும்பிய காதலன் மணவிழா முன்னர்
மருவிட இசைவது மங்கையின் வேள்வி!

வேள்வி என்பது பலவகைப்படும்...
வேதனை தாங்கி வெம்முடல் தன்னுள்
காதலின் குழந்தையைக் காவுதல் வேள்வி!

வேள்வி என்பது பலவகைப்படும்...
வேதியர் வேதம் ஓதியே நெய்யை
வெந்திடும் தணலுள் விடுவதும் வேள்வி!

வேள்வி என்பது பலவகைப்படும்...
வேதனை என்பதை வேண்டியே ஏற்றுச்
சாதனை புரிந்திடல் சாதுக்கள் வேள்வி!

இத்தனை வேள்விக்கும் தன்னலம் உண்டு
அத்தனை யும் இயற்றி அடைவது சுகமே
எத்தனை தரமோ பின் அத்தனை சுகமே
எத்துணை தரமோ பின் அத்துணை நலமே!

இத்தனை வேள்விக்கும் இடைவெளி விட்டுக்
கொத்தென எழுந்து பெருங் குன்றென உயர்ந்து
மெத்தெனச் சிறந்த தனி வேள்வியொன் றுண்டு
அத்துணைச் சிறப்பு அது தியாக வேள்வி!


படிப்பகம்

padippakam


தன்னலம் அற்றது தன்னைப் பிறருக்காய்
மண்ணிலே அழிப்பது மைந்தரும் தமிழின்
பெண்களின் வீரரும் போரிலே தம்மை
மண்ணிலே இணைப்பது மண்விடுதலைக்கு.

இவ்வகைத் தியாகத்தை இறப்பினை ஒருவன்
கைவகை ஆயுதம் காய்ந்திட ஏற்றலின்
எவ்வகை உணவும் ஏற்காது என்றும்
மெய்யது அணுவாய் மெலிந்திட ஏற்று...

மெய்யதாய் எம்முன் மேனியை ஒடுக்கிப்
பையவே உயிரைப் பாரிலே நீத்தான்
ஐயகோ அதுவே அன்பெனும் வேள்வி
செய்வரோ யாரும் திலீபா உனைப்போல்!

புத்தனில் உயர்ந்தாய் புனிதம் நீ ஆனாய்
உத்தமர் காந்தியில் உயர்ந்தவன் ஆனாய்
பெத்தலகேம் வாழ் யேசுவை நிகர்த்தாய்
இத்தரையில் எமக்காய் இன்னுயிர் தந்தே!

தியாகம் என்பது தன்னலம் தன்னைத்
துளியும் இல்லாது துணிவு நிரம்பிடத்
தன்னை அளிப்பது தன்னை அழிப்பது
நியாயம் என்பது நிலத்திலே பொய்க்கையில்...

நீதி கேட்டிட நியாயம் துலங்கிட
நீதி தேவனாம் இயமனைத் தழுவியே
தியாக வேள்வியில் தீயாய் மாறியே
அராஜகம் தன்னை அழித்திடல் தியாகமே
திலீபா உன்னைத் தியானத்து நாளுமே
நியாயம் கேட்கின்றோம் நிம்மதி வேண்டி
நில்லாது என்றும் நிமிர்ந்தே தமிழினம்
நிலத்தில் ஓர்நாடு நிமிரும் வரையும்
தமிழின் இனமே தரணியிற் சிதறிய
தமிழின் இனமே திலீபன் பெயரால்
எமது இனத்தின் ஒற்றுமை பேணியே
எமது தியாக ஒளியினைக் காண்போம்!



படிப்பகம்

padippakam



அமிழ்தினில் இனியவெம் தாயக மண்
ஆனந்த ஊற்றெனும் அறிவுடைமண்
இனிதுமே எமையீன்ற ஈழத்துமண்
ஈன்றவள் தமிழாள் இலங்கி என்றுமே
உரிமையில் நாம்வாழ்ந்த உயரிய செம்மண்
ஊனமேயில்லாத உயர்மொழி வளர்மண்
எல்லோரும் எல்லாமும் பெற்று வளர்ந்தே
ஏற்றங்கள் பெற்று நாம் இலங்கிய செம்மண்
ஐவகைப் புலனையும் அணைத்திடும் எம்மண்
ஒற்றுமை என்பது மட்டுமே இல்லாது
ஓரணி நிற்பதை உணராதோர் வளர்மண்
ஔடதம் ஒற்றுமை ஆக்கியே என்றும்
எஃகாய் இறுகியே எம் விழி திறப்போம்!

23.09.1999



படிப்பகம்

padippakam



# அலையலையாய்க் குலைந்தோம்

அலையலையாய் அலையமுன்னர் - நாம்
அணியணியாய்க் குலையமுன்னர்
மலைமலையாய்த் துன்பங்கள் - எம்
மடிமீது நிறைய முன்னர்...

சுதுமலையிற் பிறந்தவன் யான் - என்
சுதந்திரத்தை அலையவிட்டுக்
கதிநிலையிற் கண்டவன் யான் - என்
கதிதேடி அகதி ஆனோன்.

இவன் இராஜ மனோகரன் - எம்
இழிந்த இவ் அலைவு நிலை
யுவன் வயதில் இருந்துணர்ந்த - என்
உள்ளத்து உண்மைகளை...

மனம் விட்டுக் கூறுகின்றேன் - என்
மனம் மிகவும் பொறுக்காமல்
இனம் கொண்ட சாப மாமோ - இது
என்றுதான் அகன்றிடுமோ?

அலைந்தோம் நாம் அலைந்தோம் — ஆனால்
அது கூடப் பரவாயில்லைக்
குலைந்தோம் உருக் குலைந்தோம் — அதன்
குறை எம் மீது அன்றோ!

அன்றிருந்த கண்டம் லெமூரியா — அது
அன்னை பூமியில் வளர்ந்திருந்த
தென்றிசைக் கண்டம் திராவிடர்யாம் — அன்று
திசை எல்லாம் பரவிய மானுடர் யாம்.



படிப்பகம்

padippakam



தொங்க வுள்ளது எம் தமிழ்த் தலைகள்
    தூக்கிடுங் காரணம் தன்னுடைத் தலையை
அங்கொரு மங்கை அனைத்தையும் இழந்து
    அந்தரம் மிகுந்து அழித்தனள் என்று
எங்களின் நாட்டை ஏன் வந்தடைந்தாய்
    ஏதுமற்றாரை ஏன் நீ அழித்தாய்
மங்கையர் மானம் மண்ணிலேன் புதைத்தாய்
    மதியினை இழந்தேன் மானத்தை இழந்தாய்!

மரணக் கயிற்றில் உறவின் உயிர்களை
    மாட்ட முயலும் மதியிலா அரசே
தருணம் எமக்கும் தாரணி வந்திடும்
    தாய்த்தமிழ் ஒருநாள்(த்) தன்னை ஆளுவாள்!

04.11.1999



படிப்பகம்

padippakam



# தன்னுயிர் ஈந்த தாயகப் புதல்வர்

என்னுயிர் காக்க என்னூர் விட்டு
ஏவிடும் விமானம் தாவியே பறந்து
தன்னுயிர் தந்த தாயினைத் தந்தையைத்
தரணியை விடுத்துப் பரணியே பாடி
இன்னுயிர் காக்கும் இராஜ மனோகரன்
இருந்தது சுதுமலை இன் றிங்கிலாந்து
தன்னுயிர் ஈந்து தாயகம் ஈட்டும்
தமிழரைப் பிரிந்து தந்திடும் கவிதை.

எம்முயிர் காத்திடத் தம்முயிர் தந்தனர்
எம் நலங்காத்திடத் தம்நலங் கெட்டனர்
மன்னுயிர் காத்திட மண்வளம் பேணிடத்
தம்முடல் எருவெனத் தரணியில் இட்டனர்
கண்ணயர் வெய்திடார் காலயர் வெண்ணிடார்
காலமெலாம் அவர் காலனை அணைத்துமே
மண்ணுயர் வெய்திட மடிந்தவர் மானம்
மட்டுமே அவருடை மகிழ்தரும் சொத்து.

பெண்ணிலே மயங்கிப் பின்னுமே சென்று
பொன்னுமே தேடிப் புதல்வரும் பெற்று
மண்ணையுந் தேடி மடிவதே வாழ்வு என
எம்மையே நாமிங்கு ஏமாற்றி இருக்கப்
பெண்ணையும் பொன்னையும் மண்ணையும் காக்கப்
பெண்ணையும் பொன்னையும் மண்ணையும் நீத்தார்
பெண்ணெனப் பிறந்த பிள்ளைகள் கூடத்
தம்முயிர் நீத்துத் தாய்மையில் உயர்ந்தார்.

தம்முயிர் ஈந்தார் தாயகப் புதல்வர்
தமிழ் அரசாளத் தமிழர்கள் வாழத்
தம்முயிர் ஈந்தார் தாயகப் புதல்வர்
தன்மானத்துடனே தமிழ் நலம் பேணத்
தம்முயிர் ஈந்தார் தாயகப் புதல்வர்
தமிழீழம் கண்டு தமிழர்கள் வாழத்
தம்முயிர் ஈந்தார் தாயகப் புதல்வர்
தமிழர்கள் ஒன்றாய்த் தரணியில் வாழ.



படிப்பகம்

padippakam


அதிகாரம் வந்துவிட்டால் அரசு என்ன – இங்கு
ஆண்டிகூட ஒரு கணத்தில்(த்) தன்னை மறப்பான்
சதிகார வேலைபல செய்து என்றும் – தன்
தரத்தையே குறைப்பதனை நாளுங் காண்போம்
பொதுவாக இதுநிலைமை என்றாற் புவியீர் – இப்
பொல்லாத அரசா நற் சமா தானம் செய்யும்
எதுவாக விருந்தாலும் தமிழை அழித்தல் – தம்
இயல்பாகக் கொண்டவரே கொழும்பின் அரசார்.

விலைபெரிது விதிவலிது வீரர்சிறிது விதியெதிர்த்து
மலைபெரிதாய்ப் படைவரினும் மனத்தின் திடமோ
நிலைதிரியா தென்தென்றும் படையை நடத்தத்
தலைபெரிதா இல்லையில்லைத் தன்மானம் பெரிது.

வாந்தியைத் தின்று மீண்டும் வாந்தி எடுக்கும்
வருத்தத்தின் நாய்போலே பொதியைச் செய்து
சாந்தியைத் தருகின்றோம் என்று மீண்டும்
தந்ததையே தருகின்றார் தூசைத் தட்டி.

சிந்தையிலே சீரில்லாச் சிங்களத்தார்
சிறிதேனும் மாற்றம் இல்லை அன்றிருந்து
மந்தையிலே உள்ள மாடுகள் கூட
மனதரிலும் சிறப்பாகச் சேர்ந்தே நிற்கும்.

ஆதலினால்(த்) தமிழ் நிலத்தீர் ஒன்றாய் நின்றால்
அதுபோதும் என்றும் தமிழ் தரணி ஆளும்
சாதலினால் எம்மினத்தார் சாதிப் பதற்குச்
சமாதானம் சமத்துவமாய் வந்தே நிற்கும்!

03.02.2002



படிப்பகம்

padippakam


# காதல்

காதல் ஈழம் மேற் கருத்தில் மேற்சென்று
கன்னித் தமிழீழம் கதியே எமக்கென்றேன்
சாதல் பரிசென்றார் சரிவராது எனக்கென்று
சந்ததி வாழ்ந்த வீடு தமிழீழ நாடுவிட்டுக்
காதல் உயிர்மேலே கதியோ மேற்கு என்று
வாழ்தல் வேண்டுமென வந்த கவிஞன் யான்
ஓதும் தமிழ்க் கவிதை என்ஊரோ சுதுமலை
ஒளித்தே னிங்கிலாந்தில் ஒளிர இராஜ மனோகரன்.

கடவுளைப் பாடாத கவிஞன் உண்டு – ஆனாற்
காதலைப் பாடாத கவிஞன் இல்லைக்
கடவுளே வந்தாலும் பாடி நிற்பான் – சிவன்
காதல் மனையாளின் கூந்தல் மணம்
கடிதே மண்வந்து பாடி நின்றான் – அவன்
காலை நம்பி வாழ் கவி நாவரச
முடிவே காதலியின் முடிவே எனவின்று – காதல்
மடியே எனவாழ் மதனா என் வணக்கம்!

காதல் என்றால் என்னவென்று பலர்
கருத்து மோதல் செய்வதுண்டு
காதல் என்றால் அன்பு ஒன்றே அது
காட்டும் வழி தன்னை இழத்தல்
ஆதலினால் தானே காதல் என்றும்
அழிவை அடைவதில்லை அந்தக்
காதல் எதன்மீதும் வரலாம் கண்டீர்
கண்ணியம் இருப்பின் என்றும் வாழும்.

அணுவை அழித்தால் அகிலம் அழியும்
அளவில் அமையும் அதிக சக்தி உயிர்
அணுக்கள் அடைந்து நிறையும் சக்தி
அன்பு உடைந்தால் அகிலம் அழியும்.


படிப்பகம்

padippakam


தமிழை உணர்ந்து தமிழால் இணைந்து
 தமிழர் நாங்கள் தமிழர்க்கு என்று
தமிழர் அணியாய்த் தரணி தன்னில்(த்)
 தமிழர் வாழத் தனியோர் அணியாய்...

ஒருவர் மீது ஒருவர் ஆக
 உள்ளோரெல்லாம் காதல் கொண்டு
உருவம் பலதாய் உள்ளம் ஒன்றாய்
 உண்மைக் காதல் உணர்வோமாகில்...

வெல்வோம் ஈழம் விழிப்போம் இன்றே
 நல்லோராக நம்மை உணர்வோம்
வல்லோராக வாழ்வோம் அதற்காய்
 எல்லோர் மீதும் காதல் கொள்வோம்.

10.02.2000


படிப்பகம்

padippakam



# விழித்திருந்தாற் கிட்டுமோ விடிய ஒரு கை விசேடம்

விழித்தொரு பொழுது காதல் விடுத்துப் பின்
விழித்துப் பலஇரவு விழிசொருக எனைப் பெற்று
விழித்துப் பலவழியில் விழியினும் மேலாய் ஓம்பிப்
பழித்தன உலகம் நீக்கிப் பாரிலே சிறக்கச் செய்து
அளித்தவள் எந்தன் அன்னை அவள்துணை எந்தன் தந்தை
ஆதரவாக நின்ற அருமை ஊர் சுதுமலையிற்
கழித்தவன் இளமை எல்லாம் கழிவதின்று இங்கிலாந்து
கவிஞன் யான் இங்கு கந்தையா இராஜ மனோகரன்.

இடைவெளிவிட்டு வந்தேன் இதனுடைப் பொறுப்பு நீயே
இயற்றிடு கவிதைத் தலைப்பு இன்று புதுயுகப் பேரணி
நடைபயில்வாயே ஆனால் நவின்றிட வேண்டும் என்றாய்
படைத்திட வேண்டும் பின்னர் பகர்ந்தது என்னவென்று
படையணி போலேசென்ற பார்புகழ் வியன்னா மன்றில்
பங்குமே இருந்தால் மட்டும் பகர்ந்திட வேண்டும் என்றாய்
தடையென இவற்றைச் சொல்லித் தவிர்த்தனை கவிகள் பலவும்
தக்கநற் கவிஞர் தம்மைத் தரம் பிரித்திட்டு மகிழ்ந்தாய்.

நாவுக்கரசா உனக்கு நானொன்று உரைப்பேன் கேளாய்
நாவிலே மட்டும் தமிழை நயப்பவர் கவிஞர் அல்லர்
பாவுக்காக மட்டும் பரணியே பாடிவிட்டுப்
பஞ்சணை மீது பாவை படிப்பவர் புலவர் அல்லர்
தீவுக்கு வெளியே செல்லத் திருந்து **நுழைவாணை** இல்லைத்
தீவிலே தந்த கடவுச் சீட்டுமே பலருக் கில்லைத்
தாவிக்குதித்து வரவே தகவுசேர் மனமோ உண்டு
தாக்கினாய் அதனாலென்ன தமிழிலே தாக்கின் நீயே.



படிப்பகம்

padippakam


வெற்றிலை மீது பாக்கு விளைந்த நெல்மணிகள் மஞ்சள்
இட்டமாய்ப் பூவும் இளம் எலுமிச்சம் பழமும் வைத்துச்
சற்றுமே தயக்கம் இன்றித் தன் மனவிருப்பும் வைத்து
இட்டதே பொருளாய் எதுவோ இயம்பு கைவிசேடம் அதுவே
மற்றது எல்லாம் மானம் மறைத்திடத் தன் வன்பொருள்
மற்றவர்க்கெல்லாம் உலகில் மமதையிற் காட்டி நிற்க
உற்றதே சாதிஎல்லை உயர்வென உயர்த்திக் காட்ட
உன்மத்தர் உலகிற் காணும் உயர்விலா வழியதாகும்.

வாயாலே கேட்டுப் பெற்றால் மனத்தாலே திட்டி அளித்தால்
வந்தானே இந்த நேரம் வழிவேறு இல்லை என்றால்(த்)
தேயாதோ செல்வம் என்ற தேவியின் தடுப்போடு இட்டால்
தேறாது விசேடம் எனவே தெள்ளிய மனமே வேண்டும்
காயாது எதனைத் தரினும் கண்ணியம் மனதிற் பொங்கக்
கனிவோடு ஏற்கவேண்டும் கன்னிகா தானம் போலே
சாயாத மனத்தின் பெரியீர் தருவேனே விசேடம் ஒன்று
சந்தத்திற் பாட்டே சிறக்கத் தமிழ்மணம் தகுதி காண.

இதுவரை யானும் இந்த இணையிலா வான் அலையில்
இயற்றிய பாக்கள் யாவும் இன்னரு நூலாய்த் தொகுத்து
எதுவரை எங்கு தமிழர் என்றுள நாடு எல்லாம்
எடுத்துமே வரவே உள்ளேன் எடுக்கலாம் ஆறு மாதம்
அதுவரை பொறுத்து நிற்பீர் அருந்தமிழ் உறவின் மிக்கீர்
ஆக்கிடப் பொறுத்தோம் கொஞ்சம் ஆறிடப் பொறுத்தாலென்ன
கதியென ஒன்றுமில்லாது கலங்குவோர்க்கு விசேடமாகக்
காசென வருவதெல்லாம் கருத்தொடு அளிப்போம் நன்றே.

விழித்திருந்தால் விசேடம் வியனுலகிற் கிட்டாது
விடிந்த பொழுது மேலெழுந்து வீழும் பின் மீண்டும்
விழித்திருக்க இயலுமாமோ விழித்தாலும் விடியுமாமோ
விழித்திருந்து கண்ட பலன் விண்ணிலே பறந்ததுவே
விழித்திருந்து பலனில்லை விழிப்பாக இருக்க வேண்டும்
விழிப்பாக இருந்திருந்தால் விடிந்திருக்கும் எம்வாழ்வு
களித்திருப்போம் தமிழீழம் கன்னித் தமிழ் நாட்டில்
காலமின்னும் காயவில்லைக் காட்டினால் ஒற்றுமையே.

20.04.2000


படிப்பகம்

padippakam



# வெற்றிச் செய்தி பற்றி நின்றோம்
# ஏற்றம் காண என்ன செய்வோம்

சுந்தர வாழ்வைச் சுதுமலை மண்ணில்
சுவைத்து மகிழ்ந்தவன் இளமையில்
அந்தர வாழ்வை அடைந்தவன் இன்று
அகதியாய் முகவரி இங்கிலாந்தில்
இந்திர லோகமாய் இருந்திடும் என்றே
இருந்தவன் இங்கு இரு கால் முட்டா
அந்தர வாழ்வே இந்திர லோகமே
அவசரக் கவிதை இராஜ மனோகரன்.

வெற்றிச் செய்தி பற்றி நின்றோம்
வேங்கை எய்திய வீரம் கண்டோம்
நெற்றிச் சுருக்கு நெகிழ மகிழ்ந்து
நெடுநாட் கனவை நனவாய்க் கண்டோம்
வற்றிப் போன நீதியின் பக்கம்
வாழாது இதுவே இயற்கையின் நீதி
அற்றுப் போகும் அநியாய ஆட்சி
அமையும் எங்கள் அன்னையின் மீட்சி.

விற்றுப் பிழைப்பவர் மானந் தன்னை
விரலை மூக்கின் நுனியில் வைத்தார்
கற்றுப் பிழைவிடும் கயவர் கூட்டம்
கனவில் வேங்கையின் காலைப் பற்றினர்
சற்றும் உண்மைச் சரித்திரம் தெரியார்
சாதனை கண்டு வேதனை கொண்டார்
முற்றும் உணர்ந்தவர் தமிழர் மட்டும்
முடிபெற நாள் முடிவு ஆகுதென்றனர்.



படிப்பகம்

padippakam


குற்றச் சுமைகள் கூடியென் மனத்திற்
    கூனிக் குறுகிக் குழப்பம் அடைந்தேன்
முற்று முடிந்த முடிவு தமிழ் ஈழம்
    முடிப்போம் அதனை இன்றே என்று
பற்று வைத்து இயங்கியும் பின்னால்
    பற்று உயிர்மீது பறந்தவர் நாங்கள்
சற்றுச் சஞ்சலம் அடையினும் என்ன
    சாதிக்க என்று சாகமுன் பலவுள.

தானைத் தலைவன் தகவுசேர் நெறியில்
    ஆனையிறவு அடித்து அதை வென்று
தேனைத் தமிழர்க்குத் தெளியவே தந்து
    தேனீக் குற்றலைத் தேகத்தில் தாங்கி
மானை நிகர்த்த ஓர் வேகத் துடனே
    மதியொடு **வியூகம்** மனவலி சூழ்ந்திடத்
தானை நடத்தியே யாழை ஊடறுத்தான்
    தமிழராய் நாமும் தாங்குவது என்ன?

செய்த குற்றம் செப்பவே பெரிது
    செய்தலை தீரச் செய்யலாம் பலவும்
எய்த ஈழம் இங்கு இருந்து நாம்
    ஏற்றம் காண என்ன செய்வோம்
மெய் தவம் ஒன்றும் மேவிட வேண்டாம்
    மேவிய தெல்லாம் கொடுத்திட வேண்டாம்
மெய் யதுவாக மேவிட ஈழம்
    மேதினியில் நாம் செய்குவோம் இவற்றை.

சிங்கள லங்காவின் சிந்தனை யாளரில்
    சிந்தனை சிறந்தவர் சிறுதொகை அறிவீர்
அங்கவர் உண்மையை அவிழ்ப்பது புதுமை
    அவர்களில் முதன்மை அடைபவர் இலங்கை
வங்கியே ஆகும் வடக்கிலும் கிழக்கிலும்
    வர்த்தக உதவி மறுத்தனர் தம்முள்
அங்கது ஈழம் ஆகுமே என்றுமே
    என்தலை தாழ்த்தி இயம்புவேன் வணக்கம்!


படிப்பகம்

padippakam


வங்கிகள் மட்டும் மதியொடு அங்கு
வருவதை உணர்ந்து உரைத்தன நன்கு
வங்கியாய் இலங்கை மட்டுமே அன்று
மத்திய வங்கியும் மலர்ந்தது திருவாய்
இங்குநாம் விரைவில் இணக்கமே காணல்
இன்றுள தேவை இயலாது இது ஆகில்
எங்களை உலக நாடுகள் ஒதுக்கிச்
சிங்கள இனவெறிச் சிறியவர் என்று.

செங்களம் ஆடுதல் சிறுத்தைகள் கடன் எனின்
எம் கடன் அவர்க்கு ஏதுவாய் நடத்தல்
பொங்கிடும் ஈழம் பொலிந்திட விளைந்து
எம் பொருள் முதலாய் எவற்றையும் அளித்தல்
எங்களின் வாழ்வுறு நாடுகள் தனிலே
எம் சிறப்பு ஒளிர ஏற்றமாய் வாழல்
அங்கெமது இன்னல் அத்தனை யையும்
அகிலம் அறிய அன்பொடு உரைத்தல்.

இனியும் உதவிகள் இலங்கை அரசுக்கு
இயற்றிட வேண்டாம் என்றுமே வேண்டல்
கனியும் உதவியாய்க் காட்டிட வேண்டின்
கன ரக ஆயுதம் மட்டுமே என்னல்
இனியும் ஆயுதம் இயற்றுதல் கண்டு
ஈழ வேங்கைகள் இழிநிலை அடையார்
குனியும் சிங்களம் கொண்ட நல் ஆயுதம்
கொள்வர் வேங்கைகள் குவிப்பர் கோடியாய்.

இவ்வளவும் செய்தும் இத்துணைத் தியாகம்
ஈழத்தில் எம்மவர் இயற்றியே நின்றும்
அவ்வளவும் உறுதி அடைந்திடில் ஒற்றுமை
அல்லது எல்லாம் அனலிடை மெழுகே
எவ்வளவும் செய்யலாம் எதனையும் சொல்லலாம்
எம்மவர் வேங்கைகள் தீவையே வெல்லலாம்
அவ்வளவும் சிறந்து அடைவோம் நல்வாழ்வு
அடம்பன் கொடிபோல் திரண்டால் மிடுக்கென.

04.05.2000



படிப்பகம்

padippakam


# வாகை தா

ஈழம் சுதுமலையில் எச்சாட்டி எனும் பதியில்
காலம் சிறுவயதிற் கழித்தவன் இன்பமுடன்
ஆளும் சிங்களத்தின் அதிகார மமதையினால்
நாளும் இங்கிலாந்தில் நலி இராஜ மனோகரன்.

கீதம் சங்கீதம் கேட்கின்றாய் போலுளது
நாதம் பேசுதே நாவரசா உன் தலைப்பு
ஓதும் போதுமே ஒவ்வொரு தாளத்திற்
காதும் சொல்கிறது கையும் இடுகிறது.

வா கை தா என்றாய்
வாய் மீட்டில் அது திஸ்ரம்
வா கை தா தா என்றாய்
வாய் மீட்டில் அது சதுஸ்ரம்
வா கை தா வா கை தா தா
வாய்ப்பாட்டில் இது மிஸ்ரம்
வா கை தா என்றால் நீ
வருதல் நான் யேர்மன் கஷ்டம்
தோ கை தா என்றே அங்கு
தோன்றினாய் அது உன் இஷ்டம்.

( திஸ்ரம் – த கி ட
சதுஸ்ரம் – த க தி மி
மிஸ்ரம் – த கி ட த க தி மி )

சிங்கள அரசு சீறியது தாங்கினோம்
சிங்கள அரசு சீண்டியது தாங்கினோம்
சிங்கள அரசு தீண்டியது தாங்கினோம்
சிங்கள அரசு தாண்டியது எல்லையை.


படிப்பகம்

padippakam


சாது மிரண்டாற் காடு கொள்ளாது
சாத்வீகம் தோற்றால் தமிழர் வழி கண்ணன் வழி
பாதி கேட்டதில்லைப் பாகத்தைக் கேட்டதில்லை
நாடு கேட்டதில்லை நம்முயிரைக் காப்பதற்கு
ஆதி இனமாக அமைந்தும் உரிமை கேட்டோம்
பாடு படுத்திவிட்டார் பக்குவமாய் எடுத்துரைத்தோம்
காதில் ஏறவில்லைக் கடைசிவரை இணையவில்லை
ஓடு உன்னாட்டுக்கு ஓடு யாழ்ப்பாணம் என்றார்.

ஓடிய பின்னால் வந்து ஓய்வின்றிச் சுட்டு நின்றார்
சாது மிரண்டு விட்டோம் சன்னதமும் கொண்டோம்
காடு கொள்ளாது இனிக் கடலலையே ஓய்ந்தாலும்
மாது தமிழுக்கு என்று மணிமுடி சூட்டும் வரை.

திஸ்ரத்தில் ஆடிப்பின் சதுஸ்ரத்தில் ஆடித் தீவிலே
மிஸ்ரத்தில் ஆடி இன்று மிகைபடவே ஆடுகின்றார்
கஷ்டத்தில் ஆடிப் பின் கபடத்தில் ஆடுகின்றார்
நிஷ்டையில் ஆடிநில்லா நீள்துறவு பூண்ட பிக்கு.

புத்தம் சரணம் கச்சாமி பூமியில் அழிவே அவர் பாணி
தம்மம் சரணம் கச்சாமி தமது கர்வமே அச்சாணி
சங்கம் சரணம் கச்சாமி சாகலாம் எவரும் அவை பேணி
இங்கண் இவையே லங்காவில் இயம்புவர் புத்தர் நலம் பேணி.

எப்போதும் பிச்சை ஏந்திடும் பிக்குவிற்கோ
எப்போதும் இச்சை ஏந்துவதிற் கைகளையே
தப்பேதும் இல்லைத் தாராளமாய் ஏந்து என்ன
முப்படையின் தலைவி முயன்றவரை ஏந்துகின்றார்.

கண்டத்தில் ஆடியவர் கபடத்தை ஆண்டவர்கள்
அண்டத்தின் நாடெல்லாம் அகலக்கை ஏந்துகின்றார்
துண்டைத் தன் தலையிட்டுத் தூதுவர் கதிர்காமர்
தண்டத்தில் வாழ்வதற்குத் தலையை அடகு வைத்தார்.



படிப்பகம்

padippakam


வா கை தா என்று வருதிசை எல்லாமே
நீ கை ஏந்தாதே நின் வருத்தம் யானறிவேன்
வேகும் போர்தன்னை வேங்கைநாம் நிறுத்திடுவோம்
போகும் வரைநீரும் போய்விடுங்கள் உயிர்மிச்சம்.

சாகும் படியும்மைத் தாக்கிட நாம் எதிரியல்லச்
சாகும் படியெங்கள் சரித்திரத்தைச் செய்தேநீர்
ஆகும் படியாவும் ஆக்கினும் எம் எதிரியல்ல
ஆகும் எம்விடுதலை அதுவே எம் இலக்கு.

அண்டை நாட்டைநாம் அடக்கிட வரவில்லை
இன்றே ஓடிவிடும் யமதர்மன் மீண்டிடுவான்
நன்றே நீர்வாழும் நம்மையும் வாழவிடும்
என்றான் எம்தலைவன் ஏறவில்லை இவர் மூளை.

கெடுங் குடி சொற்கேளாது சாபிணம் மருந்தேற்காது
நெடுங் குடி எம்தமிழ்குடி நீள்புவியில் அழிவேற்காது
கடுங் குடி அல்லநாமும் காதலிப்போம் எதிரியையும்
விடுங் குடி. அவரைக்கூட வியனுலகில் வாழ்வதற்கு.

விதியை மதியாலே வெல்லலாம் ஆனாலும்
மதியால் வெல்லுவார் மண்ணிலே யாருமில்லை
மதியை வென்றிடுந்தீய மனமே ஆதலாலே
கதியே விதியாகும் இங்கு கர்வமே மதியாகும்.

வாகை தா என்று வரங்கேட்டு வணங்குதற்கு
வாகை என்கின்ற வரம் அருள் கொற்றவையா?
நீகை தாவென்று நிற்பவரைக் கேட்பதற்கு
வாகை மரம் வெட்டும் வனபரி பாலனமா?

காதலிலும் கேட்பதில்லைக் கட்டிலிலும் வழக்கமில்லைச்
சாதலிலும் கேட்பதில்லைச் சரித்திரத்திற் சாட்சியில்லை
மோதலிலே கேட்கின்றார் முகாரி இசை பாடுகின்றார்
பாதகமே இல்லைநாம் பாரிலின்று உயர்ந்து விட்டோம்.


படிப்பகம்

padippakam



வாகை சூடிடுவார் வல்லவர் வேங்கையவர்
பாகை தவறாது பாயும் குண்டெறிந்து
நீகை வைத்திருந்த நெடுந்தூரம் பாயும்
தீகை நீட்டுகின்ற தீதுரை எறிகணைகள்.

நாமும் என்றைக்கும் நல்லபடி ஒற்றுமையாய்
நாமம் தமிழரென நானிலத்திற் கொண்டவர்கள்
சேமம் தமிழுக்காய்ச் செருக்களம் சென்றவரின்
நாமம் பின்னாலே நாமொன்றாய் நின்றிடுவோம்.

18.05.2000



படிப்பகம்

padippakam



# எரிந்த சாம்பலில் எழுந்த வேதம்

தமிழீழம் சுதுமலையில்(த்) தமிழ் கமழ வாழ்ந்த கவி
அமிழ்தான ஊரைவிட்டு அகன்றடைந்து சீமையிலே
தமிழ்மீது காதலாலே தான் பாட வியாழன் வரை
கனிவாக எதிர்நோக்கும் கந்தையா மனோகரன்.

எரிந்த சாம்பலில் எழுந்த வேதம் இது
விரிந்த சடையான் விளம்பிய நாதம் இது
சரிந்த வாழ்வினைச் சரியென தாக்கிடப்
பரிந்த வார்த்தைகள் பண்புடன் ஏற்றிடும்...

பத்தின் ஒன்பது ஆண்டுகள் கடந்தும்
பதைக்கின்ற மனத்தில் பட்டது சொல்வேன்
கத்தும் கடலின் அலைகள் ஓயலாம்
கனக்கின்ற மனத்தின் கவலைகள் ஓயா.

எரிந்த தீவு இலங்கைத் தீவு அதை
எரித்தது பிறன்மனை தீண்டிய குற்றம்
எரிந்த தீவில் எழுந்தது தமிழ் மணம்
எழுந்த மணத்தில் விளைந்தது கலையே.

விரிந்த கலையில் விரிந்த மனத்தில் கலிங்கம்
விட்டுமே வந்தவர் தம்மையே அணைத்தோம்
பரிந்து அணைத்துப் பாவம் என்று அவர்
பாட்டிலே விட்டோம் நாட்டினை இழந்தோம்.

தமிழும் வழக்கில்(த்) தானில்லாப் பாளியும்
தம்முட் புணர்ந்து தந்ததே சிங்களம்
தமிழை எதிர்ப்பது தாயை எதிர்ப்பது
தாயை எதிர்ப்பவர் தரணியில் வாழ்வரா?



படிப்பகம்

padippakam


எரிந்த சாம்பலில் இருந்தே எழுந்தேன்
எடுத்த பாதத்தின் இறைவனைக் கண்டேன்
விரிந்த சடையான் விரைந்த நடனம்
விழுமிய தவத்தின் வினையென உணர்ந்தேன்.

சொரிந்த கண்கள் சோகமே ஆகக்
சொக்கநாதனின் திருவடி பணிந்தேன்
தெரிந்த தொன்றிலைத் தெய்வமே என்னைத்
தீயிடை இடு இத் திருமேனி ஏன் என்றேன்?

நாலொரு வேதம் நன்றென ஓதிய
நான்ற வாயினால் நடராஜன் ஓதினான்
மேலொரு வேதம் வேண்டுமா என்றேன்
மேன்மை தங்கிட ஓதினான் தமிழில்...

நாமெல்லாம் தமிழ் மக்கள்
நமக்கு நாம் பாதுகாப்பு
நாமெல்லாம் அழிவதால் ஓர்
நாட்டினர் வாழ்வரென்றால்
நாமெல்லாம் வாழ்வதற்கு அந்
நாட்டினர் அழிதல் நீதி!
நாமெல்லாம் அழிந்து எந்த
நாடிங்கு வாழும் பார்ப்போம்!

ஓதிடு இதனைத் தினமும்
ஒவ்வொரு கணமும் ஓது
ஓதிய பின்னர் செயலில்
ஒற்றுமை தினமும் நாட்டு.

தீதிலா வாழ்வு காண்பாய்
திட்டங்கள் எல்லாம் வெல்வாய்
மாதொரு பாகன் தமிழை
மன்றிலே சொன்ன பெருமான்.



படிப்பகம்

padippakam


காதிலே ஒலிக்கச் சொன்ன
கருத்தினைக் கேட்டீர் தானே
பாதியிற் கருகும் வாழ்வாய்ப்
பண்ணிட வேண்டாம் பெரியீர்.

ஓதுவேன் அன்று எரிந்து
ஒழிந்தவன் சாம்பல் மீது
ஆதலால் அறிவு கொள்வீர்
அதனை நீர் எரிக்க முயலீர்!

08.06.2000


படிப்பகம்

padippakam



# பிரசவம்

ஈழத்தின் சுதுமலையில் இருந்து வாழ்ந்தவர்க்குக்
காலத்தால் முதற் கனிந்த காதலின் முதற் பிரசவம்
ஞாலத்தில் இட்ட பெயர் இராஜ நல் மனோகரன்
காலத்தின் கோலத்தால் கண்டதின்று இங்கிலாந்து.

இங்கிலாந்தில் இருந்தாலும் இடர்ப்பாடு விடவில்லை
எங்கிருந்தோ நகர்ந்திட்ட எமையாள் சனியும் குருவும்
தங்கிட்டார் எம் துணைக்குத் தாவியே அட்டமத்தில்
எங்கணக்கில் இருவருமே இருந்திட்டார் இடம் நாலில்.

இடமெட்டும் நாலும் என்று இருவருக்கும் கோசரத்தில்
விடமாட்டார் ஒருவீட்டில் வீண் அலைச்சல் பிரிவுந்தான்
விடமுண்ட கண்டனையே விடாது வணங்கியதால்
தடமாற்றம் மட்டுமென்று தந்திட்டார் ஏற்றிட்டோம்.

ஏற்றிட்டாள் என் தாலி என்னவளைப் பிரிந்தின்று
ஏற்றிட்ட பிரசவத்தின் எழில் மக்கள் மூவரையும்
தேற்றிவிட்டு இங்கிலாந்தில் தேவை தொழில் எனவே
ஆற்றுகின்ற பணிஇப்போ அடியேன் யான் இத்தாலி.

பெருநிலம் ரஷ்யா பெரிதாகப் பூமித்தாய்க்கு
இரணசிகிச்சை நடத்திடவே நற்பிரசவம் இயற்கைவாயு
கருங்கடல் வழியாகக் கனதியாய்க் குழாய் அமைத்துக்
கடத்தியே துருக்கிக்குக் காசு சம்பாதிக்க இவ்
வருந்தொழில் பெற்றவர் அவரூரார் இத்தாலியர்
அஃதியற்ற என்னையும் அழைத்திடவே இங்கு வந்தேன்
கருங்கடல் அடியாகக் காணும் நீரின் ஆழம்
கனக்கவல்ல மீற்றரில் கண்டால் மூவாயிரமே.

தமிழாசான் தாசீசியஸ் தமிழ்மகளைப் புணர்ந்தன்று
அமிழ்தாகப் பிரசவித்தான் அனைத்துலக ஒலிபரப்பை
அமிழ்தாக வளர்ந்திட்ட அழகுதமிழ் ஒலிபரப்பில்(த்)
தமிழ்வாழப் பிரசவித்தார் தரமிகு பிரசவகளத்தை.



படிப்பகம்

padippakam


கான் சென்று கரைகாணாக் கடல்சென்று கரும்புலியாய்
வான் சென்ற மாவீரர் வருதியாகம் தனையிங்கு
நான் இன்று நற்றமிழில் நயமாகக் கவிதைக்குள்
தான் எங்கு அடக்குவதோ தவிக்கின்றேன் இயன்றிடாது.

தமிழீழ விடுதலைக்குத் தனம் சிறிது தாம் ஈந்து
தமிழீழ மக்கள்பலர் தம்பட்டம் அடிக்கையிலே
தமிழீழ விடுதலைக்குத் தம்முயிரைத் தந்துவிட்டுத்
தமிழீழ மண்ணிற்குள் தம்முடலை வித்திட்ட...

அவர்பெயரை உரைப்பதற்கு அகிலத்திற் சிதறிவிட்ட
இவன்தனக்கு உரிமையேது இருந்தாலும் கவிதைக்குள்
அவர்புகழை அடக்கிடவே அகிலத்தில் வழியுமேது
அவர்வாழ்க அவர்கண்ட அன்னைதமிழ் ஈழம்வெல்க!

நாட்டின் விடுதலைக்கு நற்போர் நடைபெறவே
நாட்டை விட்டகன்ற நாம்தேடும் மேற்குலகு
நாட்டின் விடுதலைக்கு நற்போரால் நலம்பேணும்
நாட்டை விட்டகலார் நன்றேற்றார் நமனுலகு.

தற்கொலைப் படையென்று தரணியுளோர் சொன்னாலும்
தற்கொடைப் படையஃது தரணிவாழ் தமிழர்களே
ஒற்றுமைப் பட்டிங்கு ஓரணியில் நின்றிட்டால்
நற்றுணைப் படைவேறு நாமியற்றல் வேண்டுமாமோ!

29.06.2000


படிப்பகம்

padippakam


# ஜுலாய் மாதம் வந்தால்

சூலில் இருந்து சுமந்தெனை என்தாய்
சுதுமலை மண்ணில்(த்) தவழவே விட்டுப்
பாலில் இருந்து பலசுவை உணவும்
பாங்குடன் தந்தெனைப் பாரிலே வளர்த்தாள்
ஆலின் விழுது அமையும் அதன் கீழ்
அமைந்ததா அந்நிலை அகிலம் சிதறினோம்
தோலும் சதையும் தோன்றிடும் உயிரும்
தோன்றவே ஒன்றாய்த் தொழுத கையராய்.

நாலும் விட்டு நாற்றிசை பறந்து
நாலு சுவருக்குள் நம்கதை அமையக்
காலும் கையும் கட்டிவாழ் கின்ற
கணக்கில் தமிழரின் கணக்கில் ஒருவன்
பாலும் நெய்யும் கலந்த நிலையிலே
பாங்குடன் மேற்கிலே பலனும் காண்பவன்
நாளும் சீமையில் வாழ்ந்தவன் இன்று
நற்றொழில் இத்தாலி இராஜ மனோகரன்.

நூலின் அளவிலே சரிவுகள் பார்த்து
நொய்த வேலிக்குக் கையை வெட்டினோம்
தோளின் சால்வைத் தொங்கலிற் சாதியைத்
தொங்கவிட்டுத் தோண்டினோம் புதைகுழி
நாளும் காதலில் நஞ்சு கலந்தோம்
நம்மவர் வாழ்வை நாமே அழித்திட்டோம்
பாழும் உலகிலே பாவிகள் ஆகவே
பண்ணிய பாவங்கள் பற்பல பற்பல.

பாவங்கள் யாவும் ஒன்று திரண்டு
பௌத்த பிக்குகள் ஆகி வளர்ந்தன
பாவங்கள் நாம்செய்த பாவங்கள் தன்னால்
பௌத்த மதத்தைப் பிக்குகள் மறந்தனர்
தீவெங்கள் மொழிக்குச் சிங்களம் மட்டும்
தீயிலே இடுவோம் தீந்தமிழ் உரைத்தால்
நாவெங்கள் மொழியில் நவின்றிடல் வேண்டும்
நமனுலகு உமக்கு நவின்றிடில்(த்) தமிழே.


படிப்பகம்

padippakam


சொந்தத்தை மிதித்துத் துயரங்கள் செய்தோம்
சோகங்கள் எல்லாம் சேர்ந்தன ஒன்றாய்த்
தந்தத்தை வணங்கும் தலதா மாளிகைத்
தயவிலே வளர்ந்து தாக்கின எம்மைச்
சந்தத்தைத் தமிழின் சத்தத்தை என்றும்
சாகவே துரத்தச் சாதுக்கள் திரண்டனர்
பந்தத்தைத் தமிழின் பாகத்தை என்றும்
பாரிலே நசுக்கிடப் பௌத்தர்கள் நின்றனர்.

ஆடிக்கு ஆடி அடித்து மகிழ்ந்தனர்
அழிவையே செய்து அழித்தனர் எம்பாவம்
ஆடிக்கு ஆடி அழித்து எம்மையே
அசையாத மனத்தை அசைய வைத்தனர்
ஆடிக்கு ஆடி ஆட வைத்ததால்
ஆடிய மூளையில் அமைந்தது தேடல்
ஆடிக்கு ஆடி ஆண்ட பரம்பரை
ஆடிட வேண்டுமா ஆள்வது மீண்டுமே!

ஆடிய மனத்தில் அசைந்தது அமைதி
அசையாத மனத்தில் அமைந்தது உறுதி
ஓடிய தமிழர் ஒருகணம் நின்றார்
ஓடிய குருதியில் ஓம் என எழுந்தார்
தேடிட முனைந்தார் தெள்ளிய வாழ்வைத்
தேடிய வாழ்வின் சிறப்பினை அடையக்
கூடிய விலையாய்க் கொடுத்தனர் உயிரைக்
கொன்றனர் தம்மைக் கொண்டிட வாழ்வு.

நீதியின் பக்கம் நின்றவர் வாழ்வு
நிலைப்பது உறுதி நீசரே எதிர்ப்பார்
ஆதியில் இருந்த வாழ்வினைத் தமிழும்
அகிலத்தில் விரைவில் அடைந்திடும் உறுதி
ஏதிலியாக எங்கும் வாழ்கின்றோம்
எனின் ஏதிலி அல்ல எம்முடை ஈழம்
ஓதிடும் ஒற்றுமை பேணியே என்றும்
ஓரணி நின்று சீரணி செய்வோம்!

27.07.2000


படிப்பகம்

padippakam


# மாலை

சுதுமலை மண் பிறந்து சுந்தரத் தமிழ் பயின்று
வதுவையில் அவள் இட்ட மாலையோடு மண் பிரிந்து
இதுவரை ஈழம் காணாது இங்கிலாந்து மண் சேர்ந்த
இதுகவி இராஜ மனோகரன் இத்தாலி மண் இருந்து.

மாலை ஒன்றுதருவாய் என்று ஓலை தந்தாய் நாவரசா
மாலை இருமுறையே மண மாலை ஒன்று மண்மீது
வேளை வந்து காலனவன் மேவிநின்று உயிர் பறித்த
வேளை யின்பின் மற்றொன்று வேறெதனைக் கேட்டாய் நீ.

ஆனமுதல் மாலை கண்டாய் அடுத்ததற்கு ஆண்டுபல
போனபின்னர் ஆகுமப்போ புலவன்யான் இருக்கமாட்டேன்
ஆனதனால் அழகுதமிழ் ஆகுமாறு அமைத்த மாலை
தேனமுதம் சிந்தும் மாலை தெய்வத்தமிழ்ப் பாமாலை.

ஓலை இந்த மாலை சேர வேளை வந்து சேர வந்தேன்
மாலை இல்லா மேலைநாடு மாலை மதி மயக்கா நாடு
மாலை இன்றி வீலை காணும் கோலம் அலங்கோல நாடு
மாலை காணா மேனி எல்லாம் வீலை காணும் மேலை நாடு.

மாலை மதி மயக்கும் நாடு மாலை மணம் மதிக்கும் நாடு
வாலை மண மாலை கண்டு காளை கை அணையும் நாடு
மாலை தமிழ் மாலை என்று மதி வாணர் பாமாலை கண்டு
வேளை வரும் காலை வரை வேகும் தமிழ் ஈழ நாடு.

மாலை மண மாலை வேண்டாம் மங்கை தமிழ் வாழ வேண்டும்
வாலை யென வேறும் உண்டோ வானதிரப் படையும் உண்டேல்
வேளை இது காலை விட்டால் வேண்டும் வாழ்வு விளைந்திடுமோ
நாளை என்று நாம் இருந்தால் நடக்குமாமோ நன்மை என்றும்.


படிப்பகம்

padippakam


மாலை பாமாலை கொண்டு பண் சேர வாழ்ந்த தமிழ்
மாலை காமாலை கண்டு மங்கி ஒளி கண்ணில் இன்று
மாலை சா மாலை கொண்டு வரலாற்றைச் சிலர் துரத்த
மாலை மாமாலை காண மக்கள் யாம் ஏது செய்வோம்
மாலை யிலே மலராக மண்ணின் மீது உதித்த தெல்லாம்
மாலை ஒன்று ஆவது போல் மக்கள் யாம் ஒன்று ஆவோம்
மாலை போலே ஓரணியில் மலராக அணி திரள்வோம்
மாலை தமிழ் ஈழத்தாய்க்கு மகிழ்வோடு நாம் அளிப்போம்.

மாலை மலர் மாலை அல்ல மாலை பல அவளுக்குண்டு
மாலை பா மாலை அல்ல மலை போலே முன்னர் உண்டு
மாலை நாம் ஒன்றாய் நின்று மக்கள் சக்தி ஒன்றே ஆகி
மாலை ஓர் வெற்றி மாலை மண்ணில் நாம் அளித்திடுவோம்.

24.08.2000


படிப்பகம்

padippakam


# மே தினம் தான் தினம்

பார் என்றால் அண்டத்தில் பூவுலகம் தான்
பண் என்றால் பூவுலகில் பைந்தமிழே தான்
ஊர் என்றால் தமிழீழம் தன்னில் ஓர் ஊரே
உயர்ந்த மலை சுதுமலை தன்னிற் பிறந்த...

பேர் என்று கொண்டவன் யான் இராஜமனோகரன்
பெற்ற தமிழ்க் கவி சொல்ல வந்தேன் இப்போ
யார் சொன்னார் மேதினம் தான் தினமே என்று
யாதும் ஊராய் வாழ்ந்துவரும் எம்மவர்க்கு.

மேதினம் தான் தினம் என்றாய் தினமும்
மேதினம் தான் என்றும் சொன்னாய் ஐய
மேதினியில் தமிழர் யாம் ஈழத்தவர்கள்
மேவியுள்ள நாடுகள் தாம் எத்தனையோ.

காகமில்லா ஊரில்லை என்று அன்று
காதாரக் கூறிடுவார் ஈழம் தன்னில்
காகமில்லா ஊர்கள்பல உலகில் உண்டு
காசினியில் தமிழனில்லா நாடே ஏது?

நிலம் முழுக்க வாழ்ந்தாலும் நிலைமை என்ன
நெஞ்சமெல்லாம் கனத்து நிற்கும் நிலைமை தானே
நிலவுக்குப் பயந்து பரதேசம் போன
நீள் கதையாய் ஆகியதும் போலத் தானே!

எம்மோடு பிறந்து வாழும் எதிரி மூவர்
எம்முடைய தீய நெஞ்சம் எம்முதல் எதிரி
எம்மோடு வாழும் பௌத்தம் சிங்களம்
என்றைக்கும் எம் எதிரி அதனாலென்ன?


படிப்பகம்

padippakam



எம்மருகில் வாழ்ந்து வரும் எதிரி மூன்றாம்
எதிரியவன் இந்திய ஏகாதி பத்தியம்
தம்முடைய குணத்தாலும் செய்கையாலும்
தமிழர்க்கு அது என்றும் முதலாம் எதிரி.

ஆண்டவன் அருள் தரினும் ஐயர் தடுக்கும்
ஆபத்துப்போலத்தான் இந்த எதிரி
பூண்டதன் பகை மறந்து புத்தன் வரினும்
பூவுலகில் இவன் தடுப்பான் பொது எதிரி.

ஆண்டவன் அன்று எம்மை அவனையுந் தான்
ஆனாலும் பணம் பணத்தைச் சார்தல் போல
ஆண்டவன் அகிலத்தை என்ற கதையில்
அயருகின்ற இங்கிலாந்து அவனைச் சாரும்.

அங்குதான் தணிக்கை அதன்பின் எடுத்தார்
அதற்கு மேல் வான்சென்று பொழிவார் குண்டை
இங்குநாம் வந்துவிட்டால் இங்கிலாந்தும்
இறுக்குகியதே எம்முடைய குரலின் வளையை.

நிலவுக்குப் பயந்து பரதேசம் போன
நீண்ட எம் கதைதன்னை நினைத்தே பாரும்
நிலவுக்குப் பயப்படாத நெஞ்சு வேண்டும்
நிலத்திலே எம் நிலமே சொந்தம் என்றும்.

எம் எதிரி முதல் எதிரி எமக்கு நாமே
எம்முடைய பகை எதிரி இந்திய அரசு
எம் எதிரி இவ்விருவர் இருக்கும் வரைக்கும்
எந்நாளும் மேதினமே எமக்குத் தானே.

எந்நாளும் காலையிலே இயல்பாய் எழுந்து
எமக்கு நாம் கூறுவோம் கண்ணாடி முன்னே
உன்னெதிரி நீயே நீ உன்னை மாற்று
உனக்கு நீ குழி பறிக்கும் தன்மை நீக்கு.



படிப்பகம்

padippakam


மண்ணுலகில் நீ துர்க் குணத்தைத் திருத்து
மகிழ்வோடு ஒற்றுமையை நாளும் பேணு
திண்ணமாக நாம் இதனைச் செய்து நின்றால்
திணறிடுவார் மற்றைய எம் எதிரி தாமே.

மேதினம் என்றவுடன் சமவுரிமை
மேதினியில் தொழிலாளர் தமக்கு என்போம்
மேதினமே எந்நாளும் ஈழத்தவர்க்கு
மேய்க்க எம்மை முயலுகின்றார் அரக்கர் பலரும்.

மேதினமாய் என்றும் நாம் விழித்து நிற்போம்
மேவிடுவோம் மேதினியில் ஒற்றுமையை
மேதினமே இல்லாத நாடு காண்போம்
மேவியே சமவுரிமை யாவர் தமக்கும்!

03.05.2001


படிப்பகம்

padippakam


# சித்திரை

சுதுமலைத் தரை சுகம்பெறு உரை
இதுவரை கரை இங்கிலாந்தின் தரை
பதி உரை கவி பலர் மனம் நிறை
பாநிறை இராஜ மனோகரன் உரை.

இத்தரை தனில் எத்துணைச் சிறை
அத்தரை நின்று இத்தரை வந்தேன்
இத்தரை இழிந்து இத்தாலி இருந்து
இத்தரை மீள உத்தரம் பிரான்சு!

மூன்றரை மாதம் அஞ்ஞாத வாசம்
என்றவென் நாட்டில் இல்லாத வாசம்
தோன்றவே இங்கு தோன்றியதுன் குரல்
தோன்றுதே கவிதை துள்ளுதே நாவில்.

பிரசவ களம் பிறந்தது இத்தரை
சரசமே நிதம் தமிழர் மனத்திரை
சிரசிலே வரும் சிந்தனைத் திரை
உரசியே வரும் உதடுகள் நிரை.

நாளை சித்திரை நாமோ நித்திரை
வேளை இத்தரை வேண்டும் எம்தரை
கோழை இத்தரை கோமகர் அத்தரை
நாளை சித்திரை நமக்கு விடுதலை.

வேண்டும் இத்தரை மீண்டும் தமிழ்த்தரை
மாண்டும் இத்தரை வேண்டும் தமிழ்த்தரை
மாண்டோர் எத்துணை மாள்வோர் எத்துணை
மாள்வோம் இத்தரை மாளாது தமிழ்த் தரை.



படிப்பகம்

padippakam


*ஆண்டவர் எம்தரை ஆண்டார் அன்றெமை*
*யாண்டும் அடிமையே யார்க்கும் எனும் திரை*
*பூண்டே வழிதனைப் பூணும் படி எமை*
*மீண்டும் இத்தரை மீட்டினார் அதே உரை.*

*ஆண்ட திமிர் இத்தரை ஆள்வோர் திமிர் அத்தரை*
*பூண்ட கொள்கைத் திரை பூணோமினி அடிமைத்தளை*
*தூண்டா மணிவிழித் திரை தூயதமிழ் மகள் துறை*
*ஆண்டாண்டு கழிந்தாலும் அகம் நிறை தமிழ்த் துறை.*

*நாளை சித்திரை நாமோ நித்திரை*
*நாளும் நித்திரை நண்ணும் எத்திரை*
*நாளும் நித்திரை நண்ணும் முதுதிரை*
*பாழும் நித்திரை பண்ணும் கெடுதிரை.*

*வள்ளுவன் கூற்று...*
***நெடுநீர் மறவி மடி துயில் நான்கும்***
***கெடுநீரார் காமக் கலன்***

12.04.2001



படிப்பகம்

padippakam


# பொங்கு தமிழ்

தாயகம் தமிழீழம் தந்தவூர் சுதுமலை தாயிட்ட
பெயர் இராஜ மனோகரன்.

தாயகம் தணலாகத் தாவியது இங்கிலாந்து
மாய்வது தேசீயம் காண்.

அனைத்துலகத் தமிழ் ஒலியின் நாவரச இன்று
அனைத்துமே குறளுடைய வடிவம்.

தமிழுக்காய்த் தமையீந்த தற்கொடைக் கரும்புலி
அமரருக்கு எனது மனப் பணிவு.

தாயகம் தமிழீழம் தன்மானம் தேசீயம்
மாய்வது தன்னாட்சி தான்.

தன்மானம் விற்றல் தமிழ்மானம் அடகுவைத்தல்
எந்நாளோ நாம் திருந்துவது.

பொங்கு தமிழ் என்று பொங்கியவர் பலர் என்றும்
மங்கிடாது மண்ணில் ஒன்றானால்.

இங்கு தமிழ்கூறும் எம்மவரே வாருங்கள் அங்கு
பொங்கும் புனலுக்கு அணையாய்.

தங்கும் தமிழீழம் தாயகமாய் எம்மவர்க்கு
எங்கும் நாம் பொங்கி நின்றால்.

இங்கு பொங்கி என்ன எவர் காதில் இது ஏறும்
என்றிடாதீர் உம் வேதாந்தம்.


படிப்பகம்

padippakam


எங்கும் பொங்கி நின்று எவர்க்குமே எடுத்துரையும்
அங்கு அது உதவும் ஒரு நாள்.

தாயகம் தமிழீழம் தான் அமையத் தமிழர் யாம்
நேயமுடன் ஓரணியில் நிற்போம்.

தேசியம் தமிழ்மானம் தேர்ந்திட்டால்(த்) தன்மானம்
காசினியில் கண்டால் நாம் ஒற்றுமை.

தன்னாட்சி தமிழுக்குத் தரணியிலே தானமையும்
என்னாட்சி எம்மாட்சி என்றானால்.

தாயகம் தமிழீழம் தானமையப் பொங்கிவாரும்
தேசீயத் தன்னாட்சி என்றும்.

05.07.2001


படிப்பகம்

padippakam



# ஆடி விதை கூடிக் களை

ஆடி விதைத்தது தமிழீழம்
அன்பில் விளைந்தது சுதுமலையில்
பாடி வளர்இராஜ மனோகரன்
பாரில் உறைவது இங்கிலாந்து.

தேடி வருவது தமிழ் ஒலியில்(த்)
தேர்ந்த கவிவரி தெரிவிக்க
நாடித் தருவது நல் வணக்கம்
நம் தமிழ் ஒலி உறவுகளே.

ஆடி விதைத்தென்ன பாடி விதைத்தென்ன
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
ஓடி விதைத்தென்ன தேடி விதைத்தென்ன
ஒற்றுமையின் சிறப்பை உணராமல்.

நாடி விதைத்தென்ன கூடி விதைத்தென்ன
நம்மைநாம் மதிக்கத் தெரியாமல்
சூடி விதைத்தென்ன மூடி விதைத்தென்ன
சுதந்திர மகிமையை உணராமல்.

ஆடி விதைக்கலாம் பாடி விதைக்கலாம்
அன்பிலே யாவரும் அருகணைந்தால்
ஓடி விதைக்கலாம் தேடி விதைக்கலாம்
ஒற்றுமைப்பட்டு நாம் ஒன்றானால்.

நாடி விதைக்கலாம் கூடி விதைக்கலாம்
நமது மதிப்பை நாம் மதித்திட்டால்
சூடி விதைக்கலாம் மூடி விதைக்கலாம்
சுதந்திர மகிமையை உணர்ந்திட்டால்.



படிப்பகம்

padippakam


ஆடி விதைத்தோம் நாம் தமிழரசை
அழகுற மண்ணை ஆக்கமுன்னர்
ஓடி வளர்ந்தது வேர்கள் பல
ஒளித்து வளர்ந்தன களைகள் பல.

சாடி வதைத்திட யாரும் இன்றியே
சத்து முழுவதும் உறிஞ்சிடவே
சூடி மகிழ்ந்திடச் சூட்டி மகிழ்ந்திடச்
சுதந்திரத் தமிழ் முடி இன்னும் இல்லை.

ஏடு மட்டுமே எழுத்து மட்டுமே
என்றும் இறைமையை எய்தாது
தாடி மட்டுமே தகுதி என்றிடின்
தரணியில் விடுதலை கிட்டாது.

வீடு மட்டுமே விளைய வேண்டின்
வீதியிலே தமிழ் கேட்காது
நாடு மட்டுமே நமது முடிவெனில்
நவில்வது செயலில் ஆகாமல்.

நாடு தமிழுக்கு நன்றே அமைவது
நமது தமிழ் நிலம் ஈழத்தில்
கேடு சூழ்ந்திடும் ஆடித் திங்களைக்
கேட்பவர் கொதித்துமே பலனேது?

பாடி விதைத்திடும் தமிழர் ஒன்றாகிப்
பாரில் ஓரணி ஆகவே
தேடி அழித்திடும் சிங்கள நாட்டிலே
சிறந்த தலைமை உருவாகவே.

ஆடி விதைக்கலாம் பாடி விதைக்கலாம்
ஆனாலும் தமிழீழம் அமையவேண்டின்
ஓடி விதைக்கலாம் தேடி விதைக்கலாம்
ஒளிர்மிகு தமிழீழம் ஓங்க வேண்டின்.



படிப்பகம்

padippakam


நாடி விதைப்போம் நல்ல விதைகளை
நாமெல்லாம் ஒன்றெனும் நல்ல மனம்
கூடி விதைப்போம் என்னும் மனம் என்றும்
கொண்டிடில் தமிழீழம் உதயம் இன்றே!

19.07.2001



படிப்பகம்

padippakam


# சிறுவர் நலங் காத்தல் கடன்

சுதுமலை ஊர்ப் பிறந்து சுகமென உலகலைந்து
இதமென நிலைகொண்ட இங்கிலாந்து நாடிருந்து
பதமெனத் தமிழெடுத்துப் பாவெனக் கூறுவது
கதியெனத் தமிழையெண்ணும் கவிராஜமனோகரன்.

சிறுவர் நலங்காக்க இருவர் முதுகுரவர்
பெறுவர் துணையிருப்பர் பெற்ற கடமையது
முறுவல் முகங்காணார் முகமோடகமே வாட
மறுமை வாழ்வதற்கும் சிறுவர் நலங்காப்பர்.

சிறுவர் அதனாலே சிற்றினஞ் சேராமல்
பெறுவர் பெருவாழ்வு பெற்றோர் சொற்காத்து
வறுமை கண்டாலும் வாழ்வில் நலங்கண்டு
பொறுமை கடைப்பிடியும் போதும் மனங்கொண்டு.

பெற்றோர் இல்லாத பிள்ளை யார் பொறுப்பு
கற்றோர் கூறிடுவர் கடமை சமுதாயமென்று
மற்றோர் கூறிடலாம் மண்ணிலே படைத்துமே
உற்றோன் காப்பான் உளறாதீர் என்றுகூட.

பூனை தன்கண்மூடிப் பூவுலகம் இருளுமாமோ
தானை தமிழ் வாழவென்று தமிழீழம் கண்டின்று
ஆன நன்மை பலவுண்டு அதன்மறுபக்கத்தில்
ஆன தீமை சிலவுண்டு அவற்றிலொன்று இதுவன்றோ.

தாக்கித் தருக்கர்கள் தமிழரை அழித்ததனால்
ஆக்கி வைத்த அன்னை அப்பன் இருவரையும்
போக்கி விண்ணுலகம் புகையென அனுப்பிவிட்டு
நோக்க முகமின்றி நொந்த குழந்தைகள் அங்கு.



படிப்பகம்

padippakam


ஆயிரம் ஆயிரமாய் அடைந்தார் அகதிமுகாம்
வாயிலே சொல்காணா வயதின் சிறுவர்குழாம்
பாயிலே படுக்கைகூடப் பாக்கியமாகும் நிலை
வாயிலே பால்வேண்டாம் வளரநீர் வசதியுண்டா.

காயிலே கருகினாலும் கடவுளிட்ட விதி எனலாம்
வாயிலே சொல்காணா வயதிலே வாடவிடல்
சேயெனக் கண்டபின்னும் செயலிழந்த நிலைகாணல்
நாயினும் நலங்கெட்டு நன்றிகெட்ட நிலையன்றோ.

தாயென இங்கிலாந்தில்(த்) தனதாட்சி அமைத்தின்று
பாயுமாறு ஈழம்வரை பாலித்து அருள்செய்வாள்
காயுமாறு துன்பம் கனகதுர்க்கை அருள் பொழிவாள்
மாயுமாறு உள்ளவரை மண்ணிலே வாழவைக்க.

தாயுமாகத் தந்தையாகத் தரணியிலே பொறுப்பேற்றுச்
சேயுமாக அவர்வளரச் செலுத்தும்பவுண் பதினைந்து
நேயமாக மாதமொன்று நிலுவையாக அமைத்தாலங்கு
தாயுமாகித் தந்தையாகித் தத்தெடுத்த தகுதிகாண்பீர்.

வாயுவாக ஒருநாள்ஆவி வந்த காலன்கொண்டுஏகப்
பாயுமாறு இதுநாள்இதனைப் பண்ணிவிட்டால்அருளாம்
பாயுமாமே பாவமறுக்கும் பட்டதுயர் துடைத்தல் பிறர்க்குக்
காயுமாமே கண்டதுன்பம் கடமையாமே தமிழர்க்கிங்கு.

வாழுமாறு வசதிவந்த வழியைஇங்கு அமைக்க வைத்து
நீளுமாறு துன்பஞ்சுமந்து நிலத்தில்விதைத்த இருவரையும்
ஆளுமாறு விண்ணுலகம் அனுப்பிவிட்ட அந்தச் சிறுவர்
வாழுமாறு வழிசமைக்க வாரும் தொகையீர்வளர உதவீர்.

இட்டுஇவரைக் காக்க அழையும் இங்குசைபர்இரண்டு சைபர்
எட்டுஎட்டு ஒன்றுசைபர் சைபர்எட்டு மூன்று ஐந்து எண்ணே
எட்டியுள்ள தொகையோ மொத்தம் ஏறியுள்ளதாயிரமென்று
கட்டியுள்ளோர் தொகையோ கடக்க முன்னூறு காணுமாமே.


படிப்பகம்

padippakam



பெற்றோர் இழந்த சிறுவர் நலம்
பெரிதும் காத்தல் எமது கடமை
மற்றோர் வழியில் இழந்ததல்ல
மண்ணின் வாழ்வுப் போரில் இழந்து
உற்றோர் இளமை வறுமை
உலகில்(த்) தமிழர் சிறுவர் தம்மைப்
பெற்றோர் போலே காத்தல் என்றும்
பெரிதும் புலத்தின் தமிழர்கடமை.

ஆலயங்கள் அறநிலையங்கள்
அதனை ஆக்கிச் சிறப்புச் சேர்ப்பீர்
மாலும்அயனும் காணா இறையை
மண்ணிற் காண வழியும் இதுவே
பாலும்நெய்யும் பழமுமாக
பாலர் வாயில் ஊற்றும் இறைவன்
காலும்கையும் காண வருவான்
காண்போம் சிறுவர் நலமே காத்து.

ஏழையின் சிரிப்பில் இறைவனை
என்றும் காண எழுந்து வாரீர்
காளையர் கன்னியர் காதல் கொண்டு
கவினுற வாழும் இல்லறத்தில்
மேலையோர் வாரீர் மேன்மை தன்னை
மேவியே சேர்க்க ஐ நா எதற்குச்
சாலையில் விழுந்த சந்ததி தமிழர்
சாகாது தூக்கத் தமிழரே வாரீர்!

09.05.2002



படிப்பகம்

padippakam


# மண்ணும் பெண்ணும்

பிறந்த மண் தமிழீழம் தன்னில்
பொருந்துமூர் சுதுமலை
துறந்து மண் போர்தன்னால் இன்று
தூங்குவது இங்கிலாந்தில்
பிறந்து மண் அளித்த பெண் அமரர்
பேறு பெற்ற மனோன்மணி
துறந்து மண் சேரும் வரை இனிய
தூக்கத் துணை சசிகலா.

பிறந்த பின் பிறப்பால் துணை
பெண்கள் ஐவர் ஆண் இல்லை
துறந்து தூக்கம் துயில் கெட்டுத்
தோன்றிய மூவர் இருவர் பெண்கள்
மறந்து விடாது இருப்பதற்காய் இங்கு
வரலாறு புகன்று நின்றேன்
சுறந்த கவி வரிகள் இப்போ
காற்றலையில் இராஜ மனோகரன்.

மண்ணைக் கொடுத்துப் பலர்
பெண்ணைப் பெறுவார் சிலர்
பெண்ணைக் கொடுத்து இங்கு
மண்ணைப் பெறுவார் யானோ
கண்ணைக் கொடுத்து இங்கு
பெண்ணை இணைத்தேன் இப்போ
பண்ணைத் திறந்து எழுதும்
பாட்டு வரிகள் இவை.

மண்ணைப் பாடு என்றாய் பின்னர்
பெண்ணையும் பாடு என்றாய்
மண்ணைப் பெண்ணோடு இணைக்கும்
பொன்னை ஏனோ கேளாய்
மண்ணில் விளைவது பொன் அழகாய்
மதித்து அணிவதோபெண்
மண்ணைத் திறந்தாற் பொன் நல்ல
பெண்ணைத் திறந்தாலும் பொன்.



படிப்பகம்

padippakam


மண்ணைத் துறந்த கவிஞன் யான்
மண்ணை நீ பாடு என்றாய்
பெண்ணைத் துறக்க வில்லை நீயோ
பெண்ணையும் பாடு என்றாய்
மண்ணைத் திறந்து பார்த்தேன் அப்போ
மாணிக்கம் விளைந்த தங்கு
பெண்ணையும் திறந்து பார்த்தேன் என்றும்
பேரின்பம் வளர்ந்தது என்னுள்.

மண்ணை ஆள விரும்பி அடியால்
மண் துறந்து விண் பறந்தேன்
பெண்ணை ஆள விரும்பி அடியேன்
பெண் தனக்கே ஆட்பட்டேன்
கண்ணைத் திறந்து பார்த்தால் கவின்
காட்டும் மண்ணின் வனப்பு
கண்ணைத் திறந்து மூடினாலும்
கலை வளர்க்கும் பெண்ணின் இணைப்பு.

பெண்ணில் வளர்ந்த வித்துப் பின்னால்
பெண்ணோடு இணைந்த நத்து
கண்ணில் வளர்ந்த முத்து வாழ்வோ
காதல் வளர்த்த சொத்து
மண்ணில் வளர்பூங் கொத்து பெண்ணோ
வாழ்வை வளர்க்கும் தத்து
பெண்ணைப் பிரிந்து செத்து அன்று
பிரியாது சேரும் மண் சொத்து.

கண்ணில் மண்ணைத் தூவி எவரும்
காரியம் சாதிப்பது உண்டு
கண்ணிற் பெண்ணையும் தூவிச் சிலர்
கருமம் பெறுவதும் உண்டு
கண்ணில் மண்ணைத் தூவின் யாரும்
கருத்தால் அழிய மாட்டார்
கண்ணிற் பெண்ணைத் தூவின் யாரும்
கருத்தால் அழிந்தே போவார்.


படிப்பகம்

padippakam


பண்ணில் மண்ணை இணைத்தால்
என்றும் பாரில் பகைமை மூளும்
பண்ணிற் பெண்ணை இணைத்தால்
என்றும் பாரில் உவகை ஆளும்
கண்ணில் மண்ணை இணைத்தால்
யாரும் கண்ணீர் உகுத்து நிற்பர்
கண்ணிற் பெண்ணை இணைத்தால்
யாரும் கண்ணீர் நீத்து வாழ்வர்.

மண்ணைப் படைத்த பரமன் அதிலே
மலர்ச்சி காண வேண்டிப்
பெண்ணைப் படைத்தான் பின்னர்
அவன் பிறப்பால் ஆணே ஆவான்
கண்ணைப் படைத்தான் பார்க்க
நல்ல கருத்தைப் படைத்தான் இல்லைப்
பண்ணைப் படைத்தான் கேட்க நல்ல
பாட்டைப் படைத்தான் இல்லை.

மண்ணைப் படைத்த இறைவன் எம்
மனத்தைத் திருந்தப் படைத்துக்
கண்ணைப் படைத்த இறைவன் எம்
கருத்தில் உண்மை அளித்துப்
பெண்ணைப் படைத்து இருந்தால் அவள்
பெற்ற நிலை இது ஆமோ
விண்ணைப் படைத்து அங்கு அவன்
விரைந்து தூங்கினானோ?

பெண்ணைப் படைத்த இறைவன் தன்
பெண்ணை அணைத்து நின்று
மண்ணைக் காத்தல் கூட அவள்
மதிப்பை உயர்த்தல் வேண்டி
மண்ணைத் துறந்த உறவே பெண்
மதிப்பை மதித்தல் செய்வோம்
கண்ணைத் திறந்து பார்ப்போம் எம்
கருத்தைத் திறந்து மதிப்போம்.



படிப்பகம்

padippakam



*மண்ணைத் துறந்த கவிஞன் என்*
*பெண்ணைத் துறக்கவில்லை*
*பெண்ணைத் திறந்த கவிஞன்*
*யான் மண்ணைத் திறந்ததில்லை*
*பண்ணைத் திறந்த கவிஞன்*
*இனிய பாட்டைத் திறந்த கவிஞன்*
*கண்ணைத் திறந்த கவிஞன்*
*என் கருத்தைக் கேட்டீர் நன்றி.*

18.10.2001



படிப்பகம்

padippakam


# இடப்பெயர்வு

பிறந்த இடம் சுதுமலை
பெயர்ந்த இடம் இங்கிலாந்து
பிறந்த கவி உரைப்பவர்
பெயர் இராஜ மனோகரன்.

துறந்த மண் தமிழீழம்
துயர்படும் இனத்தை விட்டு
மறந்த மண் அல்ல அது
மனம் நிறந்த தாய்மை மண்.

இடப்பெயர்வு இவ்வுலகில்
என்றைக்கும் எவர்க்குமுண்டு
தடம்பெயர்ந்த தமிழர்க்குத்
தரணியில் இது பாதுகாப்பு.

பிறந்த இடம் விட்டுப்
பெயர்வதெல்லாம் இடப் பெயர்வே
பிறந்த இடம் மீண்டும்
பெயர்வதென்றும் இயலாதாகில்...

மறந்த இடம் அல்ல அது
மனத்தைவிட்டு இடம் பெயர
இறந்த இடம் அல்ல அது
இனி எமக்கு ஏன் என்று இருக்க...

பிறந்த இடம் அதுவாகும்
பிறந்துமண் வளர்ந்த இடம்
சிறந்த இடம் எம்மை அன்று
சிறந்தோங்க வைத்த இடம்.


படிப்பகம்

padippakam


நாம் தான் போகட்டும்
நல்ல வாழ்க்கை வசதி என்பர்
தாம் போம் வழி அறியாது
தமிழீழ மண் மீதே...

எத்தனை இடப் பெயர்வு
எவ்வளவு அலைக்கழிவு
அத்தனை இடப் பெயர்வும்
அரச பயங்கர வாதத்தால்.

கீழை நாடு எல்லாம் என்றும்
கிளையோடு இடம் பெயர்தல்
மேலை நாட்டு அரசுகளின்
மேலாதிக்க வாதத்தால்.

தட்டி யாரும் கேட்டு நின்றால்(த்)
தரணியி லவன் பயங்கரவாதி
முட்டி அவன் உயிர்பறிக்க
முழு அழிவிற் போராகும்.

சுரண்டி வாழும் மேலை நாடும்
சுரண்ட வாழும் கீழை அரசு
மிரண்டு வாழும் மக்களினம்
மிஞ்சுவதோ இடப் பெயர்வு.

ஒற்றுமை கொண்டு இனம்
ஓரணியில் நின்று என்றும்
சற்றுமே தளர்ந்திடாமல்
தன்மானம் இழந்திடாமல்...

தேர்தலுக்கும் பதவிக்கும்
திரண்டுவரும் ஒற்றுமையைப்
பார்தனிலே தமிழ்காக்கப்
பைந்தமிழர் பேணிநின்றால்...


படிப்பகம்

padippakam


யார்வரினும் எமக்கென்ன
    நம்நாடு நமதாகும்
பார்சிதறும் தமிழினமும்
    பரிந்து சொந்த இடம் மீளும்.

பார் மிதிக்க வாழும் நாம்
    பைந்தமிழ் நாடமைத்துப்
பார் மதிக்க வாழும் நாள்
    பாரில் அன்று உருவாகும்.

01.11.2001


படிப்பகம்

padippakam


# நினைவுக்கல் நினைவுகள்

நினைவிலே தமிழீழம் நெடுந்தூரச் சீமை வந்தும்
கனவிலே சுதுமலை கண்விழித்தால் இங்கிலாந்து
மனதிலே தமிழ்மகள் மண்பிரிந்தும் மனம்பிரியாள்
தினமுமே கவிபாடித் திகழ் இராஜ மனோகரன்.

*நினைவுகள் சுமையாகும் நீள்புவியில் நெடுங்காலம்*
*கனவுகள் ஆக என்றும் காட்சியின்றி அமைந்திட்டால்*
*கனவுகள் அனைத்திற்கும் காட்சிதர உயிர்ஈந்து*
*நினைவுகள் ஆகிவிட்ட நிமலர் எம் நினைவிற்கல்!*

*ஒருநாள் உணவைக்கூட ஒருபொழுது ஈவதற்கும்*
*இருநாள் இருந்தேங்கும் எமக்காக மண்காத்து*
*வருநாள் எல்லாம் ஈந்து வான் சென்ற மறவர்க்குத்*
*திருநாள் இங்கொருநாளா தினமும் அவர் திருநாளே!*

*பெற்ற பிள்ளை தனக்குவப் பெரிதுவந்து உயிர்தரவே*
*உற்ற மனம் உள்ளவர் உலகில் நாம் அல்ல ஆனால்*
*பெற்ற பிள்ளை கூடஇல்லைப் பிறர்க்காக மண்காக்க*
*உற்ற தம் உயிர் ஈந்த உத்தமரே நினைவிற் கல்!*

*விற்றுமானம் உயிர்காத்து விலைபேசி எதையும் காக்கும்*
*சற்றுமானம் இல்லாத எம் சந்ததி வாழவேண்டி*
*முற்றுமாகத் தமை ஈந்து முன்னணி மாவீரராகிப்*
*பற்றுத் தமிழ் மீது வைத்துப் பற்றறுத்தீர் முனிவர் நீரே!*

*உயிரினும் மானம் பெரிதென்று உலகத்தார் முன்னர் ஓதி*
*உயிர்காக்க மானம் விட்டு உலகெங்கும் பறந்த எமக்காய்*
*உயிர் ஈந்து உயிர்காத்தீர் உயிரான மண்ணைக் காத்தீர்*
*உயிரினும் மானம் பெரிதென்ற உலகின் உண்மை காத்தீர்!*


படிப்பகம்

padippakam


உண்மையே பேசி அந்த உண்மைக்காய் உயிர் தந்து
உண்மையே உறுதி என்று உலகிலே நிலைக்க வைத்தீர்
உண்மையே பேச என்னால் ஒரு நாளும் இயலாது அதனால்
நன்மையே ஆகும் நானும் நாவினை அடக்குகின்றேன்.

28.11.2001


படிப்பகம்

padippakam


# வாக்கும் நோக்கும்

வாக்குத் தமிழ் அதனூடே நோக்கு ஈழம்
வாழ்ந்த இளமை வளமூர் சுதுமலை
காக்கத் தமிழ் கடமையோடு வகை செய்யக்
காடைத் தனமிக்க கயமை அரசுகளால்...

பார்க்குந் திசையெல்லாம் பறந்த தமிழரிலே
பாரை முழுதாண்டு பலமின்று இழந்து
யார்க்கும் கவரிவீசும் இலண்டன் சீமை வாழும்
நாக்கில் கவி கண்ட இராஜமனோகரன்.

வாக்கில் உண்மை வேண்டும் வாழ்வில்
வளமாய் இது அமைய
நோக்கில் நேர்மை வேண்டும் எந்த
நோவிலும் தளராத...

போக்கும் பொழுது எல்லாம் என்றும்
பொது நலமே கண்டு
தேக்கும் செல்வம் எல்லாம் எமது
தேச நன்மைக்கே என்றும்...

காக்கும் அரசும் அதன்
கண்ணியத் தலைமை ஒன்றும்
யார்க்கும் மடங்காத அதன்
நன் நெஞ்சத் துணிவும்...

பார்க்கும் திசை எல்லாம் அவர்
பகைவர் நின்றிடினும்
காக்கும் கட்டுப்பாடும் அதுவே
கடமை எனக்காணும்...



படிப்பகம்

padippakam



தலைமை என்ற ஒன்று இலங்கை
தகவுறக் கண்ட போதே
நிலைமை சீர் ஆகும் ஈழத்தின்
நினைவும் நனவாகும்.

தலைமை வாக்குச் சீட்டால்(த்)
தரணியிலே வாராது என்றும்
தலைமை வாக்கின் வளத்தின்
தகவினால் உருவாகும்.

எத்தனை தடவை அங்கு தமிழர்
எக்காளமிட்டுத் தேர்தல்
இத்தரை மீதுஇன்று கடிவாளம்
எம்முடைக் கட்சிக்கு என்று...

கொக்கரித்துக் கொழும்பு சென்று
கோட்டையில் வாயும் வயிறும்
தக்கவைத்து தலைமை இழந்து
தரணியில் அழிந்த பின்னும்...

எப்படி நம்ப முடியும் எவரையும்
ஏய்த்து வாழும்
செப்படி வித்தை தானே என்றும்
செகத்திலே அரச வாழ்வு.

தன்னையே அழித்துத் தலைமை
தனைக்காக்க உயிரை ஈந்து
மண்ணையே காக்கும் எங்கள்
மாவீரர் தம்மை மனத்தில்...

என்றுமே இருத்திப் பாரும் என்றும்
எம்முடைத் தீர்வு இரண்டே
நன்றுமே பேசி எங்கள் நாட்டினை
நாமே ஆளல் அல்லது...



படிப்பகம்

padippakam



என்றுமே போர்தான் எமக்கு அங்கு
என்றுமே எமனின் வரவு
ஒன்று நாம் ஆக வேண்டும் தமிழர்
ஒப்பற்ற தலைமை சிங்கள...

மன்றில் உருவாக வேண்டும் இலங்கை
மண்ணில் என்று இவை வருமோ
அன்றே உருவாகும் அழகுமிகு தமிழீழம்
அதனரு காங்கோ ரழகிய சிங்களம்.

வாக்குச் சீட்டு வளங்கள் தாராது
வளத்தை வராது வளர்க்கும் தடையது
வாக்கு இது கவிஞன் வார்த்தை
நோக்கம் ஒற்றுமை நோக்கி இணைவோமா?

06.12.2001



படிப்பகம்

padippakam



# சிலுவையும் நிலுவையும்

பிறந்தது தமிழீழம் சுதுமலை மண்
பிறந்தும் முன் இறந்தும் பலமுறை
கறந்தது கதிகெடப் பாவங்கள் என்றும்
கடல் கடந்தது சிலுவையோடு இங்கு.

இறந்தது சிலுவையில் சுமைகெடும் என்று
இருப்பது இங்கிலாந்தில் இன்று
பிறந்தது கவிதை பின்னிடும் காற்றலை
பிதற்றுதல் இராஜமனோகரன் நன்று.

மண்ணவர் பாவம் மண்ணிலே என்றும்
மடியாது நிலுவையே என்று
விண்ணவர் தேவன் விரைந்தனன் பெத்தல
கேம் எனும் மண்ணிலே அன்று.

மண்ணவர் பாவம் மடியாத நிலுவை
மாற்றினான் பாரிய சிலுவை
விண்ணவர் குமாரன் விரைந்தனன் சுமந்து
விடிவினை ஆக்கிட எமக்கு.

பாவத்தின் பயன் பாரிலே மரணம்
பாடத்தைப் புகட்டினான் மரித்துப்
பாவத்தைப் போக்கினாற் பயன் இதுவென்று
பாடமாய் ஆக்கினான் உயிர்த்து.

சிலுவையைச் சுமந்து நிலுவையைக் கழித்துச்
சீர்பெற வழிவகை செய்தும்
சிலுவையை விடுத்து சீர்காண வேண்டிச்
சிலுவையில்த் தேவன் மரித்தும்...



படிப்பகம்

padippakam


நிலுவையை உயர்த்திச் சிலுவையைப் பெருக்கி
நிலத்திலே அழிந்தோம் நாங்கள்
வலிமையை உயர்த்தும் வழியிது என்று
வருத்தினோம் மற்றையோர் தம்மை.

காதலும் வீரமும் கண்ட தமிழினம்
கண்டவர் உட்புக அன்று
மோதலும் வறுமையும் முட்டி நின்றிட
முழுவதும் மாறினர் தன்மை.

சாதியும் கொண்டு தம்மையே தாழ்த்திச்
சகதியிற் புரண்டனர் தங்கள்
பாதியைக் கொள்ளப் பாரிலே கொண்டனர்
பாவத்தின் சீதனச் சிலுவை!

பாவத்தின் நிலுவை பாரிலே உயரப்
பாங்காக உயர்ந்தது சிலுவை
தாவித்தான் கடல்கள் தாண்டியே வந்தோம்
தாண்டினும் சிலுவையோ தோளில்!

ஆபத்தைக் குறைக்க அகலுவோம் என்று
அகதியாய் ஆகினோம் இங்கு
ஆபத்தைக் குறைக்க அகன்றுமே சட்டியை
அடுப்பிலே விழுந்தது போலே!

சிலுவையை இறக்க நிலுவையைக் குறைப்போம்
சீர் பெறச் சிந்தனை செயல்கள்
கொலுவிலே இறைவனைக் கொள்கையாய் வைத்துக்
கொள்ளுவோம் அன்பையே என்றும்.

சாதியைச் சாடுவோம் சந்ததி தழைக்கும்
சாதனை நிலுவையிற் குறைப்பு
பாதியைக் கொள்ளப் பாரிலே சீதனம்
பாவமென்று அகற்றுவோம் சிலுவை.



படிப்பகம்

padippakam


தானுமே அகன்றிடும் தாவியே கழிந்திடும்
தப்பாது கழியுமே நிலுவை அப்போ
கானமாய் இறைவன் காதிலே உரைப்பான்
கழற்றினாய் சிலுவையை என்று!

20.12.2001


படிப்பகம்

padippakam


# பேச்சும் வீச்சும்

மூச்சு இவ்வுடம்பில் முகிழ்த்தது சுதுமலையில்
பேச்சு இன்தமிழாய்ப் பிறந்தது ஈழ மண்ணில்
ஓச்சும் கோல் இழக்க ஒளிந்தது இங்கிலாந்தில்
வீச்சுத் தமிழ் மூச்சு விண்ணில் இராஜமனோகரன்.

எத்தனையோ பேச்சுக்கள் இலங்கை வரலாற்றில்
அத்தனையும் தந்தன அந்நேரச் சுகம் மட்டும்
இத்தனையும் கண்டபின் இப்பேச்சை நம்பிடவே
எத்துணையும் மனது இசையவில்லை என்செய்வேன்.

நானேன் நம்பவில்லை நல்ல மனம் இல்லை என்றா
காணேன் நம்புதற்குக் கடினமான இரண்டு வேண்டும்
காணோம் ஒற்றுமை கள்ளம் இடையில் இல்லாமல்
காணோம் தலைமை கண்டதில்லைச் சிங்களத்தில்.

பிளவுபட்ட தமிழினம் பிளவில்லா மனத்துடனே
களவுகெட்டு வாழ்வுபெறக் கயமை அகற்ற வேண்டும்
பிளவுகெட்டு விடவும் இல்லைப் பிளவோடு சேர்ந்த
களவுகெட்டு விடவும் இல்லைக் காண்பதெப்போ தமிழீழம்?

தலைமை என்பதென்றும் தானாய் உருவாக வேண்டும்
தலைமை என்றைக்குமே தளிர்த்தில்லைத் தேர்தலிலே
நிலைமை இதுவாகும் நிலத்தில் எவ்வினத்திற்கும்
தலைமை என்றைக்கும் தந்ததில்லைச் சிங்களத்தார்.

ஒற்றுமை தமிழருக்குள் ஒளிர்தலைமை சிங்களத்தில்
முற்றுமே ஆமாகில் முகிழ்த்துவிடும் தமிழீழம்
சற்றுமே குறையினிவை சந்ததிகள் பல கழிந்தும்
முற்றுமே அழிவொழிய முகிழ்ப்பது வேறென்ன!



படிப்பகம்

padippakam



ஏறிவிடும் பழையபடி வேதாளம் முருங்கையிலே
கூறிவிடும் கவிக்கூற்றுக் குற்றம் இதில் இல்லை
மாறிவிடும் மனம் கண்டும் மாறாத மனம் கொண்டு
ஆறிவிடா மனத்தோடு ஆறிவிடும் கவிஞன் நான்.

சந்திக்கு வந்துவிட்ட சதிபதி சண்டை கூடக்
குந்தியிருந்து பின்னர் குணம் ஒத்துப் பேசுவதற்குச்
சிந்தையில் நம்பவேண்டும் சிறந்த சமவுரிமையோடு
நிந்தனையில்லா மனம் நிலையாக இருக்கவேண்டும்.

காலமெல்லாம் சண்டையிட்டுக் கடுகளவும் நம்பாத
கோலமெல்லாம் அழிவதற்குக் கொள்கைப் பிடிப்போடு
ஞாலமெல்லாம் எதிர்த்தாலும் நல்லவற்றை நம்புகின்ற
சீலமுள்ள மனத்தோடு சிந்தையில் உறுதி வேண்டும்.

நான் மட்டும் நல்லவன் அதை நம்புபவன் நல்லவன்
நான் மட்டும் வல்லவன் எனை வணங்குபவன் வாழ்பவன்
கூன் முட்ட வைத்துவிடும் குவலயத்தில் இவ்வெண்ணம்
தேன் சொட்டும் மலரெனினும் தெளிவது ஒரு நாளன்றோ!

பேச்சு வீச்சாகப் பேணவேண்டும் சம உரிமை
மூச்சு உயிராக முகிழ்க்க வேண்டும் ஒற்றுமை
வீச்சு விண்ணேற விரைந்து தமிழர் தலைமை
ஓச்சக் கோல் உலகில் ஒளிர்க நல் ஒற்றுமையே!

24.01.2002



படிப்பகம்

padippakam


# காதல் இல்வாழ்க்கை

காதல் இல்லறம் கண்டனன் கந்தையா
கன்னித் தமிழீழம் கவின் சுதுமலையில்
தீதில் நல்லறம் திகழ் மனோன் மணியுடன்
திருவளர் முதன்மகன் தீந்தமிழ்க்கவி இவன்
ஓதும் பெயர் உலகு ஒளிர் இராஜ மனோகரன்
ஒளிந்தது பயத்தில் ஒளிரும் இங்கிலாந்து
ஓதும் கவி இன்று உலகத் தமிழ் மகள்
ஒலியலைஊடே நற் காதலின் வேதம்.

வெள்ளி மால் வரை வியன் பெருசேடிக்
கள்ளவிழ் பூம்பொழில் காமக் கடவுளுக்குத்
தெள்ளிய காதலர் திருவிளக் கேற்றித்
தேறினர் மகிழ்ந்து செப்பியது இளங்கோ
தள்ளியே எம்மைத் தாக்கியே பலரும்
தாரணி தன்னில்(த்) தமிழ் முடி இழந்தோம்
மெள்ளவே இன்று மேதினி யெங்கும்
மேற்கோடு இணைந்து மேவிடும் நாளிது.

ஆயிரம் இரண்டின் அகவையின் முன்னர்
அரிவையர் ஆடவர் அனைவரும் இணைந்து
காயிலே இணைந்து காதலாற் பிணைந்து
காட்டியே இன்பம் காதலை வணங்கினர்
பாயிலே படுப்பினும் பஞ்சணை கொள்ளினும்
பாங்குற இணைப்பது பாரிலே காதலே
தீயிலே வேகினும் திருந்திய காதல்
தீயவை நீங்கத் திகழுமே என்றும்.

காதலில் இணைவதே இல்லறம் அது
காட்டிடும் வாழ்வு காதல் இல்வாழ்க்கை
மோதலில் இங்கு இடைவெளி வந்தால்
மோதும் இல் பிரிந்து வாழ்வது தனிமை
காதல் இல் வாழ்க்கை கனவிலும் துன்பம்
கண்டவர் தம்மை அண்டியே கேளும்
காதலில் வாழ்க்கை கலந்துமே சென்றால்
கடவுளின் பாதம் கண்டவர் நிலையே.


படிப்பகம்

padippakam


காதல் இல்லா அறம் கண்டவர் உண்டா
கடவுளின் மீதெனில் கனிந்திடும் பக்தி
காதல் இங்கு கடவுளின் மீதா இல்லைக்
காட்டுவர் காதல் கண்ட பொதுவுடைமை
காதற் கன்னி காளையர் இலையெனில்
காதலையே இங்கு காதலித் திடுவீர்
காதலி னுருவாய்க் காதலர் இணைவர்
கண்ட இவ்வுண்மை என் காதல் அனுபவம்!

ஆணும் பெண்ணும் ஆயுள் வரையும்
அளவிலாக் காதல் அகத்திலே கொண்டு
பூணும் இல்லறம் புனிதம் அடையும்
பூத்திடும் இன்பம் புகழ்நிலை அடைவர்
காணும் காட்சிகள் காதலின் காட்சிகள்
கடவுளின் நிலை காசினி எய்துவர்
தேனும் பாலும் தெவிட்டலாம் காதல்
தெவிட்டுமா இங்கு தெளிந்த உரையிது.

காதல் உலகைக் கட்டிடும் இழுவிசை
காதல் உண்மையைக் காட்டும் இன்நிலை
காதல் மனத்தினைக் காட்டிடும் உயர்நிலை
காதல் யாரையும் காத்திடும் களிநிலை
காதல் மோதலைத் தவிர்த்திடும் பெருநிலை
காதல் சாதலைச் சாடிடும் வாழ்நிலை
காதல் இன்பம் கனிந்திடும் தனிநிலை
காதலே வாழ்விற் கடவுளின் வழிநிலை.

காதலே செய்வீர் என்றும் காசினி வாழுகின்ற
கன்னியர் காளை நல்லீர் காதலே வாழுமென்றும்
காதலே கொண்டு உங்கள் கைகளைப் பற்றும்
காதலைப் போலே வாழ்வு கனிந்திடும் என்றும்
சாதலே இல்லை இங்கு சந்ததி வாழும் நன்று
சாதனை கூட ஆகும் சாதித்து இன்பம் காணும்
காதலை என்றும் கொண்டு கடவுளைக் காண்பீர்
காதலே வாழ்வின் வேதம் காதலே வாழ்வின் கீதம்!

14.02.2002


படிப்பகம்

padippakam


# பாதை திறப்பு பாதையைத் திறக்குமா?

தமிழீழம் சுதுமலையின் தங்கியுள பாதையெல்லாம்
தனியாகப் பின் இணையாக நண்பரோடு இனிமையாக
அமிழ்தான தமிழ்பேசிப் பின் அருகணைந்த மங்கை
அவளோடும் சிலபாதை அத்தனையும் இன்பாதை.

பாதைபின் வான் அமைத்துப் பார்சுற்றிப் பறந்து வந்து
பாதம் என்றும் பதியாமல் பட்டுமண் படியாமல்
காதையிது கூறவரும் கந்தையா இராஜமனோ
கரனிங்கு கத்துவது கண்டபாதைக் கவியின்று.

*பாதம் பதிந்த இடம் பாதை – சொல்*
*பாரில் வந்த வகை அன்று*
*நாதம் பதிந்த தமிழ்ச் சொல்லே – பின்*
*நாமோ மறந்து விட அன்று.*

*காதம் பல கடந்து வந்த – வெள்ளைக்*
*காரன் கடன்பெற்ற சொல்லு*
*பாதை இங்கு தவளைக்கு என்று – தமிழர்*
*பார்த்திருக்க நேர்வே அன்பு.*

*பாதம் பதிந்த இடம் பாதை – வன்னிப்*
*பாதம் பதித்தவர்கள் தமிழர்*
*நாதம் சிறந்த இடம் இன்றோ – வெளி*
*நாட்டார் திறந்து விடல் நன்றோ.*

*தன்னாற் கெட்டவனே தமிழன் – தன்னைத்*
*தானே அழித்தவரில்(த்) தலைவன்*
*என்னாற் கண்ட உண்மை அல்ல – இதை*
*ஏற்பார் இன்தமிழர் எல்லாம்.*


படிப்பகம்

padippakam


சாதி பல கொண்டு எம்மை – என்றும்
சாடி அழித்தவர்கள் நாமே
பாதி பாதியாகப் பிறந்து – பின்னர்
பாரில் இல்வாழ்க்கை அமைக்க...

ஓதிக் கேட்டு நின்றோம் பணமே – நாம்
ஒன்றும் உயரவில்லைத் தாழ்ந்தோம்
பாதிப் பாதை வாழ்விற் கழிந்தும் – நாம்
பாரில் ஒன்று செய்யோம் நன்மை.

பாதை திறந்துவிட்டால் நன்மை – இதைப்
பாங்காய் அவர் செய்வார் ஆகில்
காதை பல கண்டோம் முன்னர் – பல
காலம் இறந்ததென்றும் பின்னர்.

மோதி வந்தவர்கள் மீண்டும் – தம்
மோதல் தவிர்த்திடுதல் நன்றே
மோதி வந்தவர்கள் சேர்ந்தால் – தம்
மோட்சம் அழிந்துவிடும் போலே...

ஆதிச் சிங்களவர் அமைப்பு – அவர்
அண்டி வாழும் புத்தர் முனைப்பு
ஏதோ பாதை தங்கள் வீட்டு – முற்றம்
எடுத்துச் சென்றுவிடும் போலே!

காதம் முப்பது கூட இல்லை – அருகே
காட்சி தந்துவிடும் நாடு
ஓதி உள்ளதின்று செய்தி – மூவர்
ஒப்புவித்திட வேண்டும் என்று.

காலன் கூட அணுகாத் தலைவன் – அவன்
கன்னித் தமிழர் மானக் காவல்
பாலம் மொழி மதம் இருந்தும் – அவர்
பாரதத்தின் நாய்வாலே என்றும்.


படிப்பகம்

padippakam


வேதம் தழைத்து நின்ற நாடு – பணம்
வேண்டில் வேதம் விற்கும் நாடு
போதும் உங்கள் தொல்லை என்ன – அங்கு
போதாத தலைமை தமிழர்க்கு என்றும்.

எதிரி தனக்குச் சகுனம் பிழைக்க – எவனோ
எட்டி அறுத்தானாம் தன் மூக்கை
எதிரி தமக்கு இந்தி இருந்தும் – இங்கு
எட்டி அறுக்கிறார் எம் மூக்கை.

பாதை திறப்பு என்றும் நன்றே – பாரில்
பட்ட துன்பம் யார்க்கும் வேண்டாம்
பாதை திறப்புப் பலர்க்கு உபாதை – இதைப்
பாரதம் வேதமாய் ஓதிடக் கேட்டீர்!

21.02.2002


படிப்பகம்

padippakam


# நிலத்தின் அழகும் புலத்தின் எழிலும்

அழகிய நிலமே தமிழீழம்
அழகேயான ஊர் சுதுமலையிற்
பழகிய நாட்கள் அழகியவை
பாய்ந்திடும் நினைவும் அழகியவை.

புலமென்ன குறைவா எழிலுருவே
புகுந்தது எழில்மிகு இங்கிலாந்து
நிலமதிலிருந்து கவிபுனையும்
நீள்கவி இராஜ மனோகரன்.

நிலமதில் என்றும் தரை வான்பார்க்கும்
நீண்ட மரங்கள் நீல வான்முட்டும்
குலமகள் போல் என்றும் இலைமுடிக்
கொள்ளை அழகால் எமை மயக்கும்.

புலமதிற் கோடை தலை காட்டும்
பூக்களும் இலைகளும் மரம் மூடும்
வளர்மகள் உடல் மறைத் திடும் ஆடை
வண்ணம் உடல் விட்டு அகன்றோடும்.

பனிவர மரங்கள் இலை உதிர்க்கும்
பாவையர் உடலை உடை மறைக்கும்
கனிதரு மரங்கள் காயுதிர்க்கும்
கன்னியர் உடலோ கனல் தேடும்.

எது எழில் எது சரி எமக்கெதற்கு
எம்முடைநிலமே எமக்குரித்து
இதுவரை உலகில் நாம் கண்ட
இன்னல்கள் தீர வழி இஃது.


படிப்பகம்

padippakam



நிலமதின் அழகு எமக்கழகு
நீண்ட கருமுடி எமக்கழகு
புலமதின் எழிலோ அவர்க்கழகு
பூண்டவர் பூணுதல் புவிக்கழகு.

இன்றைய நிலையோ நிலமதிலே
எண்ணிடில் இதயம் நூறாகும்
அன்றைய நினைவோ அகமதிலே
ஆறுமோ கண்கள் நீர் ஆறாகும்.

ஒன்று நாம் ஆகில் நன்றாகும்
ஒற்றுமை ஓரணி என்றாகில்
இன்று எம் ஈழம் எமதாகும்
எழிலுருவான நிலம் மீளும்!

28.02.2002



படிப்பகம்

padippakam


# பெண்ணிலை வாதம் தன்னிலை வேதம்

பெண்ணிலே வேதம் கண்டு என்னிலே வாதம் கொண்டு
கண்ணிலே காதல் கொண்ட கந்தையா இராஜமனோகரன்
பெண்ணிலை வாதம் என்றும் தன்னிலை வேதம் என்றும்
விண்ணலை வந்த தலைப்பிற் பண்ணிய கவிதை பகர்வேன்.

*பெண்ணொருத்தி பெற்றதன்று சுதுமலையில் – பின்
பெண்ணாகப் பிறந்தாரென் பின்னால் ஐவர் – என்
கண்பறித்துக் காதலென்றாள் ஒருத்தி வந்து – அவள்
பெண் பெற்றாள் ஆண் ஒன்றின் பின் இரண்டு – அதனால்...*

*ஆறு பெண்ணோடு வாழ்ந்தேன் அன்று அங்கு – இன்று
ஆறிலரைவாசியோடு வாழ் விங்கிலாந்தில் – இதனால்
வேறுபடப் பெண்ணை நினைத்ததில்லை – ஆனால்
வேறான அழகு மனம் வீரம் விவேகம் – எனப்பல...*

*ஆறாக ஓடல் கண்டதிசயித்தது நின்றதுண்டு – அகிலத்திற்
கூறாகப் பெண்ணை என்றும் கொள்ள வேண்டும் – குவலயத்திற்
கூறுபோட்டுப் பிரித்துப் பார்த்தல் நீதியில்லை – அதனால்(த்)தான்
கூறல்லப் பாதி என்றான் எம் பரமன் கூட.*

*கண்ணிரண்டும் ஒன்றாகக் காணல் காட்சி – காசினியில்
பெண்ணொடாண் சமமென்றாற் பெறுதல் மீட்சி – பேதமுற்றுக்
கண்ணிரண்டில் ஒன்றழிதல் பாதிக் காட்சி – கவின் ஈழம்
பெண் வீரம் சிதைத்திருந்தாற் பெறுமோ ஆட்சி.*

*பெண்ணோடாண் எவற்றிலுமே சமமேயாகும் – அதனாற்
பெண்ணுக்கு ஆண்அடிமை என்றும் இல்லை – இதுவோ
பெண்களுக்கு உரிமையான நேரம் அதனால் – நானும்
விண்ணலைக்கு விடைதருவேன் விரைவில் வணக்கம்.*

14.03.2002


படிப்பகம்

padippakam


# எடுத்த காரியம் யாவினும் வெற்றி

தொடுத்து வந்த துயரந் தன்னால்
சுதுமலை விடுத்துச் சுதந்திரச் சீமையில்
படுத்து எழும்பும் பாங்கினில் வாழும்
பாவலன் இராஜ மனோரன் இன்று.

எடுத்து வந்த கவிவரி தம்மை
எம்தமிழுறவே நின்செவி ஊடே
மடுத்து நிற்பீர் வணக்கம் உமக்கு
மாண்பு காக்கும் மனமது கொள்வோம்.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எம்தமிழ் ஒலியின் இன்தமிழ் நாதம்
தொடுத்த வாக்கியம் தோற்காதென்றும்
தொலைத்த வாழ்வைத் தொகுப்போம் நன்றே!

நினைத்த காரியம் நிலத்திலே நிலைக்க
நினைவிலே நன்மை நிலைக்குமே பிறர்க்கு
அணைத்து வளர்ப்பது அரவமே ஆயின்
அன்பு விலகினால் அடைவது நஞ்சே.

அனைத்து உலக ஒலி பரப்பு உயர
அணைத்திட வேண்டும் ஆக்கிய நல்லோர்
இனத்து உணர்வால் இருப்பவர் யாவரும்
இணைந்திட வேண்டும் இலங்கிட வெற்றி.

அனைத்து உலகும் ஒலித்திடத் தமிழே
ஆண்டிடத் தமிழும் அழகிய ஈழம்
அனைத்து உலகும் அடைந்த நாமெல்லாம்
ஆக்கிட வேண்டும் அரியவை பலவும்.


படிப்பகம்

padippakam


பேச்சு வார்த்தைக்குப் பேசிய போதே
பிறகேன் இவர்க்குப் பெருந்தொகை என்றோம்
பேச்சு நடக்குமோ பேசினால் நடக்குமோ
பிச்சை ஏற்றிடும் பிக்குகள் நினைக்கும்...

ஆட்சி நடக்குமோ அல்லவை நடக்குமோ
ஆண்ட தமிழினம் அழகு காணுமோ
ஆட்சி தன்னை அடைந்த பின்னாலும்
அடைய முன்னேற்றம் காசு வேண்டுமே.

காரியம் சிறக்கக் காண்போம் ஒற்றுமை
கனவிலும் பிரியாக் கடின உழைப்பில்
நாரியர் நம்பியர் யாவரும் தொடர்ந்து
நலமுடன் சிறக்க யாவரும் சமமே.

பாரிலே வாழும் யாவரும் சமனாய்ப்
பார்த்திட வேண்டும் பழகிட வேண்டும்
ஊரிலே வேறு உள்வீட்டில் வேறு
உதட்டிலே வேறு உள்ளத்தில் வேறு...

என்றிடல் இன்றி என்றுமே வாழின்
எம்தமிழ் ஈழம் நன்றது காணும்
குன்றிலே விளக்காய்க் குவலயம் காண
நன்றுமே வாழும் நம் தமிழ் ஆளும்.

ஆறுவயதாக அடியெடுக்கும் அனைத்துலக
ஒலிபரப்பின் ஆசான் ஒளிர்கவி தாசீசியஸ்
நூறுவயதாக நின்ஒலிதனக்கு நூறாயிரமல்ல
**நுதல்** பெறுகண்ணன் **நுதலுடை** வயது.


படிப்பகம்

padippakam


*என்றுமே ஆக இக்கவி கூறும்*
*எழில்மிகு வாழ்த்து ஏனைய அன்பின்*
*நன்றுமே செய்த நல்லவர் உமக்கும்*
*நவின்றிடும் வாழ்த்து நலமே பெறுவோம்!*

13.06.2002



படிப்பகம்

padippakam


# தற்கொடை தந்தவர் தாள் பணிவோம்

தம்மையே ஈந்து சிலர் தமிழ் நிலம் காத்து நிற்க
எம்மையே காக்கவேண்டி ஏகினோம் நிலத்தை விட்டு
இம்மையி லிதற்காய் நாணி இங்கிலாந்துறையும் இவன்
செம்மை சுதுமலை ஊர் சேர்கவி இராஜ மனோகரன்.

சிறுகவி அவர்க்கா யின்று செப்பிட வுள்ளேன் இங்கு
பெறுகவி கேட்குமன்பர் பெற்றிடில் இசையின் பயிற்சி
தருகவி பாடலாகத் தந்திடும் காலைக் கலசம்
மெருகுற வேண்டின் இதனை விடுக்கிறேன் நகலினூடே.

### விருத்தம்

கரும்புலியாய் உருமாறிக் காலமெலாந் தமிழ்வாழத்
தரும்பலியாய் உயிரீந்து தமிழ்வாழ வழி சமைத்தீர்
திரும்பவொரு உடல்கொண்டு தீந்தமிழின் சுவை பேச
விரும்பியொரு பிறப்பெடுத்து விரையீரோ ஈழமண்ணில்!

### எடுப்பு

கரும்புலி யாக வந்த காவலரே காவி யத்தின்
பெரும்பலி யாகி நின்று பேறெமக் களித்தவரே

### தொடுப்பு

தரும்பலி யாகு மென்று தம்மையே தந் துயர்ந்த
பெரும்புலி வீரர் களே பெரிதுமுந் தாள் பணிவோம்


படிப்பகம்

padippakam



## முடிப்பு

பெரும்பகை வந்த போது பிறந்தநம் மண்ணைவிட்டு
கரும்பென உயிர்காத்துக் காதலின் அயல் நீத்துத்
துரும்பென மதிப்பிழந்து தொன்மை முகவரி யிழந்து
தரும்பகை அயலோடு தரணியிலே வாழ்பவர் நாம்

திரும்பவும் ஈழம் காண திருந்திய வாழ்வு வாழப்
பெரும்பகை தீரும் என்று பெற்றவாழ் வெமக் கீந்து
கரும்பல்ல உயிர் என்ற காட்சியின் கலை வடிவே
கரும்புலி அல்ல நீவிர் கடவுளின் வடிவ மாவீர்

07. 07. 2002



படிப்பகம்

padippakam


# ஆலய வழிபாடும் ஆன்மிக ஈடுபாடும்

ஆலயம் கொண்டு ஆன்மிகம் தழைத்த
அழகு தமிழீழம் அமைந்த சுதுமலை
ஆலயம் வீடு அன்பினால் இணைந்து
ஆன்மிக விளைவாய் அடியேனை ஈந்து

இராஜ மனோகரன் நற் பெயரிட்டு
நயந்து நலமுடன் நாட்டிலே போரெழத்
தேசமே துறந்து தேடிய நாடின்று
தேடாத கனவின் திகழ் இங்கிலாந்து.

ஆலயம் என்பது ஆன்மிகப் பள்ளி
ஆன்மிகம் என்பது அன்பு காட்டுதல்
மாலயன் காணாத மலரடி தம்மை
மந்திரம் செபித்து மயக்கிட இயலுமா.

பள்ளி கட்டுதல் படிக்க மட்டுமே
படிப்பு இறைவனைப் பார்க்க மட்டுமே
கள்ள மென்பது காய்ந்த அன்பிலே
காட்சி தருபவன் கனிந்த மனத்திலே.

பள்ளி செல்வது படிக்க மட்டுமே
பாடம் படிப்பது காலம் முழுதுமா
பள்ளி சென்றிடில் வாழ்வு ஆகுமா
பாதி வாழ்விலும் பாதி போதுமே.

பத்து ஆண்டிலே கற்றல் யார்க்குமாம்
மொத்தம் இருபது முழுதும் உணரவாம்
மெத்தப் படித்ததும் வேலை வேண்டுமாம்
மேவும் இதுபோல் விளையும் ஆன்மிகம்.


படிப்பகம்

padippakam


கற்ற பின்னரும் கல்விச் சாலைக்குக்
கற்றுத் தந்திடக் கற்றோர் செல்குவர்
மற்றை யாவரும் மடியும் வரையிலே
மதித்துக் காட்டுவர் மகிழ்ந்து உதவுவர்.

சைவந் தந்தது சைவ சித் தாந்தம்
சாதி பார்த்திடும் நீதி அங்கில்லைத்
தெய்வந் தொழுவதில் தேருமே நன்மை
தேடி வந்தவர் தெருளைப் போக்குமே.

கடவு ளருளினைக் கருணை என்கிறோம்
கருணை எம்மனம் காண மறுக்கிறோம்
கடவுள் தாயெனில் காண்பவர் யாவரும்
கடவுள் பெற்ற எம் சோதரர் அன்றோ.

மேற்கில் ஆலயம் வேண்டும் ஆயினும்
மேவி யாவரும் மேன்மை தருவதாய்
ஆக்கில் ஒருசில அழகும் இருந்திடும்
ஆன்மா தேடிடும் அமைதி நிலைத்திடும்.

தேவைக் கென்றுமே அமைந்த ஆலயம்
தேடினால் ஒன் றிரண்டு மட்டுமே
நாவைக் கடிந்ததால் நயத்தைத் தருவதால்
நாலுபேர்முன் நடப்பாய் இருத்தலால்.

கோயில் கட்டுதல் குற்ற மாகுமாம்
கோயில் பெயரிலே கொள்ளை நடத்துதல்
நோயில் இட்டுமே வாழ்வை அழிக்குமாம்
நொந்து போனவர் வாழ்விற் குதவிடக்...

கோயில் உதவிடல் கொள்கை உயர்ச்சியே
கொள்கை மட்டுமே கொண்டு பணத்தையே
வாயில் இட்டிடல் வாழ்வை அழிக்குமாம்
வளரும் பிறப்பெலாம் வந்து நிற்குமாம்.


படிப்பகம்

padippakam


தேவைக் கதிகமாய்த் திகழும் கோயில்கள்
தேடிக் காட்டிடா தேடும் அமைதியை
மாவை வாங்கினால் வாடும் பிள்ளையின்
வயிற்றின் பசிக்குணவு வந்து சேருமோ?

காசு வாங்கியே காதல் செய்பவர்
காணும் இல்லறம் போல ஆகுமே
மாசு கொண்டவன் கோயில் கட்டியே
மார்க்கம் பேணுதல் தீமை ஆகுமே.

கோயில் கட்டிடக் கோயில் பேணிட
கொள்ள வேண்டுமே பஞ்ச சீலமே
வாயில் வருவதும் மனத்தில் எழுவதும்
வாழ்க்கை யாகவே வாழ வேண்டுமே.

காலை மாலை தான் கடவுள் என்றில்லைக்
காணும் பொழுதெலாம் கடவுள் சிந்தனை
மேலை நாடென்ன கீழை நாடென்ன
வேண்ட வருவது மிளிரும் சமத்துவம்.

கல்லில் உருவத்தை அமைத்து விட்டதால்
கடவுள் வந்ததில் இருக்க விழைவரோ
நெல்லின் உருவத்தை மண்ணிற் செய்திடில்
நிறைந்த பசிக்கது நிறையுண வாகுமோ?

கடமை செய்வோம் காதல் வளர்ப்போம்
காதல் இல்லறம் கடவுளறம் என்போம்
மடமை அல்லவே மண்ணில் வாழ்ந்திட்ட
மாந்தர் தம்மில் உயர்ந்தோர் கூற்றிது.

காதல் செய்யும் வீடே கோயிலாம்
கடமை செய்யும் காதல் வேதமாம்
காதல் கூடவோர் வேதம் ஆதலால்
காதல் வாழ்விங்கு ஆன்மிக மாகும்.


படிப்பகம்

padippakam


*காதல் செய்யும் மனைவி சக்தியாம்*
*காதல் செய்யும் கணவன் கடவுளாம்*
*காதல் செய்வாரே கடவுளுக்கு அன்பராம்*
*காதல் செய்வானே கடவுள் அவரையாம்.*

21.08.2002


படிப்பகம்

padippakam


# சமாதானம்

சுதுமலை மண்ணிற் சமதளம் அமைத்து - அன்று
சுகமென நடந்ததோர் கன்னிகா தானம்
பதியொடு வாழ்விலே சமதளம் அமைத்து - என்னைப்
பாரிலே பெற்றனள் படைத்தது நிதானம்.

தமிழரை அரசு அன்று ஒதுக்கிய போது - கடல்
தாவி யான் ஒதுங்கியது இங்கி லாந்து
அமிழ்தினும் இனிய தமிழிலே கவிதை - இன்று
ஆக்கி அளி கவி இராஜ மனோகரன்.

உலகிலே எங்கும் சமதளம் இல்லை – அதனால்
உண்மையாய் என்றும் சமாதானம் இல்லை
பலமுள மனிதரின் தயவிலே வாழ்தல் – இன்றேல்
பாதையில் விலகிப் பதுங்கியே வாழ்தல்.

இதுமுறை எனவே இருந்தது உலகம் – இன்றும்
இவ்வழி தானே இயங்குவ துலகம்
எதுமுறை என்று எவருமே கேட்டால் – என்றும்
ஏளனம் முதலிற் பின் எதிர்த்திடிற் போரே.

இத்தனை ஆண்டுகள் எத்துணை இழப்பு – மக்கள்
இழந்தவர் உயிரே ஓர் ஆயிரம் ஆயிரம்
அத்தனை ஆண்டுகள் அவனியில் உரிமை – அதனை
அடைந்திடப் போரிலே அழிந்தவர் பல்லாயிரம்.

இத்தனை இழக்கநாம் எதிரி தேவரா – அமுதம்
இயற்றியே உண்டு இறப்பினை இழக்க
அத்தனை இழப்பும் அங்குமே உண்டு – ஆனால்
அரசுக்கல்ல அதன் படையினர்க்கே.



படிப்பகம்

padippakam


எத்தனை முறைநாம் பேசுவோம் என்றோம் – அவர்
ஏளனம் செய்தனர் எழும்பகை காத்து
அத்தனை முறையிலும் அரசபயங்கரம் – தமிழர்
ஆவியைக் குடித்து ஆடினர் வெறியில்.

இடையிலே அழைத்தனர் இருத்தினர் பேசி – அவர்
இயற்றிய எழுத்தையே இட்டனர் நெருப்பில்
படையிலே பெருத்தவர் வெல்லுவர் என்று – அவர்
பலமுறை தோற்றுப் பலம்தனை உணர்ந்தனர்.

எல்லாமே சமமென எதிர்ப்பட்ட வேளை – அவர்
எதற்கினிச் சண்டை பேசுவோம் என்றார்
நல்லோராய் அவரும் மாறிடும் வேளை – நாம்
நலமுடன் இசைதல் நலமென விளைந்தோம்.

சமதளம் இன்றுதான் சரித்திரம் தன்னில் – அவர்
சண்டையில்(த்) தோற்றபின் சமாதானம் என்று
ஒருதளம் அமைத்து அவர் ஓரணி நின்று – தம்
ஒற்றுமை பற்றிப் பலவகை பேசல்.

மறுவிலா வகையில் வளர்ந்திடில் நன்றே – என்றும்
வன்முறை வளரின் வாடுதல் மக்களே
தெருவிலே வந்தவர் உறங்கிய நிலைமை – இனித்
திரும்பிட வேண்டாம் தெளிந்துமே வாழ்வோம்.

இதிலொரு படிப்பனை எமக்குமே உண்டு – நாம்
எல்லோரும் தமிழர் நாம் எல்லோரும் சமமே
கதியெனக் கையினை காட்டியே ஏந்தும் – அக்
கடைநிலை எம்முள் எவர்க்குமே வேண்டாம்.

முதியவர் இளையவர் முதுசமே கொண்டவர் – உடல்
முழுப்பல முள்ளவர் முனகிடும் உடம்பினர்
நிதிமிக வுள்ளவர் நிதியிலா ஏழையர் – என
எதுவகை வாழினும் எல்லோரும் சமனே.


படிப்பகம்

padippakam


காதலால் இணைந்து பொற் காசினை மறந்து – அவர்
காதல் நாண்பூட்டிக் காதலே தளமாய்
ஆதாரம் அன்பாய் அனைவரும் சமமாய் வாழ – தமிழ்
அடைந்தநற் பெருமை அவனியில் மீளும்.

சமதளம் எதிரியோடு சமாதானம் அடைய – எம்
சந்ததி உயர வாழச் சமதளம் எமக்குள்
சமதளம் காண்போம் சமமென நாமே – என்றும்
சரித்திரம் படைப்போம் தமிழராய் ஒன்றாய்!

13.11.2002


படிப்பகம்

padippakam


# விடுதலை வித்துக்கள்

சுதுமலையின் வித்து சுந்தரத் தமிழ் கற்று
மதுமலரின் கொத்தாய் மனமகிழும் நித்தம்
கதியகதி யான கந்தையா இராஜமனோகரன்
பதி இங்கிலாந்திற் பா வரிகள் தருவோன்.

பலவிதமும் நன்றாய்ப் பார்புகழ வாழ்ந்து
நிலவுலகிற் பின்னர் நீண்ட புகழ் தேய்ந்து
பலவிதமாய் இன்னல் பலரிடமும் பெற்று
உலவவொரு நாடு ஒன்று மிலையாக...

வாழ்ந்து வந்த தமிழர் வந்த நிலை உணரார்
தாழ்ந்து நின்ற மனமும் தம்மைத் தாமே தாழ்த்தி
வீழ்ந்து நின்ற தமிழை விரைந்து தூக்க மாட்டார்
வீழ்ந்த வனின் சாதி விரைந்து பார்த்து நிற்பார்.

பாதியாக இறைவன் பார்வதியை அணைத்தும்
நாதியற்ற தமிழர் நங்கையரை மணக்கச்
சீதனத்தைக் கேட்டுச் சிறுமை சேர்த்து நின்றார்
காதலித்தார் கூடக் கயமை காட்டிப் பிரித்தார்.

எமது நல்ல காலம் என்று சொல்ல வேண்டும்
தமது நிலையை என்றும் தாழவிடாத எதிரி
தமது மதத்தின் பெயரைத் தாமேயழிக்கும் பிக்கு
எமது தருணம் வாய்க்க எம்மை என்றும் அடித்தார்.

அரச நெறியில் நின்று அனைத்தும் எதிர்த்துப் பார்த்து
உரசி நின்று பார்த்து உதையைத் தாங்கிப் பார்த்து
சிரசு வரையில் வெள்ளம் சென்றபோது வந்தார்
மரபு வழியில் நின்று மானம் காத்த வீரர்.


படிப்பகம்

padippakam



அடித்தா லடிப்போ மென்றும் அதுவே தருமம் என்றும்
படித்தார் புதிய வேதம் பாடம் புரிந்தது அப்போ
அடித்தா லடங்கில்(த்) தருமம் அடக்கும் என்ற போது
படிக்க மறுத்த பகைவர் படித்து நின்றார் இப்போ.

தம்மை விதையாய் இட்டுத் தருமம் காத்த வீரர்
இம்மை எமக்கு அழித்து இணைந்தார் மறுமை ஏகி
அம்மை சுமந்து பெற்று அப்பன் இணைந்து வளர்க்க
எம்மை வாழ வைத்தார் எதனைக் கொடுப்போம் ஈடாய்.

பணமும் ஈடு ஆமோ அவர்க்குப் பாடல் ஈடு ஆமோ
தனமும் ஈடு ஆமோ அவர்க்குப் தானம் ஈடு ஆமோ
கணமும் அவரை எண்ணிக் கண்ணீர் விடுதல் ஈடோ
தினமும் துதித்து நின்று திருப்தி காணல் ஈடோ?

எதுவும் ஈடு இல்லை எல்லாம் ஈந்து நின்று
கதியை இழந்து நின்ற கன்னித் தமிழின் ஈழப்
பதியை மீட்க வென்று பாதிவாழ்வில்(த்) தமது
விதியைத் தாமே ஏற்ற வீரருக்கு ஈடு ஏது!

தமிழின் தன்மை காத்து தமிழர் மானம் காத்து
அமிழ்தின் இனிமை காத்து அழியா வண்ணம் காத்து
இனியும் தாழ்வு இல்லை என்றே யாரும் சமமாய்
குனியும் வாழ்வு இன்றிக் கூடிநிற்போம் ஒன்றாய்.

போர் என்றாற் போர் என்று ஒருவர் சொன்னார்
போர் வேண்டாம் என்றாலும் அதுவே என்றார்
தீர் வென்றால் தான் மட்டும் எடுப்பார் என்றார்
தீர்த்து நின்றார் வேட்டுக்கள் மக்கள் மீது.

போர் என்றால் புலிக் குணம் என்று வந்தார்
யார் வரினும் யம னுலகம் நிரம்பும் என்றார்
போர் வேண்டாம் பேச்சென்று இப்போ வந்தார்
போர் வேண்டும் என்றாலென் பேச்சென்றாலென்...



படிப்பகம்

padippakam


நேர் நிற்போம் நின் கையில் உள்ளது என்று
நேர் நின்று தமிழ்(த்)தலைவன் இன்றும் சொன்னான்
பார் இன்று போற்று கின்ற பேச்சு வாழப்
பார் ஆண்ட தமிழ்மீண்டும் பான்மை பெறுக.

யார் இந்த நிலை தன்னை எமக்குத் தந்தார்
போர் கண்டு பொழுதெல்லாம் விழுப்புண் கண்டு
சீர் கொண்ட வாழ்வெமக்கு அழிப்பதற்காய்
மார்பேந்தி யமன் கயிற்றை மானம் காத்த...

மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள் – தமிழ்
வாழ்தற்காய்ச் சாவுதனை மகிழ்ந்தேற்றோர்கள்!
மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள் – தம்
மலைத்தோளால் மண் காத்த தமிழ்வேங்கைகள்!
மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள் – எம்
வரலாற்றில் நாம் கண்ட எரிமலைகள்!
மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள் – தமிழ்
மானத்தைக் காத்து நிற்கும் மாதெய்வங்கள்!

27.11.2002



படிப்பகம்

padippakam



# பாலன் பிறந்தான் பாவம் களைந்தான்

ஞாலம் அறிந்த நற்றமிழ் ஈழம்
ஞானம் தளைத்த சுதுமலை மண்ணிற்
பாலன் பிறந்தேன் பாவம் சுமக்கப்
பாய்ந்தே தாவிப் பறந்தே னிறங்கிப்...

பதுங்கிய நாடு பார் அன் றாண்டு
பாவம் சுமக்கும் ஆங்கில நாடு
ததும்பிய கவிதை தருபவன் இராஜ
மனோகரன் என்னும் மகிழுறு நம்பி.

காலம் வரவே கடமையைச் செய்ய
கடவுள் என்றும் கருணை செய்வன்
ஞாலம் சிறக்க நன்மையே ஓங்கப்
பாலன் ஆகவே வந்தான் இறைவன்.

கோலம் மனிதனாய்க் கொண்டால் மட்டும்
கொள்வான் சேர்த்தே என்றே வந்தான்
காலம் பிழைத்தால் கடவுளும் என்செய்வான்
கடவுள் குமாரனைக் கைவிட்ட தவனினம்!

இறை குமாரனை இறைவனாய் வேண்டாம்
இதயம் உள்ள மனிதனாய்த் தானும்
குறை யிலாவகை ஏற்கவே மறுத்துக்
கோள்பல சொல்லிக் குற்றமுங் கண்டார்.

பாவம் களையப் பிறந்தவன் தன்னைப்
பாவம் நிறைக்க வந்தவன் என்றார்
தேவன் பிழையைத் தெளிந்துமே கூறத்
தெய்வ நிந்தனை அதுவெனச் சொன்னார்.



படிப்பகம்

padippakam


நிலத்தை உழுதீர் நிறையவே பண்பட
மனத்தை உழுதால் மனிதம் பண்படும்
கலப்பை பிடித்தாற் கல்லிலும் பூக்கும்
கண்டால் அன்பைக் கல்மனம் இளகும்.

குலத்தைக் கொண்டு கொள்ளீர் வாழ்வு
குனிந்து உழுபவன் எம் கூனலை நிமிர்த்தி
நிலத்தை வளர்க்கும் நிர்மலன் என்றார்
நினைவிலும் அன்பை நிறைத்திடும் என்றார்.

பலத்தை உடலிற் பாய்ச்சினால் மட்டும்
பாரிலே சிறப்புப் பாயாது என்றும்
மலத்தை அகற்றிய மனமே பலமாம்
மனிதம் வாழும் மாண்பும் அதுவாம்.

அரசைக் கண்டு அடங்கிடா அரசன்
ஆகவே தன்னை ஆக்கினார் பாலன்
அரசன் உலகில் அவனே இறைவன்
அவனுடை குமாரன் தானே என்றார்.

அரசை வைத்து அகிலம் சுரண்டி
அனுபவித்திருந்த அனைவரும் ஏங்கினர்
வரவை உணர்ந்த வண்ணம் அறிந்தும்
வந்தவன் தம்மை மதிக்க மறுத்தனர்.

நாவல் வமையின் நாயகன் என்றார்
நன்றே மயக்க வல்லவன் என்றார்
சாவல் லிதொரு தண்டனை தன்னைச்
சாகாது தீர்க்க வேண்டுமே என்றார்.

நீதியின் பெயரால் மன்றம் அமைத்து
நீதியின் பெயரை நிலத்தினின் நகற்றினர்
பாதி வாழ்வையே முடித்திடா இறையைப்
பாரினை விட்டே நகர்த்திட முயன்றனர்.



படிப்பகம்

padippakam


தை பிறக்கும் வேளையிலே தொண்ணூற்றெட்டில்(த்)
தமிழ் ஒலிக்க அனைத்துலக வானில் ஒலித்தோம்
தை பிறந்தால் வழி பிறக்கும் என்றெம் தலைவன்
தான் எடுத்தான் போர்நிறுத்தம் தனது பக்கம்.

தை பிறக்கும் நாட்களி லோர் ஆண்டின் முன்னர்
தந்த பகை அத்தனையும் மன்னித் திட்டே
கை துறந்து படைக்கலங்கள் கருவி எல்லாம்
கானகத்தே வைத்துவிட்டுப் பேச வந்தான்.

மெய் துறந்து சிங்களத்தின் அரசு எல்லாம்
மேவி யெமை எந்நாளும் அழித்தே நிற்கப்
பொய் துறந்த போர் முரசத் தலைவன் பொங்கிப்
போர்க் கொடியை அசைத்திட்டான் புலியே ஆக.

மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது
மேதினியில் எம் நாட்டை மீட்க என்றே
மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது
மேவிய தம் பெற்றோரைத் துறந்தே சென்றார்.

நேற்றிங்கு பொங்கலிட்டோம் நிலையை அறிந்து
நிலைமையைத் தெளியாதார் இன்றே இட்டார்
நேற்றிங்கு மதியத்தில் மகரம் சென்றான்
நேர்நின்று காத்தருளும் ஆதவனும்.

மதியமே எமக் கென்றால் உதயம் கனடா
மாலையும் கழிந்த பின்பே ஈழ மண்ணில்
இதுதானே நிலை யதனால் இன்று காலை
ஈழத்தில்(த்) தமிழ்நாட்டிற் பொங்கலாமே.

எது நாளிற் பொங்கினாலும் பொங்கலாமே
எம் கருத்தில் உண்மை ஒளி எழுந்தே நின்றால்
இது நாளே என்றில்லை எல்லாம் நன்னாள்
இறையுணர்வை இதயத்தில் இருத்தி விட்டால்.



படிப்பகம்

padippakam



போர் பொங்கி வழிந்தோடி அல்லல் பொங்கப்
போகுமிடந் தெரியாது பிறந்த நாட்டில்
யார் எங்கு என் றறியாது கதியே அற்று
யாழ் நின்று **வன்னியூடே** கோவில்வரையும்...

ஏர் பொங்கி நின்ற மக்கள் எல்லாம் இழந்து
எத்தர்களின் கைகளிலே இடரே பட்டுக்
கார் பொங்கி வந்த தெனக் கண்ணீர் பொங்கக்
கண்டிட்ட நிலைமைதனைக் கனவே யாக்கப்...

பார் கொண்ட பொது நாடாய் நேர்வே வைத்துப்
பகைவனோடு பேச வந்தார் படையில் வென்று
வேர் கொண்ட தமிழீழ மண்ணில் வாழும்
வீரரிற்கு வாழ்வென்றும் பொங்க வேண்டும்.

பார் சென்று விழுது விட்ட பக்க வேர் யாம்
பாறிடாத ஆலமரம் தழைக்க என்றும்
நேர் கொண்டு ஒற்றுமையின் நிலைமை கொண்டு
நெஞ்சத்தில் அன்புருக உதவி செய்வோம்.

தை பிறந்து வரும் போகும் மீண்டும் பிறக்கும்
தமிழீழம் இனியொரு முறைதான் பிறக்கும்
தை பிறந்து வரும் போகும் மீண்டும் பிறக்கும்
தமிழீழம் பொங்கி நிற்கும் அத் தை எல்லாமே!

15.01.2003



படிப்பகம்

padippakam



இருநோக்கு இயற்றல் ஒருகண் சிறக்கணித்தல்
ஒருநோக் கிலேயே ஓராயிரம் சொல்லல்
தருநோக்கு அதனால்(த்) தாக்கியே அழித்தல்
பெருநோக்கு இயற்றிப் பெண் கூற்று ஆதல்...

உறு தொறும் உயிர் தளிர்ப்பத் தீண்டல்
முறிமேனி தன்னில் முத்தம் காண்டல்
செறி தொறும் காமம் சேர்ந்துமே இயற்றல்
செவ்விதழ் வெளுக்கச் செங்கண் அடைதல்...

இவை எலாம் இன்பம் இணைந்தபின் கூட
இணையத்தில் இல்லா இலக்கியம் இவையே
இவை எலாம் எனைப்போல் ஈடிலா வகையில்
இலக்கிய மாக்கிய இனிய நாவரசா!

பலவகை இன்னும் பகரலாம் எனினும்
நிலைமையை நேரம் நிறுத்தவே கண்டு
குலவிடும் காதல் குவலயந் தன்னில்
வளர்ந்திட வாழ்த்தி வளர்கிறேன் காதலில்!

05.02.2003



படிப்பகம்

padippakam


# காதல் வாழ்வு காதலே வாழ்வு

காதல் வாழ்வினைக் காத்த இருவர் அன்று
கன்னித் தமிழீழம் கண்டவூர் சுதுமலையில்
ஓதத் தமிழ்க் கவியை ஒருவன் மகன் பெற்று
ஒளிபெற இட்ட பெயர் இராஜ மனோகரன்.

மோதச் சிங்களத்தார் மொழியில் வெறி கொண்டு
மொட்டு வரையு மவர் மோதி அழிக்கையிலே
சாதல் வழியொன்று சந்ததியோடு இடம் பெயர்தல்
சார்ந்த அடுத்த வழி சாதித் தின்று இங்கிலாந்து.

காதல் வாழ்வு கண்ட கவிஞு நா வரசா
காத லென்றால் என்ன கவிதைக்கா பஞ்ச மிங்கு
காதல் சலிக்காது கவிஞர்க்கு ஆனாலும்
கவிஞு ஒரு கேள்வி காதலைப் பாட முன்பு.

வீரம் கண்டவர் விளை பயிரைக் காணவில்லை
விரைந்து அது மறந்து வீரத்தை ஒதுக்கி விட்டு
ஆரம் கண்டு விட்டாள் அரியணையில் தமிழ் என்றா
அனைத்துலகத் தமிழ் ஒலியில் அது மறந்தாய் நாவரசா.

காதல் வாழ்வு அன்று கண்டார் நம் தமிழரினம்
காதலை வீரத்தால் காட்சிப் படுத்துகையில்
சாதல் அன்றில்லைச் சாதியும் அன்றில்லைச்
சாகாத வீரம் மட்டும் சார்ந்தது அரணாக.

காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர் வளர்த்தார்
காதல் வரம்பொழுக்கும் கருவிதான் பெரு வீரம்
தீதில் வாழ்வுகண்டு சிறப்பும் அவர் கண்டார்
திண்ணியராக அவர் திருநிறை வாழ்வு கொண்டார்.


படிப்பகம்

padippakam


காதலே வாழ்வென்று கண்டால் எவ்வினமும்
காணார் அதன்பின்னே கண்டவற்றைத் தமிழினமே
மோதல் தந்துநின்ற மொகலாயர் வந்தபின்பு
முடங்கிய பலவற்றுள் முதல் காதல் என்பேனே.

சேலை மூடாத செந்தூர முகங்க ளெல்லாம்
சென்று முடங்கியது என்றும் மூலையிலே
காலை மூடாத கண்டாங்கிச் சேலை யெல்லாம்
களத்தை விட்டகன்று கண்டது வீட்டு மூலை.

வேளை பிழைத்ததனால் வெளியேற மொகலாயர்
வெள்ளை நிறத்து மூவர் வேதனை தந்து நின்றார்
ஆளை மாற்றிடுதல் அவர்க்கு வழி என்றால்
அதனை அடுக்காது அடுக்களைக்குள் முடங்கியது.

காதலே வாழ்வென்று கண்டபின்தான் தமிழரினம்
காணும் முழு உயர்வைக் காண்போம் அவனியிலே
சாதலே தமிழுக்காய்ச் சாகாது தமிழ்வாழச்
சாதனை படைத்திட்டார் தமிழன்னை பெற்றவர்கள்.

நீதியாய் வாழின் நாம் நினைப்பிலே கூட என்றும்
பாதியாய்த் தன்னுறவைத் பாரிலே கொண்டுவந்து
காதலைச் சொல்லி நின்றாற் காண்போம் தெய்வீகம்
காதலைக் கண்டவர்கள் கண்காணும் சிவனுமையே.

சாதியைச் சொல்லி அவர் சாதகத்தை மாற்றாதீர்
சாதகத்தில் சனி செவ்வாய் சரித்துவிட எண்ணாதீர்
மோதலைச் சொல்லி அவர் முற்பாட்டன் காலத்தில்
முடிந்தவிட்ட வரலாற்றை முடிந்துவிட முனையாதீர்.

வாதமாய்ப் பல வைத்து வைதே அவர் தேய
வந்தபடி வாயினிலே வளர்க்காதீர் வாதமென்றும்
சீதனமென்று சொல்லிச் சிந்தையிலே ஈரமின்றிச்
சீரற்ற நிலைகண்டு சீரழிந்து போகாதீர்.


படிப்பகம்

padippakam



*காதலை வாழ்த்தி நின்று காதலிக்கும் இருவரையும்*
*காணவே நல்வாழ்வு காட்டும் நல் ஆதரவே*
*சாதலை வீழ்த்தி நின்று சாகாத காதல் என்றும்*
*சந்ததிக்கு உதவி செய்யச் சாதனை புரிந்து நில்லும்.*

*காதலே வாழ்வு என்று காதல் வாழ்வு அமைந்தால்*
*காணும் இன்பநிலை கடவுளர் தம் இன்பநிலை*
*காதலே வாழ்வு என்று காதல் வாழ்வு அமைந்தால்*
*காசினி இல்வாழ்வு கடவுளர் தம் நல் வாழ்வு!*

19.02.2003



படிப்பகம்

padippakam


# தமிழர் என்று சொல்வோம்

தமிழனாகப் பிறந்தேன் தமிழீழம் சுதுமலையில்
தந்தை தாயர் இட்டார் இராஜமனோகரன் பெயர்
தமிழனென்று அடித்ததரசு தாவிவிண் பறந்தேன்
தாரங்குழந் தையோடு தரிப்பதின் றிங்கிலாந்து
தமிழரல்ல இனியென் சந்ததி என்றுஎண்ணத்
தனிமைகாணும் உள்ளம் இனிமை எல்லாம் கள்ளம்
அமிழ்வதென்றும் வெறுமை அதுவே இனியென் கவலை
ஆனாலுமென் உறவே அளிப்பேன் வணக்கம் தமிழில்.

தமிழரென்று சொல்வோம் தலைநிமிர்த்தி நிற்போம்
தமிழர்புலவன் சொன்னான் தமிழர்தம்மைப் பார்த்துத்
தமிழனாகப் பிறந்து தமிழனாக வாழ்ந்து
தகவுசொன்னான் அவனும் தமிழன் பாரதிதாசன்
தமிழர்சிலரே நிமிர்ந்தார் தமிழீழ மதிலுள்ளார்
தமிழர்தம்மிற் பயந்தோர் தாவியெங்கு மழிந்து
தமிழனென்று சொல்லத் தகுதியென்ன எமக்குத்
தமிழின்தாய்மார் பெற்ற தவிப்பு வீணேயென்றும்.

தெற்கைப் பார்த்து அன்று திகைத்து நின்றானன்றோ
தென்னவன் போலே வீரம் திகழும் என்று சொன்னான்
பொற்கை கொண்டு பிரபா பிடிக்க முன்னர் துவக்கைச்
சொற்கள் கொண்டு அன்றே தொகுத்து விட்டான் கவிதை
நற்கைகொண்டு குவித்து நல்லதமிழிற் பாடி
நாளும் நினைப்போம் அவனை நவில்வேன் மனத்தில் வணக்கம்
கற்கை கொண்ட புலவன் கன்னித் தமிழின் துணைவன்
காலம் எல்லாம் நிலைப்பான் காதற் பாரதி தாசன்.


படிப்பகம்

padippakam



தமிழர் என்போர் யாவர் தலைகள் பெருத்துள்ளோரா
தமிழைப்பேசும் வாயா தமிழை விற்கும் பேயா
தமிழைவிற்று வயிற்றைக் கழுவும் காமர் கூடத்
தமிழர் என்று தானே தன்னைக் காட்டுகின்றார்
தமிழைக் காட்டிக் கொடுக்கும் தயவால் வாழும் வாழ்வு
தாரம் தன்னைத் தாயை தாசியாக்கிக் காசு
அமிழ்தாம் என்று உழைக்கும் அவலம் தன்னிற் கீழாம்
ஆகவே தான் சொல்வீர் தமிழர் என்போர் யாவர்?

நாயை வீட்டில் வளர்த்தால் நன்றியாதல் சிறக்கும்
நாலு வாழை நட்டால் நல்ல குலைகள் தள்ளும்
பேயைக் கூட்டிவந்து பெரிய தலைமை கொடுத்தல்
பேதலிக்கச் செய்யும் பெரிதும் இன்னல் ஈட்டும்
காயிற் பார்க்கத் தெரியும் கனிந்தால் என்ன செய்யும்
வாயின் இனிப்பும் புளிப்பும் மணமே காட்டி நிற்கும்
தாயைக் கொல்லும் தருக்கன் தகவில் ஆனந்த சங்கரி
தமிழன் தானோ சொல்வீர் தாயார் செய்த பாவம்.

தமிழர் என்போர் யாவர் தயவாய் எனக்குச் சொல்லும்
தமிழரா நாம் எல்லோரும் தமிழர் என்ற பெயரில்(த்)
தமிழைப் பழிக்கும் கூட்டம் தமிழால்(த்) தேடும் தேட்டம்
தமிழைப் பேசக் கூச்சம் தமிழர் என்றாற் கூச்சம்
தமிழைப் படிக்கக் கூச்சம் தமிழில் எழுதக் கூச்சம்
தமிழர் எதிரில் கண்டால்(த்) தள்ளி நிற்போம் கூச்சம்
தமிழின் கலாசாரம் தகவாய்க் காட்டக் கூச்சம்
தமிழர் முகத்தை மாற்றத் தணியாத பேர் ஏக்கம்.

எதிலும் வெள்ளைக்காரன் ஏற்றம் எமக்கு என்றும்
எதனைச் செய்திட்டாலும் என்ன அவனும் நினைப்பான்
எதிலும் அவன் அங்கீகாரம் இல்லையென்றால்(த்) தாழ்வு
தன்னை உணரா நிலையில்(த்) தாழ்வு கொண்ட கூட்டம்
மதிலின் உள்ளே நின்று மனைவி மக்களோடு
தமிழைப் பேசக் கூடத் தாவித் தடுக்கும் கூச்சம்
பதிலும் பேசோம் தமிழில் பண்ணும் தொலைபேசியிலும்
பாவப்பட்ட கூட்டம் பாரிற் புலமே பெயர்ந்தோம்.



படிப்பகம்

padippakam



தமிழர் என்போர் யாவர் தருவாய் பதிலே உறவே
தமிழை விற்போர் நாமே தமிழாற் பிழைப்போர் நாமே
தமிழர் என்றால் வேட்டி சேலை உடுப்பார் ஆமோ
தமிழை யாரும் பழித்தால்(த்) தாளம் போட்டுக் கேட்போம்
தமிழர் தம்மை அடித்தால்(த்) தள்ளி நின்று சிரிப்போம்
தமிழிற் பேசிப்பாரும் தருவோம் பதில் ஆங்கிலத்தில்
தமிழர் தொன்மை இகழ்ந்து தகுதி கொள்வோம் ஆய்வில்
தமிழிற் பெயரும் வையோம் தமிழர் என்போர் யாவர்?

எங்களோடு தமிழும் இறந்துவிடுமே இங்கு
இருந்து பாரும் நாங்கள் இறந்தபிறகு யாவர்
தங்கள் வாயாலிங்கு தமிழைப் பேசி நிற்பார்
தாயைக் கூடத் தள்ளித் தனித்து வைக்கும் நாட்டில்
நாங்கள் வாழுகின்றோம் நன்மை வேண்டுமென்றால்
நல்ல சட்டமொன்று நாளை வந்தாற் பிழைக்கும்
இங்கு பல்கலைக் கழகம் ஏற்கத் தாயின் மொழியில்
இனிமேற் சித்தி பெற்று இருக்க வேண்டுமென்றால்...

பொங்கி நிற்பார் தமிழர் புறமும் அறமும் மேலாய்ப்
போட்டிபோட்டுப் படித்துப் பொழுது எல்லாம் விழித்துப்
பொங்கி நூறு புள்ளி பெறுவார் தாமே அள்ளி
எங்கு செய்வார் இதனை எதற்கு இங்கு செய்வார்
மங்கித் தமிழும் சாகும் மண்ணில் ஈழம் ஒன்றே
மதித்து வாழும் தமிழை மலரும் நாட்டில் என்றும்
அங்கு என்னை மீண்டும் அமைப்பான் இறைவன் பிறக்க
அதுவே என்றன் ஆசை அதுவே உயிரின் தாகம்!

பணத்தைக் குவிக்கும் என்றாற் பண்பைக் கூட இழப்போம்
பகட்டை அளிக்கும் என்றாற் பாசம் தன்னைத் தவிர்ப்போம்
குணத்தைக் குப்பை என்போம் குவியும் பணமே என்றால்
குள்ளவேலை எல்லாம் கள்ளமாகச் செய்வோம்
இனத்தைக் காட்டிக் கொடுப்போம் இன்னலெம் மவர்க்கேசெய்வோம்
ஈழம் எதற்கு என்போம் இதுவே முற்போக்கு என்போம்
மனத்தைத் திறந்து பேசி மண்ணில்(த்) தமிழர் காணும்
மரணக் கயிற்றைக் கண்டு மலைத்த கவிதை இதுவே!



படிப்பகம்

padippakam



*தமிழர் தமக்கோர் தாழ்வு தமிழால் வந்தது அல்லத்*
*தரணி தன்னில் அழிவு தமிழர் தம்மால்(த்) தமக்கே*
*தமிழர் என்போர் யாவர் தமிழால் இணையாவிட்டால்*
*தமிழை மாற்றார் வந்து கழுவிலேற்றும் போதும்*
*தமிழால் இணையாவிட்டால் தமிழர் அல்ல நாமே*
*தமிழர் தமது மாற்றார் தயவில் வாழ்ந்து நின்றால்(த்)*
*தமிழர் என்போர் யாரும் தமிழர் அல்ல இங்கே*
*தமிழர் இங்கு யாவர்? தருவாய் பதிலென் உறவே!*

23.04.2003



படிப்பகம்

padippakam


# ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? இதை, இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?

சுதுமலை மண்ணிலே பிறந்தவன் - அன்றே
சுந்தரத் தமிழை மணந்தவன்
விதியென மண்ணையே துறந்தவன் - இன்று
விழுந்தது இங்கிலாந்து மண்மீது.

நிதமொரு கணமுமே தமிழீழம் - எம்
நினைவினில் நின்றும் பிரியாமல்
இதமொரு கவிதை இன்றிருக்கும் - தமிழ்
ஈழத்துக் கவி இராஜ மனோகரன்.

ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ – இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதை – இன்று
இன்பமெனப் பலர் கொள்ளுகையில்...

என்னவித் தலைப்பினைத் தந்திட்டாய் – சில
ஏற்புடைத் திருத்தங்கள் செய்யாமல்
பன்னெடுங் காலத்தின் முன்னர் எம் – கவி
பாரதி தாசன் அன்று பாடுகையில்...

தள்ளிட மக்களைக் குழிபறிக்க – அன்று
தரங்கெட்டுச் சிலர் மட்டும் இருந்திட்டார்
அள்ளியே இனத்திற்கே கொள்ளி வைக்க – இன்று
அகிலத்தில் நாடுகள் பல இருக்க...

என்னவித் தலைப்பினைத் தந்திட்டாய் – சில
ஏற்புடைத் திருத்தங்கள் செய்யாமல்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ – இதை
இன்பமெனப் பலர் கொள்ளுவதோ.


படிப்பகம்

padippakam


ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதே – இன்று
இயல்பு நிலையிங்கு நீ அறிவாய்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதே – இன்று
இவர் நா கரிகம் நீ அறிவாய்.

ஏழ்மையிற் சிலரென்றும் இருந்தாலே – வாழ்வு
எனக்கு ஏற்றமாய் இருந்து விடும்
சூழ்கையில் ஏந்திச் சிலர் குடித்தாலே – என்
குடும்பம் பன்னீரிற் குளித்தெழும்பும்.

ஏழ்மையில் மக்களைத் தள்ளினாலே – இன்று
இன்பம் எனக்கென்று ஆகிவிடும்
ஏழ்மைக்கு மேதினம் என்றுமுண்டு – சென்று
ஏதேனும் ஊர்வலம் நடத்திவிடும்.

அன்பான உறவே நானொன்று சொல்வேன் – இந்த
அகிலத்தில் எல்லோரும் இதுவே சொல்வர்
பண்பான பேரிங்கு மிகச்சிலரே – மனிதம்
பாரிலே தப்பியது இச்சிலரால்.

தாழ்வுக்கு வழிசெய்யப் பலருண்டு – இங்கு
தாழ்ந்தோரைத் தூக்கிடச் சிலரே உண்டு
வாழ்வுக்குக் குழிவெட்டப் பலருண்டு – இங்கு
வாழ்க்கையை உயர்த்திடச் சிலரே உண்டு.

உலகத்திற் கிந்நிலை பொது ஆகும் – நாம்
உலகத்தில் நாடில்லா நிலை பாரும்
கலகத்திற் பிறக்குமே நீதியென்பார் – எமைக்
கள்ளத்தால் அழித்திடப் பலருமுண்டு.

நானூறு ஆண்டுகள் நாம் நலிந்தோம் – சொந்த
நாட்டி வடிமையாய் நாம் வீழ்ந்தோம்
வானேறி விட்ட எம் தலைவர்கள் – அன்று
வல்லமை குன்றி இருந்ததனால்.



படிப்பகம்

padippakam


நாமேற வழியவர் காட்டவில்லைத் – தாம்
நல்லவ ரென்றன்று பெயரெடுத்தார்
தாமேறிப் பட்டங்கள் பலபெற்றுத் – தம்
தாயினை ஏழ்மையில் தள்ளிவிட்டார்.

ஏழ்மையில் எம்மையே தள்ளிவிட்டு – அவர்
எமனுடை உலகம் சென்று விட்டார்
தாழ்விலே வாழ்வினைக் கண்டுநின்று – பிறர்
தயவிலே வாழநாம் பழகிவிட்டோம்.

வாழ்விலே நிமிர நாம் முனைகையிலே – எம்
வல்லவர் இளையவர் வளர்கையிலே
தாழ்விலே எம்மையே தள்ளுதற்கு – இன்று
தரணியில் எத்தனை நாடுகளே.

நீசராய் என்றென்றும் இந்தியாவே – தம்
நிலத்தினைச் சூழவே அழிவு செய்தார்
பாசமாய் நடித்தன்று உணவுதந்து – பின்பு
பண்ணிய அழிவுகள் கொஞ்சமாமோ.

காசமாய் எம்முள்ளே கலந்து நின்றார் – அவர்
கபடத்தைப் பலருமன் றறியமாட்டார்
பூசியே திருநீறு சைவர் போலே – மாலை
புழுதியிற் புரளுவார் வெறி மிகுந்து.

நாசமே எமக்குச் செய்து வரும் – எம்
நலங்களை என்றும் சிதைத்துவரும்
தேசமே இந்தியா அதனரசு – இதைச்
செப்பி வந்துள்ளேன் பல வாண்டு.

முப்பது ஆண்டுகள் இதை உணர்ந்து – நான்
முன்னரும் பின்னரும் எடுத்துரைக்கத்
தப்பது என்றும்மிற் பல பேரும் – என்னைச்
சாடினீர் சிலரதை ஏற்று நின்றீர்.


படிப்பகம்

padippakam


கூட்டணித் தலைமையைப் பிரித்துநின்றார் – பின்
 கொண்ட இயக்கங்கள் பிரித்து வைத்தார்
வேட்டுவத் தொழிலையே இன்று மட்டும் – செய்து
 வேடத்திற் புனிதம் காத்து நிற்பார்.

வருண பேதங்கள் கொண்டுவந்து – தமிழர்
 வாழ்வை அழித்த வட இந்தியர்கள்
தருண மென்றெழுந்த போதெல்லாம் – எம்
 தாழ்வையே தானமாய்க் கொண்டு வந்தார்.

சாதி என்றன்று கொண்டு வந்து – தமிழ்ச்
 சாதியைப் பலவாய்க் கூறு மிட்டார்
வேத மந்திரம் என்று சொல்லித் – தமிழை
 வேண்டிய மட்டும் தள்ளி வைத்தார்.

ஆதித் தமிழினை அழித்து நின்றார் – அன்பு
 ஆளும் நெறியினைக் கலப்புச் செய்தார்
பாதித் தமிழரை மாற்றி விட்டார் – அதில்
 மீதி யுள்ளோரைக் கழு வேற்றுகின்றார்.

ஆட்டத்தை நாம் இன்னும் முடிக்கவில்லை – எம்
 அழிவுக்கு விளைவொன்றும் காணவில்லைத்
தேட்டத்தை அழிப்பதற்கு என்று இன்று – இவர்
 சிரிப்பாகும் கண்காணிப் பென்று நின்றால்.

சாத்தானும் வேதத்தை ஓதி நிற்கும் – ஏன்
 சாத்திரம் பிணம் தின்னச் சொல்லி நிற்கும்
கோத்திரம் பார்க்கின்ற இந்தியாவும் – எம்மைக்
 கொன்று போடலாமென் றெண்ணிவிட்டால்...

ஆத்திரம் ஒருபக்கம் உள்ளதுதான் – அது
 அணைத் திடாதவர் ஆவியையே
பாத்திரம் அறிந்து நாம் இயங்க வேண்டும் – எம்
 படைகள் பலவித மாக்க வேண்டும்.


படிப்பகம்

வேங்கைகள் மட்டுந்தான் படையல்ல – இன்று
வெளியுள்ள நாடுகள் இணைந்த பின்னர்
நாங்களும் போரிலே இணைய வேண்டும் – அது
நா செயல் எழுத்தென விரிய வேண்டும்.

இந்தியாவுக்கு நாம் உரைக்க வேண்டும் – வேறு
இங்குள்ள அரசுகளுக் கோத வேண்டும்
மந்தையாய் உலகையே மேய்க்க எண்ணும் – பெரிய
மனிதராய்த் தம்மைத் தாம் எண்ணிவாழும்.

அமெரிக்காவிற்கு நாம் எழுத வேண்டும் – அவர்
அனலிடை இட்ட நம் ஐ நா மன்று
தமக்கென இன்றொரு சக்தியின்றி – அவர்
தத்தி வாழ்வதாய்த்தான் இருந்தாலும்.

எதுநிகழ் வங்கு உண்மையென – நன்கு
எடுத்து உரைத்திட வேண்டும் உண்மை
இதுவெனக் கூறுதல் எம் கடமை – இதை
இங்குள்ள எம்மவர் இயற்றவேண்டும்.

வெந்த நம் புண்ணிலே வேல் எறிவார் – அவர்
விளைத்துப் போரிலே கொல்ல நிற்பார்
தந்து வெங்கொடுமை பலவுமிங்கு – அவர்
தருணம்பார்த் தெம்மைத் தாக்கி நிற்பார்.

தந்தை செல்வாவாற் சூல்கொண்ட – நல்ல
தமிழீழம் தன்னையே தான்சுமந்து
முந்தை நாம் செய்த புண்ணியத்தால் – வந்து
முளைத்த தலைவன் பிரபாகரன்.

சிந்தை செயல்வழி தான்சுமந்து – பெரு
சிறப்புள்ள வீரச் செயல்புரிந்து
குந்தியிருந்து பெற முனைகையிலே – இன்று
கோள்கள் காணவே பலர் வந்தார்.



படிப்பகம்

padippakam


விந்தை மிகுந்த உலகம் தான் – பாரும்
விடுதலை வேண்டாத நாடு சென்று
மந்தை நெறிசென்ற ஓநாயாய் – மேற்கு
மனிதம் அழித்துமே குதறிடுவார்.

எங்கு யாரேனும் எம்மைப்போல் – பெரும்
இழப்புகளைக் கண் டழிந்தபின்னும்
சென்று விடுதலை காணநிற்க – அதைச்
செல்லாத நீதியென் றிகழ்ந்திடுவார்.

இரட்டை நாக்குப் பல அரசுக்கு – அவர்
ஈட்டும் வெற்றியவ ரழிவுக்கு நாம்
சிரட்டை ஏந்திய கையர்கள் தாம் – ஆனாற்
சிந்தையில் சீரான எண்ணமுண்டு.

வெந்த மனமையா நாவரசா – இன்று
வெண்ணெய் திரண்டு வருகையிலே
நிந்தை செய்துபின் நீட்டுகின்றார் – தம்
நீசத் தனத்தையே காட்டுகின்றார்.

பிள்ளை வயிற்றிலே நிறைமாதம் – கொண்டு
பெரிதும் தவித்திடும் பெண்ணழகைத்
தள்ளி விழுத்தியே வல்லுறவில் – இன்று
தகிக்க எண்ணிடும் பேய்களிவர்.

கள்ளமில்லாத் தமிழ்க் கவிஞனிவன்– என்
காதல்(த்) தமிழ் மீது ஆணை என்பேன்
எல்லோரும் ஒன்றென ஏத்துகின்ற – பொது
இறைவன் மலர்த்தாள் மீதாணை.

இந்திய நாடொரு நூறு நாடாய் – வெகு
இலகுவில் விரைவிலே உடையுமிங்கு
சிந்தையில் இருத்தியே வைத்திடுவீர் – நான்
சென்றபின் னாகுதல் இது நிகழும்.


படிப்பகம்

padippakam


யாரையும் அழிக்க நாம் வரவில்லை – என்றும்
யார்மீதும் வல்லுற வாக்கவில்லை
பாரையும் ஆள நாம் எண்ணவில்லை – எம்
பாகத்தை மட்டுமே வேண்டுமென்றோம்.

நீரையும் காற்றையும் உள்ளெடுத்து – எம்
நிலத்தைக் காக்கின்றார் வேங்கைகளே
வேரையும் விழுதையும் பிரித்துவிடப் – பலர்
வேண்டிய மட்டும் முயலுகின்றார்.

ஏழ்மையில் மக்களாய்ச் சிங்களவர் – தம்
இயலாத தன்மையால் வாடுகின்றார்
வாழ்வை அவருமே இழந்துநின்றார் – தம்
வாக்கினால் ஆய்க்கினை பெற்று நின்றார்.

ஏழ்மையில் எம்மையார் தள்ளுவது – நாம்
இவ்வளவு பேருமே இங்கிருக்க
வாழ்விலே சுகத்தை நாம் பெற்றதென்றால் – அங்கு
வருந்தும் தொப்பூழ்க் கொடி களாலன்றோ.

ஏழ்மையில் எம்மையார் தள்ளுவது – நாம்
எல்லோரும் எழுந்தொன்றாய் நின்றுவிட்டால்
வாழ்வையே நம்மீழம் கண்டுநின்று – எம்
வரலாற்றை மீண்டு மெழுதிடுவோம்!

30.04.2003


படிப்பகம்

padippakam


# குமுதினிப் படுகொலை

சுதுமலை பிறந்த கவியிவன் இராஜ
மனோகரன் என்ற பெயரினை யுடையோன்
இதுவரை வாழ்வு இங்கி லாந்திலே
இன்தமிழீழம் தன்னையே நீத்துப்
பதமவள் பாதம் பணிந்துமே வடித்த
பாவரி தம்மைப் படித்திட முன்னர்
இதமுறு வானலை இன்செவி **நுழைக்கும்**
இனியவென் உறவே என் தமிழ் வணக்கம்.

*இருப்பது உடலோ இங்கி லாந்திலே*
*உழல்வது உள்ளம் ஒண்தமி ழீழம்*
*தரிப்பது வாழ்வு தணிவதும் இங்கு*
*தாய்நிலம் காணும் தவிப்பது கண்டு*
*எரிப்பது நினைவு என்றுமே எவர்க்கும்*
*எத்தராய் அரசார் ஏவிடும் படைகள்*
*உரிப்பது மானம் உவப்பது கயமை*
*உன்மத்தர் செயல்கள் ஊழியின் கூத்து.*

*ஐம்பத்தெட்டிலே தொடங்கிய படுகொலை*
*அது மே இருபத்தி இரண்டிலே தானே*
*ஐம்பத்தெட்டிலே இருந்துமே அரசுடை*
*அநாகரிகம் அழிவோடு இணைந்தது*
*ஐம்பத்தெட்டின் முன்னரே அரசுகள்*
*ஆக்கிய செய்கையே அன்று விளைந்தது*
*ஐம்பத்தெட்டுடை அரசினர் இல்லை*
*அரசிலே மட்டும் மாற்றமே உண்டா?*

*எத்தனை படுகொலை எத்தனை சிறு கொலை*
*எத்தனை உடலம் இன்னுமே இல்லை*
*எத்தனை பாலியல் வன்முறை இடு கொலை*
*எவருக்குந் தெரியாத எவ்வளவு இன்னல்*
*அத்தனை கொலையிலும் அழிந்தது தமிழினம்*
*அரசுடை வெறிகொள் அவலங்கள் எத்தனை*
*முத்தமிழ் அழிக்கும் மூடரின் தந்திரம்*
*முடியுமா தமிழே முக்கண்ணன் மொழியே.*


படிப்பகம்

padippakam



எத்தனை எதிரிகள் எங்களின் நலத்தை
இன்னல்கள் இயற்றி இப்புவி அழிக்கப்
புத்தரை வணங்கிப் புனிதத்தைப் பேணும்
அத்தரை ஆளும் அதிகார வர்க்கம்
உத்தம நாடென உலகையே ஏய்த்திடும்
உன்மத்தம் நிறைந்த உளவாளி படைத்த
மொத்தமாய் எம்மை முனிந்திடும் இந்திய
முதலா ளித்துவ நடுவண் அரசு.

இத்தனை பகைவரும் எதிர்ப்பது யாரை
ஈழம் என்கின்ற எமதரு நாட்டை
மொத்தமாய் நின்று எதிர்ப்பவர் கோடி
மோகனம் பாடிட முனைபவர் கோடி
அத்தனை பகையையும் எதிர்த்திட எம்மை
அணைத்திடும் வேங்கைகள் ஆறேழாயிரம்
அத்தனை எதிரியோடு ஆயுதம் ஏந்துவர்
அடுத்துமே எம்மைக் காட்டியே கொடுக்கும்...

ஐந்தாம் படையினர் அவர் கழிவு எனவே
அவனியை விட்டு அகன்றிட வேண்டும்
செந்தமி ழன்னை திருமுடி தன்னைச்
சூடிய பின்னும் சூதுசெய் படையே
நொந்தோம் இறுதியில் நோர்வே வந்தும்
நோய்பெறு மனத்தோர் சீர் பெற வில்லைத்
தந்தோம் நாடெனத் தருவரோ யாரும்
தந்தாலும் இந்தியா தடுக்குமே என்றும்.

செத்தவர் இதுவரை பதினெண் ணாயிரம்
சிறுத்தைகள் தமிழ்பெறு சீர் மா வீரர்
மெத்தவும் எம்முடை மண்ணையே மதித்த
மேதகு தலைவனின் சாதனை செய்தவர்
வித்துமாய் ஆகியோர் விளைந்த போர்களால்
மொத்தமாய் இதுவரை மோதாமல் நின்று
எத்தர்கள் ஏவிய இனவழிப்பு களால்
எம்மவர் அழிந்தவர் எழுபதி னாயிரம்.



படிப்பகம்

எத்தனை உடல்கள் எம்முடை மண்ணுள்
எதிரியின் கோழை இயக்கத்தில் அழிந்து
எத்தனை மலக்குழி எத்தனை கிடங்குகள்
எத்தனை எருவாய் எத்தனை கருவில்
எத்தனை செம்மணி எத்தனை சேற்றிலே
எத்தனை எலும்புகள் இனிவர வுள்ளன
எத்தனை பெண்கள் கத்திய கதறல்
எல்லையைக் கடந்து வான்வெளி வல்லையில்.

செய்தவர் சிங்களர் இந்தியப் படைகள்
செத்தவர் எம்முடைச் செந்தமிழ் உடல்கள்
எய்தவர் அரசார் எதிரியாய் ஆனோர்
ஏழ்மையே அறிவும் எழிலுறு நினைவும்
கொய்தவர் வாழ்வைக் குடித்திடும் வரையும்
குவலயந் தன்னில்(த்) தமிழ்நிலம் பாழே
மெய்தவம் பூண்ட ஞானிகள் கூட
மெய்யதே என்றிக் கருத்தினை ஏற்பார்.

எழுபத்தேழிலே பாரிய படுகொலை
எழுந்தன ரிளைஞர் ஈழத்தி லொன்றாய்
எழுபத்தெட்டிலே மே பத்தொன்பது
ஏற்றினர் சட்டம் புலி தடை என்று
எழுபத்தெட்டிலே ஏற்றிய சட்டம்
எழுந்திட வைத்தது ஏறிட வைத்தது
எழுபதினாயிரம் இறந்தது போதும்
எழுகதிரென்ன எழுந்திடும் ஈழம்.

நெடுந் தீவிருந்து குறி காட்டுவான் வரையே
நெடுநாட் சேவை குமுதினிப் படகு
கடுங் காற்றென்ன கடலலை என்ன
காவியே மக்களைக் கரை சேர்த்திடுமே
கொடுங் கூற்றுவனாய்க் கடலலை என்றும்
கொல்லவே இல்லை இவ்வளவு பேரை
கொடுங் கோலரசின் கூலிப் படையினர்
குதறினார் தமிழர் முப்பதின் மேலாய்.



படிப்பகம்

எண்பத் தைந்திலே மே பதினைந்து
　　எழுந்துமே மக்கள் நடந்தனர் துறையே
மண்விட் டகன்று விடுவதை அறியார்
　　மண்தனைக் குறி காட்டுவான் தொடவே
எண்வித் திட்டுமே ஏறினர் படகு
　　எமன் வடிவதுவாய் எத்தர்கள் வருவார்
என்பதை அறியார் மன்பதை உற்றார்
　　எழுந்திட்ட அலையில் நிறைந்தது குருதி.

கடலிலே செல்வதே கரைகாண் படலம்
　　காமுகர் தாக்கினால் எதுதான் மீதம்
உடலினை வெட்டினர் உத்தம புத்தரின்
　　திடமுறு தம்ம பதந்தனைப் பணிவோர்
படகிலே இருந்தவர் பாவையர் பச்சிளம்
　　பால்மணம் மாறாப் பைந்தமிழ்க் குருத்துகள்
முடமென வயதை அடைந்தவர் ஆண்கள்
　　மூப்பிலா வகையில் இளைத்தவரோடே.

திடுமெனப் புகுந்தனர் திகைப்பிலே நின்ற
　　தீந்தமிழ் மக்களைத் தீட்டிய வாள்களால்
உடலினைக் கூறாய் வெட்டினர் நாட்டை
　　உரமென வெட்ட உறுதுணை ஆகினர்
படகிலே யாரும் புலியென இல்லைப்
　　படையினர் அறிந்தே பாய்ந்தனர் துணிவாய்
உடலினை வெட்டி உயிர்போன பின்னும்
　　உடற்பசி யாற்றினர் உன்மத்தர் அன்று.

குமுதினிப் படகு கொண்ட பேரழிவு
　　கொலைவெறி அரசின் இனவெறி ஆட்டம்
அமுதமாம் தமிழை அழகுறப் பேசும்
　　ஆளெலாம் இறத்தல் அவனியில் நடக்க
இனியொரு ஊழி நடந்திட வேண்டும்
　　இல்லை அந்நிலை இங்கொரு படுகொலை
எமதுடைத் தலைமை இவ்வளவும் ஒதுக்கி
　　எவர்க்குமே இனியர் ஆவோமே என்று.



படிப்பகம்

padippakam


படுகொலை வேண்டாம் பாதகம் வேண்டாம்
பட்ட துயரங்கள் பாரிலே போதும்
படுகொலை இறப்புத் தமிழுடை மக்கள்
பழியுறு போரில் அரசுடை மக்கள்
விடுதலை வேண்டி விடிவினைத் தேடி
விரைகு வோமே பேச்சிலே என்றால்
சுடுதலை மட்டும் தெரிந்தவர் அரசு
சூழ்ச்சியே பின்னி நாட்டினைக் குழப்பும்.

குமுதினிப் படகு தமிழர்தம் வாழ்வு
குமுதினிப் படுகொலை தமிழர்தம் அழிவு
குமுதினிப் படகு தமிழரின் ஏற்றம்
குமுதினிப் படுகொலை அரசினர் இழிவு
குமுதினிப் படகிலே இறந்தவர் தமக்குக்
கூப்பிய கரத்தின் அஞ்சலி தொடுத்து
அமுதுறு தமிழில் அழிவினைச் சொல்ல
ஆக்கிய கவிதை அடையுமே நிறைவு!

21.05.2003



படிப்பகம்

padippakam


# பொது நூலகப் புது நூலகம்

சிறந்து கவிதை பல சீராய் அமைத் திங்கு
சிறக்க வானலையில்(த்) தந்திடுவன்
பிறந்து சுதுமலையிற் பெயர்ந்து தமிழீழம்
பிதற்றி நிற்குமிடம் இங்கிலாந்து
பறந்து வாழ்வமைத்துப் பதுங்கும் கவிஞனிவன்
பாவை இறுக்கும் இராஜ மனோகரன்
திறந்து மனம் சரிந்து தீய நிலை கடிந்து
தீட்டுந் தமிழ் வணக்கம் என்னுறவே.

பிறந்து தமிழீழம் பிரிந்து மண்போரைப்
பிழைத்து வாழ்வதிலே பலபேரும்
மறந்து தமிழ் அணங்கை மகிழ்ந்து மதுமங்கை
மனதில் மயங்கமொடு சிலர் தாழ
இறந்து படும் வரையும் இளமைத்தமிழ் அணங்கை
இமைக்கும் பொழுதேனும் மறவாது
துறந்து மண் வரினும் துறக்க மனம் வருமோ
தூயதமிழீழ மண் நினைவை.

பொதுவாய்த் தமிழரெலாம் பொழுதும் கண்ணெனவே
போற்று கின்ற கல்வி பெற்றிடவே
கதியாய் இருந்ததன்று கல்வி தரும் இடமாம்
கலைகள் சொல்லிநிற்கும் நூலகமாம்
பதிவாய் இருந்தவையும் பலவாய் ஆய்ந்தவையும்
பலநூறாயிரமாய் இருந்தனவே
விதியாய் வந்ததொரு விரைந்த காலனென
வீணர் இட்டனரே பெருங்கொள்ளி.

எரிந்து நின்றவையோ எளிய நூல்கள் என்றால்
எடுத்து விட முடியும் எப்போதும்
எரிந்து அழிந்தவையோ ஏடாய் ஈழத்தின்
எழுச்சி வரலாறு சொல்லியவை
விரிந்த சுவாலைகளில் விளைந்த புகை எமது
விரிந்த நுண்மாணின் நுழைபுலமாம்
சரிந்த கட்டிடத்திற் சரிந்து நின்றதுவோ
தம்மபதம் சொன்ன புத்தர் மதம்.


படிப்பகம்

padippakam


சதியாய் அவர் செய்தார் சகுனி பாரதத்திற்
சாவாய் வந்த காமினி திசநாயக்கா
எதுவும் இல்லையென எரித்த கௌரவர்கள்
ஏவல் செய் அரச படையினரே
விதியை நோவதுவா வீணர் எரித்துநின்ற
சதியை நோவதுவா அறியேனே
மதியை அழிக்கவென வந்து நூலகத்தை
மண்ணில் எரித்து எம் மனம் எரித்தார்.

கல்வித் தகைமையினைக் காலங்காலமாகக்
கன்னித் தமிழர்களே பெற்றதனால்
அள்ளிக் கொள்ளியிட அரசே முனைந்ததென்றால்
அவரின் மதியினுடை நிலை பாரும்
கொள்ளி அவர் வைத்தார் கொண்ட நூல்களெலாம்
கொள்ளை போனதுவே அனலூடே
வெள்ளம் கரைத்துவிட்ட வெல்லம் போலாகி
விரைந்து அழிந்தனவே **புகையூடே.**

எல்லை இலாத நூல் எல்லாம் எரிந்துவிட
ஏங்கித் தவித்து நின்ற தமிழருக்குத்
தொல்லை நீக்குதற்குத் தொலைத்த நூலகத்தைத்
தொகுத்தே அளித்திடுவோம் என்றுவிட்டுக்
கள்ளம் மிக்கவராய்க் கரியை மூடிநிற்கக்
களியாய்க் குழைத்த சாந்தைப் பூசிவிட்டு
உள்ளே உவகையிலா உலுத்தர் தம்முடைய
உள்ளம் போலேயொரு நிலை செய்து...

வெள்ளை மனத்துச்சிலர் விரும்பி அளித்திடவே
விரைந்து வந்த நூல்கள் அடுக்கி விட்டு
நல்ல நாளுமென்று நாலு பேர்களுடன்
நலங்கள் அழிக்கவெனத் திறக்க வந்தார்
இல்லை யென்று கை ஏந்தி வாழுகின்ற
இயலாதவரா நாம் இரந்துநிற்க
கள்ளம் நீக்குதற்குக் கடிதே முயல்வீரேற்
கட்டும் நூலகத்தைப் புதிதாக.



படிப்பகம்

padippakam


புதுக்க நல்லதொரு பொதுவாம் நூலகத்தைப்
பூமி ஆள்பவர்கள் இயற்ற வேண்டிற்
சதிக்கு அழிந்ததற்குச் சாந்து பூசுவதும்
சரிவு நிமிர்த்துவதுஞ் சரியாமோ
புதுக்க இன்னுமொரு பொலிந்த கட்டிடத்தைப்
பொன்னைச் செலவளித்து அங்கெழுப்பிப்
பதுக்கி வைத்திராது பழைய பகைமையினைப்
பாற விழுத்துவதே தகுமன்றோ.

நடந்த தெல்லாம் மறந்து நாமும் ஏற்றிடலாம்
நல்ல உள்ளங்கள் இவரென்று
உடந்தை இருந்தவர்கள் உள்ளம் சிறுத்தவர்கள்
உலகின் உலுத்தர்கள் ஒன்றுகூடி
முடத்தை நிமிர்த்தியொரு முண்டு கொடுத்துவிட்டு
முளைத்த புதிய மரம் இது என்றால்
நடத்தை கெட்டுவிட்ட நாயா தமிழரினம்
நாலும் இழந்தவரா கையேந்த.

பிரமன் படைப்பினிலே பெரிதும் ஏமாறப்
பிறந்த இனமென்று எண்ணமாமோ
தரமொன் றில்லாத சாதி தமிழரெனத்
தரணி தனிலவர்க்கு அறிவாமோ
கரங்கள் இணைவதிலே காணில் ஒற்றுமையே
காண்போம் வெற்றி நாம் எதிலுமே
தரங்கள் பிரித்துநிற்கும் சாதி தனை அழித்துத்
தமிழர் யாவருமே சமமென்றால்.

வரங்கள் வேண்டியிங்கு வாசல் தனிலந்த
வானத்து இறைவனையும் வேண்ட வேண்டாம்
சரங்கள் தொடுத்திங்கு தாவி விழுந்தெழுந்து
சந்தம் பலவுமிங்கு பாடவேண்டாம்
கரங்கள் இணைத்திங்கு கன்னித் தமிழரினம்
காசினியில் ஒன்று ஆகிவிடில்
உரங்கொள் தமிழீழம் ஒளிரும் இன்றாகி
உவகை எல்லாமே எமக்காகும்!

04.06.2003


படிப்பகம்

padippakam




படிப்பகம்

padippakam



படிப்பகம்

padippakam




படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# வானொலிக் கவிதைகள்
## கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

வட தமிழீழத்திலுள்ள சுதுமலை என்னும் ஊரிலே பரராஜசிங்கம் என எல்லோராலும் அறியப்பெற்ற திரு சதாசிவம் கந்தையா அவர்களுக்கும் அவரது துணைவியார் மனோன்மணி அவர்களுக்கும் மூத்த மகனாகப் பிறந்தவரே இந்நூலின் ஆசிரியரான திரு கந்தையா இராஜமனோகரன் அவர்கள்.

20.06.1998 இலிருந்து 03.06.2003 வரையான காலப்பகுதியிலே இலண்டன் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஒலிபரப்பின் பிரசவகளம் என்னும் கவிதை நிகழ்ச்சியிலே கவிஞர் யாத்தவற்றின் தொகுப்பு இந்நூல்.

ஐ.பி.சி. விஞ்ஞான பீடத்தின் பொறுப்பாளர், பொறியியலாளர், விஞ்ஞானி. ஆன்மிக நெறியாளன், சோதிடக் கணிப்பாளன், கவிஞன், எழுத்தாளன், நாடகன், ... அடையாளப் பட்டியலை நீட்டி எழுதலாம், மனித நேய மனிதன் என்று சுருக்கமாகக் கூறலாம்.

- பணிப்பாளர், அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐபிசி, புலம் சஞ்சிகை - தை, மாசி 1999.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வாலிப மீசை முறுகிக் கறுக்கு முன்பே பல்கலைகழகத்தில் உங்கள் சிந்தனை மின்னல்களைத் திரட்டியிருக்கிறீர்கள். சிறந்த கவிஞனுக்குத் தேசத்தின் எதிர்காலம் திரையில்(த்) தோன்றுகிறது.

- புலவர்மணி, மதுரகவி இளவாளை அமுது, இலண்டன்.

உள்ளத்தில் தமிழின் பால் நீங்காக் காதல் தமிழர் உலகில் முன்னேறிச் சிறக்கத் தெள்ளிய நல்விழைவு எஞ்ஞான்றும் இராசமனோகரார்க்கு...

- தமிழ்மணி அரங்க முருகையன், இலண்டன்.

தமிழும் சமயமும் அவர்தம் இரு கண்கள். அந்த இருகண்களும் கூர்மையான பார்வை கொண்டவை.

- பண்டிதர் க.வேலுப்பிள்ளை, நாவற்குழி, தமிழீழம்.

நரம்புகள் இருந்தும் கவி வரம்புக்குள் நின்று உரமேற்றும் மரபுக்கவி உரைக்கும் திரு இராஜமனோகரன் ஓர் வழியிலே ஒற்றுமையாய்த் தமிழன் விழிக்கவேண்டுமெனும் விருப்புடையவர்.

- செல்லத்துரை நாவரசன், அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலண்டன்.

வாழ்நாளெல்லாம் தமிழ், தமிழ்மண், தமிழினம் என வாழும் அவரைப் பெற்றவள் தாய், வளர்த்தவள் தமிழ், வலிமிக்க அவர் குரலுக்கு இலக்கணமாய் - புலி நிற்கக்கண்டு - களிமிக்க நெஞ்சினராய்க் கூத்திடும் அவர் தமிழ் வரிகள் - ஒளிமிக்கவை.

- உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், சென்னை, தமிழ்நாடு.

ISBN
0 9545296 2 6

படிப்பகம்